மாண்புமிகு அமைச்சர், சட்டத்தரணி
அல்ஹாஜ் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில், L.L.B. (M.P)
அவர்களுக்கான

# பாராட்டு விழா சிறப்பு மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாண்புமிகு அமைச்சர், சட்டத்தரணி
அல்ஹாஜ் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில், LL.B., M.P.,
அவர்களுக்கான

# பாராட்டு விழா
# சிறப்பு மலர்

சம்மாந்துறைச் சமூகம், சம்மாந்துறை
18.05.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாந்துறை மக்களின் நெஞ்சத்தில் வாழும்
தாயகத்தின் நாயகன்




மாண்புமிகு நீர்ப்பாசன அமைச்சர்,சட்டத்தரணி
அல்ஹாஜ் **எம்.ஐ. அன்வர் இஸ்மாயில்**, LL.B., M.P.,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாந்துறையின் உயர்வில்
சரித்திரம் படைத்து நிற்கும்
மாண்புமிகு அமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில்
அவர்களை ஈந்த அருமைப் பெற்றோர்



மர்ஹூம் **எம். எம். இஸ்மாயில்** ஆசிரியர்
மர்ஹூமா **எம்.எம். சுபைதா**
ஆகியோரின் நினைவுக்காக!

- சம்மாந்துறைச் சமூகம், சம்மாந்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இலங்கை சனநாயக சோசலிச
குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி
**மஹிந்த ராஜபக்ஷ**

பாராளுமன்ற உறுப்பினரும், சம்மாந்துறை மண்ணில் பிறந்த நீர்ப்பாசன அமைச்சருமான, சட்டத்தரணி அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கு சம்மாந்துறை மக்கள் மகிழ்வோடு எடுக்கும் இப்பாராட்டு விழாவிற்கு ஆசிச் செய்தி எழுதுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

எனக்கும், கௌரவ அமைச்சர் அன்வர் இஸ்மாயிலுக்கும் ஏற்பட்ட உறவு மிகவும் பழையது. 1996 ஆம் ஆண்டு லிபியா நாட்டின் ஜனாதிபதி கடாபி அவர்களின் அழைப்பின் பேரில் இலங்கை அரசின் சார்பில் நான் சென்ற போது அப்போது எனது நண்பர், மறைந்த அஷ்ரப் அவர்களின் பிரதிநிதியாக 'பெங்காசி' (திரிபோலி) மாநாட்டில் அன்வர் இஸ்மாயில் கலந்து கொண்டார்.

அந்த மாநாட்டில் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பாக அவர் முன்வைத்த கருத்துக்கள் முக்கியத்துவமுள்ள கருத்துக்களாக இருந்ததோடு மாத்திரமல்லாமல் வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களின் விருப்பினை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது.


அன்றைய தினமே சிந்தித்தேன் முஸ்லிம்களின் அரசியலில் இவருக்கு பிரகாசமான எதிர்காலம் இருக்கும் என்று அறிந்து கொண்டேன். கடந்த 2001 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினராக முதன் முதலில் தெரிவுசெய்யப்பட்டதிலிருந்து எமக்கிடையிலான உறவு மிகவும் நெருக்கமடைந்திருந்தது.

2002 ஆம் ஆண்டு அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒப்பந்தம் இவரை மிகவும் வெகுவாக பாதித்திருந்தது. அவரது தொடரான பாராளுமன்ற உரைகளிலிருந்து இதனை என்னால் அறியமுடிந்தது. 2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் முஸ்லிம் மக்கள் மத்தியில் புதியதொரு அரசியல் சித்தாந்தத்தை எடுத்துச் சென்று கிழக்கிலங்கையிலே உள்ள பெரிய தேர்தல் தொகுதியான சம்மாந்துறைத் தொகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை வெற்றி பெறச் செய்தது மட்டுமன்றி அன்றைய ஆட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இலங்கை சனநாயக சோசலிச
குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி
**மஹிந்த ராஜபக்ஷ**

பாராளுமன்ற உறுப்பினரும், சம்மாந்துறை மண்ணில் பிறந்த நீர்ப்பாசன அமைச்சருமான, சட்டத்தரணி அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கு சம்மாந்துறை மக்கள் மகிழ்வோடு எடுக்கும் இப்பாராட்டு விழாவிற்கு ஆசிச் செய்தி எழுதுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

எனக்கும், கௌரவ அமைச்சர் அன்வர் இஸ்மாயிலுக்கும் ஏற்பட்ட உறவு மிகவும் பழையது. 1996 ஆம் ஆண்டு லிபியா நாட்டின் ஜனாதிபதி கடாபி அவர்களின் அழைப்பின் பேரில் இலங்கை அரசின் சார்பில் நான் சென்ற போது அப்போது எனது நண்பர், மறைந்த அஷ்ரப் அவர்களின் பிரதிநிதியாக ‘பெங்காசி‘(திரிபோலி) மாநாட்டில் அன்வர் இஸ்மாயில் கலந்து கொண்டார்.

அந்த மாநாட்டில் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பாக அவர் முன்வைத்த கருத்துக்கள் முக்கியத்துவமுள்ள கருத்துக்களாக இருந்ததோடு மாத்திரமல்லாமல் வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களின் விருப்பினை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது.

அன்றைய தினமே சிந்தித்தேன் முஸ்லிம்களின் அரசியலில் இவருக்கு பிரகாசமான எதிர்காலம் இருக்கும் என்று அறிந்து கொண்டேன். கடந்த 2001 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினராக முதன் முதலில் தெரிவுசெய்யப்பட்டதிலிருந்து எமக்கிடையிலான உறவு மிகவும் நெருக்கமடைந்திருந்தது.

2002 ஆம் ஆண்டு அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒப்பந்தம் இவரை மிகவும் வெகுவாக பாதித்திருந்தது. அவரது தொடரான பாராளுமன்ற உரைகளிலிருந்து இதனை என்னால் அறியமுடிந்தது. 2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் முஸ்லிம் மக்கள் மத்தியில் புதியதொரு அரசியல் சித்தாந்தத்தை எடுத்துச் சென்று கிழக்கிலங்கையிலே உள்ள பெரிய தேர்தல் தொகுதியான சம்மாந்துறைத் தொகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை வெற்றி பெறச் செய்தது மட்டுமன்றி அன்றைய ஆட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றத்துக்கு முக்கிய பங்காளர்களில் ஒருவராகவும் செயற்பட்டார்.

2004 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலின் பின்பு கிழக்கு உட்கட்டமைப்பு, அபிவிருத்தி பிரதியமைச்சராக பதவியெடுத்து சம்மாந்துறை மக்களுக்கு மட்டுமன்றி ஏனைய மக்களுக்கும் தனது அளப்பெரிய சேவைகளைச் செய்துள்ளார். அப்போது பிரதமராகவும், நெடுஞ்சாலைகள் அமைச்சராகவும் இருந்த என்னிடம் உங்களது பிரதேசத்தின் அபிவிருத்திக்காக பல்வேறு வேண்டுகோளை விடுத்திருந்தார்.

அவ்வேண்டுகோளில் பிரதானமானவைகள் என்னால் நிறைவேற்றப்பட்டுள்ளமையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். சுதந்திரமடைந்து சம்மாந்துறை விவசாய மக்களின் நீண்டகால தேவையாகயிருந்த சம்மாந்துறை - நெயினாகாடு - குடிவில் மேம்பாலங்கள் இன்று நிறைவுசெய்யப்பட்டுள்ளமை இவரின் தீர்க்கதரிசமான் சேவைக்கு சான்றாக அமைந்துள்ளது. அவ்வாறு 09.07.2005இல் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ள சம்மாந்துறை ஹிஜ்ரா நவீன சந்தைக் கட்டிடத் தொகுதி இன்னுமொரு சான்றாக அமைந்துள்ளது.

மேலும், கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது எனது வெற்றிக்காக உழைத்த வர்களின் வரிசையில் அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கு பெரும் பங்குண்டு. இலங்கைத் தேசத்தை பிரிவினையின்றி ஒன்றுபட்ட இலங்கைக்குள் எல்லாச் சமூகத்தினரும் சமத்துவமான அதிகாரம் என்ற எனது கோட்பாட்டை பரிபூரணமாக ஏற்றுக் கொண்ட ஒருவராவர்.

நான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்பு இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் மேலோங்கும் துறையான நீர்ப்பாசனத்துறைக்கு அவரை அமைச்சராக நியமித்தேன். ஏறத்தாழ ஒருவருட காலத்திற்குள் ஏனைய அமைச்சர்களுக்கு முன்மாதிரியாக தனது சேவைகளை தியாக சிந்தையுடன் மேற்கொண்டு வந்துள்ளார்.

குறிப்பாக கடந்த ஜனாதிபதித்தேர்தலில் என்னால் முன்வைக்கப்பட்ட 'மஹிந்த சிந்தனை' வேலைத் திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனத்துறை அபிவிருத்திக்கு அதிகூடிய அக்கறையுடன் உழைத்து வருகின்றார். தென்மாகாண விவசாய மக்களின் நீண்டகாலத் தேவையாகயிருந்த அம்பாந்தோட்டை வெஹரகல நீர்ப்பாசனத் திட்டம், அதேபோல் வடமேல் மாகாண குருணாகல் தெதுருஓயா நீர்ப்பாசனத் திட்டம், மொனராகலை வெலிஓயா நீர்ப்பாசனத் திட்டம், அம்பாறை மாவட்ட விவசாய மக்களின் மிகநீண்ட காலத் தேவையாயிருந்த மஹாஓயா ரம்புக்கன் ஓயா நீர்ப்பாசனத் திட்டம், பொத்துவில் ஹெடோயா நீர்ப்பாசனத் திட்டம், கல்லோயா நவோதயா -திட்டம் போன்ற திட்டங்கள் இவரினால் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்படுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும், தனது பிரதேச மக்களின் பிரதேசபாதை, போக்குவரத்து அபிவிருத்தி தொடர்பாக இவரினால் முன்வைக்கப்பட்ட சம்மாந்துறை - நெயினாகாடு - குடிவில் பிரதான பாதை விஸ்தரிப்புக்காக 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மிக இளவயதில் இவர் பாராளுமன்ற உறுப்பினராக, பிரதியமைச்சராக, அமைச்சராக உயர்ந்துள்ளார் என்பதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களே சாட்சிகளாக இருக்கின்றார். துடிப்புள்ள ஒரு இளைஞரை, துணிவுமிக்க தலைவரை அரசியல் ராஜதந்திரங்களை கையாளும் ஒருவரை சம்மாந்துறை மக்கள் அரசியல் தலைமகனாக பெற்றிருப்பது பெரும் பாக்கியமாகும்.

இந்தப் பாக்கியம் தொடர்ந்து நிலைக்க வேண்டும் என்று பிரார்த்திப்பதோடு இவ்வைபவம் வெற்றிகரமாக நிறைவுபெற வேண்டும் எனவும், அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் அரசியலில் ஓங்கிவளர வேண்டும் என்றும் எனது நல்லாசிகள்.

நன்றி!

***மஹிந்த ராஜபக்ஷ,***
ஜனாதிபதி,
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு,
ஜனாதிபதி செயலகம், கொழும்பு

(மொழிபெயர்க்கப்பட்டது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பிரதம மந்திரி

## ரட்னசிறி விக்ரம நாயக்க

**இ**ன்று சம்மாந்துறை மண்ணில் சம்மாந்துறை மக்களினால் அமைச்சர் சட்டத்தரணி, அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கு மனமுவந்து அளிக்கப்படும் சேவைநலன் பாராட்டு விழாவுக்கு ஆசிச் செய்தி எழுதுவதில் மகிழ்சியடைகின்றேன்.

அவர் மிக இளவயதில் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு பின்பு பிரதியமைச்சராக உயர்ந்து இன்று அமைச்சராக முழு தேசத்தையும் அலங்கரித்துக் கொண்டிருப்பது பெரும் சாதனையாகும். இந்தச் சாதனைக்கு பின்னால் மாபெரும் மக்கள் சக்தி உள்ளது என்பதனை யாரும் மறுக்க முடியாது. இவ்வாறு சம்மாந்துறை மக்கள் அவரின் மீது அன்பும், கருணையும் கொண்டுள்ளதோடு அதனை விடவும் ஒருபடி மேலே அவர் சம்மாந்துறை மக்களின் மீது அன்பு வைத்துள்ளார். என்பதற்கு கடந்த ஐந்து வருட சேவைகள் சான்றாக அமைந்துள்ளன.

குறிப்பாக கல்வி, சுகாதாரம், விவசாயம், மின்சாரம், நீர்ப்பாசனம், குடிநீர், பொதுவ சதிகள், வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, கலாசார அபிவிருத்தி போன்ற இன்னோரன்ன துறைகளில் மிக இளவயதில் குறிப்பிட்ட காலப்பகுதியில் தனது சேவையை நிலைநி றுத்தியுள்ளார். இக்கால இடைவெளிக்குள் இவரது சேவை, எதிர்கால அரசியல் தலைமை த்துவத்திற்கு ஒரு முன் உதாரணமாக அமைந்துள்ளது

இத்தகைய தூரநோக்குள்ள சேவைமனப்பாங்குள்ள, தெளிவான அரசியல் முடிவுகளை தெரிவு செய்யும் அரசியல் தலைமைத்துவத்தினை சம்மாந்துறை மக்களும், ஸ்ரீலங்கா மாதாவும் பெற்றிருப்பது எல்லோருக்கும் பயன் தரும் விடயமாகும். இன்று மாலை சூடி மகிழ்வுறும் உங்களின் ஒருவனாக நான் மகிழ்வதோடு, தொடர்ந்தும் அமைச்சர் அன்வர் இஸ்மாயிலின் சேவைகள் சம்மாந்துறை மக்களுக்கும், இலங்கைத் தேசத்திற்கும் என்றும் கிடைக்க வேண்டும். என வாழ்த்துகின்றேன்.

நன்றி!

***ரட்ணசிறி விக்கிரமநாயக்க,***
பிரதமர்,
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு,
பிரதமர் அலுவலகம், கொழும்பு.

(மொழிபெயர்க்கப்பட்டது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் மாண்புமிகு சபாநாயகர்

## W. J.M. லொகு பண்டார

பாராளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான மாண்புமிகு அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கு அவரது தொகுதி மக்கள் பாராட்டு விழாவிற்கு எனது செய்தியை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

பாராளுமன்றத்தில் இளவயது உறுப்பினர்களின் ஒருவரான கௌரவ அமைச்சர் அன்வர் இஸ்மாயில், பாராளுமன்ற நடைமுறைகளைப் பேணுவதிலும், விழுமியங்களைப் பேணுவதிலும் மிகக் கவனமாக செயற்படுவர்.

அன்வர் இஸ்மாயில், முஸ்லிம் சமூத்தின் துடிப்புள்ள ஒரு பாராளுமன்ற உறுப்பினர். ஒரு போதும் பாராளுமன்ற கௌரவத்தை அவர் மாசுபடுத்தவில்லை. அவருடைய எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டும்.

சிறிய வயதில் பாராளுமன்ற உறுப்பினராகி, அமைச்சராக அவரை நீங்கள் பெற்றதில் பெருமைப்பட வேண்டும். நானும் எனது பாராட்டைத் தெரிவித்துக் கொள்வதோடு இந்தத் தேசத்தின் உயர்வுக்கும் அமைதிக்கும் அவர் தனது பங்களிப்பைத் செலுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

டபிள்யூ.எம்.ஜே. லொக்கு பண்டார, பா.உ,
சபாநாயகர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Hon. A.H.M. Fowzie,**
Minister of Petroleum & Petroleum
Resources Development.

It is with great pleasure I send this message to the souvenir to be published to mark the occasion of felicitation to Hon. Anver Ismail M.P. Minister of Irrigation, by the people of Sammanthurai.

He is one of the popular and dynamic leader of people of the Eastern Province. His prime concern, in politics, has been the welfare of the people. As a young and energetic Member of Parliament, he has been doing his best to serve the people of his constituency.

His open out look transcends the boundaries of race, religion and language. As a result he is liked by people of all communities. I'm happy that he has reached the height as a minister and proved him self very effective and efficient in handling some major irrigation projects, such as Rambukan Oya and Gal Oya Navodya which will help the farmers of Ampara District immensely and add to the prosperity of the nation.

As great sages had said 'Give honour to whom is due'. I express my appreciation to the people of Sammanthurai for organizing this felicitation ceremony to their pragmatic leader who is endeavoring to improve the quality of the life of his people.

I pray to Allah to grant him good health, long life and every success to attain greater heights in life.

**A.H.M. Fowzie,**
**Minister of Petroleum & Petroleum Resources Development.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்வழங்கள் வடிகால் அமைப்பு மாண்புமிகு அமைச்சர்

## A.L.M. அதாவுல்லா

மகத்துவம் மிக்க கடமைப் பொறுப்பு ஒன்றினை நினைவு செய்யும் முனைப்போடு சம்மாந்துறையூர் கொண்டாடுகின்ற இன்றைய விழா குறித்து, நான் புழங்காகிதம் கொள்கின்றேன்.

இந்த நிகழ்வு, நன்றி உணர்வுள்ள மக்களின் வெளிப்பாடு: தமது மண்ணையும், மக்களையும் நேசித்த மகனுக்கு வழங்கும் மரியாதை இந்த மரியாதையின் பரிமானம் முழுவதையும் ஸ்பரிசித்து, சுகம் காணும் சொந்தக்காரனான அன்புச் சகோதரன் அன்வரை அன்புடன் வாழ்த்துகின்றேன்.

உயரிய இலட்சியங்களோடும், மிகப் பெரிய கனவுகளோடும் அரசியல் பயணத்தை ஆரம்பித்த சகோதரன் அன்வர் ஓர் அமைச்சராக உயர்ந்து நிற்கும் அளவு உறுதியும், உற்சாகமும் வழங்கிய முதன்மண் சம்மாந்துறை மண்தான். அந்த மண்ணிலிருந்து இன்று பெறப்படுகின்ற ஆசிகளும், வாழ்த்துக்களும் அன்வரை இன்னும் உயரச் செய்யும் என்பதனை நினைத்துப் பார்த்து நான் பூரிப்படைகின்றேன்.

சம்மாந்துறை மண்ணின் கலாசாரம், பண்பாடு, பாரம்பரிய விழுமியங்கள் என்பன சிதையாமல் எல்லோரும் ஓரணியில் நின்று திரண்டு தமது செல்வ மகன் அன்வருக்கு வழங்கும் வாழ்த்து நிகழ்வில் ஒருவனாக கலக்க விரும்புகின்றேன்: அன்வரை வாழ்த்தி மகிழ்கின்றேன்.

சம்மாந்துறைக்கு என் பாராட்டுக்கள்! வாழ்த்துவிழா சிறக்க என் வாழ்த்துக்கள்!

மகிழ்ச்சிகளுடன் சகோதரன்,

ஏ.எல்.எம். அதாஉல்லா
பாராளுமன்ற உறுப்பினர்,
தேசிய தலைவர் - தேசிய காங்கிரஸ்,
அமைச்சர் - நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடமைப்பு, பொதுவசதிகள்
மாண்புமிகு அமைச்சர்
**பேரியல் அஷ்ரஃப் இஸ்மாயில்**

அன்வர் இஸ்மாயிலுக்கு சம்மாந்துறை மக்கள் பாராட்டெடுப்பது நான் அவரைப் பாராட்டுவது போன்ற உள்ளாந்த உணர்வை எனக்கு தருகிறது. அதே நேரம் நான் பாராட்டப்படுவது போலும் உனர்கிறேன். ஏன் என்றால் அன்வர் இஸ்மாயில் எனக்கு மகன் போன்றவர். என் குடும்பத்தோடு இணைந்தவர். தலைவர் அவர்களோடு மிக மிக நெருக்கமாக இருந்தவர். எங்கள் குடும்ப உறுப்பினர் போல் அவர் செயற்பட்டார் அப்ப டிப்பட்ட ஒருவருக்கு பாராட்டெடுப்பது எனக்கு மகிழ்ச்சி தராமலா இருக்க முடியும்?

நான் பார்த்திருக்க அவர் சட்டத்தரணியானார், நான் பார்த்திருக்க தலைவரின் இனைப்பாளராக செயற்பட்டார், எங்களோடு இருக்கும் போதே - நாங்களும் இருந்தே அவருக்கு திருமணம் செய்து கொடுத்தோம். நான் பார்த்திருக்க - ஆனால் தலைவருக்கு தெரியாது - அவர் பாராளுமன்ற உறுப்பினரானார், பிரதியமைச்சரானார், அமைச்சரானார், இவை எல்லாம் என்னுடைய மகன் ஒருவருக்கு கிடைத்தது போன்ற உணர்விலேதான் நான் இருக்கிறேன். எனவே நாம் அனைவரும் சேர்ந்து பாராட்டி இன்னும் அவர் உயர பிரார்த்திப்போம்.

முஸ்லிம் அரசியலில் தலைவரின் எண்ணங்களின் பார்வையிலே பயணம் செய்கின்றவர்களில் அன்வர் இஸ்மாயிலும் ஒருவர். நாங்கள் இருவரும் ஒரு கட்சியில் இல்லாவிட்டாலும் ஒரு பக்கத்தில் இருந்து செயற்படுபவர்கள் இதன் மூலம் முஸ்லிம் அரசியலில் தெளிவான பாதையில் உள்ளவர்களாக உள்ளோம்.

அன்வர் இஸ்மாயில் அனைவரையும் கவர்ந்து தனது ஊர் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதில் கரிசனை கொண்டவர். இதனால் இன்று சம்மாந்துறை மக்கள் அந்த பயனைப் பெற்று நன்றி உணர்வுடன் அவரை பாராட்டுகின்றனர். இது சம்மாந்துறை மக்களின் குணாம்சம். இதனால் சம்மாந்துறை மக்களுக்கு எனது பாராட்டுக்கள்.

நன்றி
பேரியல் அஷ்ர.ஃ.ப்
அமைச்சர்
வீடமைப்பு, பொதுவசதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Hon. P. Dayaratne, M.P.,**
Minister of Planning.

It is with great pleasure I send this message to the souvenir published to mark the occasion of felicitation to Hon. Anver Ismail M.P. Minister of Irrigation, by the people of Sammanthurai.

Hon. Anver Ismail is a very energetic and dynamic Member of Parliament who is always mindful of the needs of the people in his constituency and has rendered his best for the benefit of people in Ampara District.

Hon. Anver Ismail must be congratulated for his untiring effort in Implementing some major irrigation projects such as Rambukhan Oya and Gal – Oya Navodaya which will immensely benefit the Sinhalese, Tamils and Muslims living in Ampara District.

I congratulate the People of Sammanthurai for organizing this felicitation function to a very youthful Member of Parliament who renders yeomen services to uplift the living standard of the poor people in Ampara District.

I pray to the Almighty to grant him good health and long life to serve the people of Sri Lanka.

P. Dayaratne, M.P.,
Minister of Planning.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்குடியேற்ற, அனர்த்த நிவாரன சேவைகள்
மாண்புமிகு அமைச்சர்
**றிஸாட் பதியுதீன்**

எங்கள் அன்புக்குரிய அமைச்சர் அல்ஹாஜ் அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கு சம்மாந்துறை மக்கள் பெருவிழா எடுப்பது மகிழ்ச்சி தரும் விடயமாகும். சம்மாந்துறை மக்களின் பாராட்டு உணர்வுகளோடு நானும் இணைந்து கொள்கிறேன்.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பாதையில் நாம் தலைவர் அஷ்ர.ஃ.பின் கனவுகளோடு ஒன்றித்திருக்கின்றோம். அந்தப்பாதை தடம் புறள்கின்றபோது அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் முஸ்லிம் காங்கிரசை விட்டு வெளியேறினார். நாம் இதனை அறிந்தும் கூட சூழ் நிலையின் கைதிகளாக இருந்தோம். பின்னர் நானும் இன்னும் சிலரும் முஸ்லிம்களின் அரசியல் பாதையை செப்பனிடுவதற்காக இன்று ஒன்றுபட்டிருக்கின்றோம். இந்த விடயங்களில் அன்வர் இஸ்மாயிலின் உறுதியும் தெளிவும் பாராட்டதக்கதாகும்.

தலைவர் அஷ்ர.ஃ.ப் அவர்கள் கறுப்பு ஜுலையை பிரகடனப்படுத்தியபோது அன்வர் இஸ்மாயில் அதில் முதன்மை போராளியாக இருந்து கொழும்பு பல்கலைக்கழகத்திலே பல இளைஞர்களை ஒன்று கூட்டி ஆக்கபூர்வமான பணிகளை செய்தவர். எனது வடபுலத்து மக்கள் பற்றி அன்வர் இஸ்மாயிலுக்கு பெறும் கவலை இருந்தது. பாராளுமன்றத்திலே எங்களுடைய மக்களுக்காக பல சந்தர்ப்பங்களிலே குரல் எழுப்பி இருக்கின்றார். அவருக்கு எமது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மக்களையும் மண்ணையும் நேசிப்பதிலேயே அன்வர் இஸ்மாயில் முதன்மை வாய்ந்தவர். தனது ஊருக்காக எத்தனை படிகளையும் ஏறி இரங்க தயங்காதவர். அதனுடைய பெறுபேறுகளை இன்று அனுபவிக்கிறீர்கள். உங்களோடுசேர்ந்து நானும் அன்வர் இஸ்மாயிலை பாராட்டி என்னுடைய மகிழ்ச்சியை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி.

றிஸாட் பதியுதீன்
அமைச்சர்,
மீள்குடியேற்ற, அனர்த்த நிவாரன சேவைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனர்த்த நிவாரண சேவைகள்
மாண்புமிகு அமைச்சர்
**அமிர் அலி**

நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கௌரவ அன்வர் இஸ்மாயில் அவர்களைப் பாராட்டி நடத்தப்படும் விழாவில் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

வெறும் திண்ணைப் பேச்சு நடத்தும் முஸ்லிம் அரசியலிலிருந்து வேறுபட்டு மக்களுக்கான அரசியலை நடத்தும் ஒரு சிலரில் கௌரவ அன்வர் இஸ்மாயில் அவர்களும் ஒருவராவார்.

தன்னைத் தேர்ந்தெடுத்த மக்களின் உயிர் மூச்சாக அவர் இயங்கி வருவதால் அம்மகள் இன்று அவரை பாராட்டி கௌரவிக்கின்றார்கள். இது அவருக்கும் அவரது சேவைக்கும் கிடைத்த மணி மகுடமாகும். மக்கள் சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்திருக்கும் கௌரவ அசைச்சர் அவர்கள் என் அன்புக்குப் பாத்திரமான நண்பருமாவார் என்பதால் அவருக்கு வழங்கப்படும் பாராட்டில் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி உண்டு.

தனது அர்ப்பணிப்பு மிகுந்த சேவையை மதிக்கத் தெரிந்திருக்கும் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வாய்ப்பு கிடைத்த எனது நண்பருக்கும் - நன்றி உணர்வு மிக்க அந்த மக்களுக்கும் இந்த விழாவை நடத்தும் ஏற்பாட்டுக் குழுவினருக்கும் எனது மனம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எம்.எஸ்.எஸ். அமீர் அலி, பா.உ.,**
**அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவு
மாண்புமிகு அமைச்சர்
**நஜீப் ஏ. மஜீட்**

தற்போது நெருக்கடியான கால கட்டத்தில் முஸ்லிம் சமூகத்தின் விடுதலை வேட்கையின் வக்கிரத் தூணாக செயற்பட்டு வரும் அம்பாறை மாவட்டத்தின் விடிவெள்ளியான கௌரவ அமைச்சர் அன்வர் இஸ்மாயிலின் பணிகள் இடைவிடாது என்றும் தொடர வேண்டும் என நான் பிரார்த்திக்கிறேன்.

முஸ்லிம் சமூகத்திற்குத் திடமான எதிர்காலத்தை வழங்க வேண்டிய பொறுப்பு பிரதானமாக அரசியல் தலைமைகளின் கைகளிலேயே தங்கியிருக்கின்றது என்பதை எவரும் மறுக்க முடியாது. அந்த வகையிலே அமைச்சர் அன்வர் இஸ்மாயில் மாமனித புனிதரான மர்ஹூம் அஷ்ர.ஃபின் அடியொட்டி செயற்பட்டு சமூகத்தின் விடிவுக்காக உழைத்து வருவதையிட்டு பெருமிதமடைகின்றேன்.

அன்னாரது சேவை அம்பாறை மாவட்டத்திற்கு மாத்திரமல்லாது அனைத்துப் பகுதிகளுக்கும் தேவை என்பதை யாராலும் மறுக்க முடியாது.

மாலைகளுக்கு மாத்திரம் கழுத்தை வளைத்துக் கொடுத்து மன மகிழ்ச்சியும் பெருமையும் கொள்ளும் அரசியல்வாதியல்ல இவர், மக்கள் பணியிலே தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயல்பட்டு வரும் இவருக்கு சம்மாந்துறை மக்கள் வழங்கும் வரவேற்பில் வாழ்த்துரை மூலம் என்னையும் இணைத்துக் கொள்வதில் புளகாங்கிதம் அடைகின்றேன்.

மக்கள் பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ள அமைச்சர் அன்வர் இஸ்மாயிலின் நீண்ட ஆயுளுக்காக நான் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**எம். நஜீப் அப்துல் மஜீத்,**
**கூட்டுறவுத்துறை அமைச்சர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவிவகார
மாண்புமிகு பிரதி அமைச்சர்
**அல்ஹாஜ் ஹு சைன் பைலா**

முஸ்லிம் அரசியலில் மிகவும் தீர்க்க தரிசனமான நம்பிக்கை நட்சத்திரம் அமைச்சர் அன்வர் இஸ்மாயில். சரியான சந்தர்ப்பத்தில் சரியான முடிவுகளை எடுக்கும் திறன் அவரிடம் இருந்தது. அதனால் கிழக்கு முஸ்லிம்களின் அரசியலை சரியான சந்தர்ப்பத்தில் சரியாக வழிநடத்துவதற்கு முன்னின்ற மிகத் தைரியம் மிக்க போராளி அவர்.

2004ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் நான் முஸ்லிம் காங்கிரசில் இருக்கும் போது எங்களுக்கு மிகவும் அச்சுறுத்தலாக இருந்த தேர்தல் தொகுதி அன்வர் இஸ்மாயிலுடைய தேர்தல் தொகுதியான சம்மாந்துறையாகும். அன்வர் இஸ்மாயில் தான் கொண்ட கொள்கையில் தெளிவாக இருப்பதோடு மாத்திரம் அல்லாமல் என்னவிதப்பட்டாவது அதனை வெற்றி கொள்பவர். நாங்கள் நினைத்தது போல கிழக்கு மாகாணத்திலே அன்வர் இஸ்மாயில் முஸ்லிம் காங்கிரசுக்கு எதிராக நின்று தனது தேர்தல் தொகுதியை வெற்றிகொண்டவர்.

சம்மாந்துறை மக்களுக்கு மிகச் சரியான அரசியல்வாதி கிடைத்துள்ளார். அவரை பயன்படுத்திக்கொள்ள வேண்டியது சம்மாந்துறை மக்களிலே தங்கியுள்ளது. மிகவும் இள வயதில் - குறுகிய காலத்திலே இந்த மண்ணுக்கு அவர் பல்வேறு பணிகளை ஆற்றிருக்கிறார். அதற்காக நீங்கள் எடுக்கும் விழாவில் நானும் பங்கு கொள்கிறேன். அன்வர் இஸ்மாயிலுக்கும் சம்மாந்துறை மக்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். அன்வர் இஸ்மாயிலை நான் எப்போதும் மக்களின் தலைவனாகவே பார்க்கிறேன் அதனாலே அவர் பாராளுமன்ற உறுப்பினராகி, பிரதியமைச்சராகி,அமைச்சராகவும் ஆகியுள்ளார். அவர் திறமையை நாம் பாராட்டதானே வேண்டும். உண்மையில் அவர் பாக்கியம் பெற்றவர். அவர் அரசியலில் நீண்ட காலம் நிலைத்திருந்து முஸ்லிம் சமூகத்தவருக்கும் இந்த நாட்டுக்கும் சேவையாற்ற வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

**ஹுசைன் பைலா**
வெளிவிவகார
மாண்புமிகு பிரதி அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதியின் பாராளுமன்ற ஆலோசகர்
ஊடகத்துறை ஆலாட்சியாளர்

**அல் ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர்**

**நிலத்தை பசுமையாக்கும் பாசன புரட்சியாளர் !**

அறிவு, அடக்கம்,பணிவு, செயற்றிறன், சொல்லாண்மை ஆகிய அணிகலன்களின் ஒட்டுமொத்த உருவம் அன்வர் இஸ்மாயில்.

கற்றவர்களை ஆகர்சிப்பவர்து, கல்லாண்மையை நீக்கப் பாடுபடுபவர், கற்றோரும் இவரைக் காமுறுவர், கல்லாதோரும் இவரை நேசிப்பர்.

இவர் திகாமடுல்ல மாவட்டத்துக்கு ஒரு ஒளித்தாரகை!

சம்மாந்துறை மக்கள் இவருக்கு விழா எடுத்து மகிழும் இந் நேரம், எண் நினைவுகள் சற்றே பின்நோக்கிச் செல்கின்றன.

1958ஆம் ஆண்டு - தப்லீ∴கே இஸ்லாம் அரபு கலைக்கூட முன்றலில், சம்மாந்துறையில் முதல் பட்டதாரியாக தேர்வு பெற்று எம்.ஏ.அப்துல் மஜீத் அன்று ஊர் வருகிறார்

சம்மாந்துறை உர் மக்கள் அன்று தனது முதல் 'B.A.' யைவரவேற்றுப் போற்றிப் புகழ திரண்டு எழுந்திருந்தனர். எமது தேசத் தலைவர்களில் ஒருவரும் சுதந்திரப் போராட்டத்தின் முன்னணி வீரரும், சுதந்திர இலங்கையின் முதல் முஸ்லிம் அமைச்சருமான அரும் பெரும் தலைவர் அல்ஹாஜ் காலாநிதி ரி.பி. ஜாயா அவர்கள் தான் விழாவுக்கு தலைமை தாங்குகிறார். அன்று அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் தலைவராகப் பணியாற்றிய அவரும் முன்னாள் அமைச்சர் - டாக்டர் எம்.ஸீ.எம். கலீல் அவர்களும் கூட்டத்தை அலங்கரிக்க வந்திருக் கின்றார்.

இவ்விரு தலைவரோடும் நானும் அன்று தான் முதன் முறையாக சம்மாந்துறை செம்மண் மிதிக்கும் வரம் பெற்றேன். இரு பெரும் தலைவர்களின் ஆங்கில உரைகளை தழிழ்ப்படுத்தும் பாக்கியமும் பெற்றேன்!

எதிர்காலம் பற்றி அன்று எதிர்வு கூறிய டாக்டர் ஜாயா "B.A அப்துல் மஜீத் ஒரு மக்கள் தலைவனாக, பாராளுமன்ற பிரதிநிதியாக வரக்கூடிய சகல தகுதிகளையும் பெற்றிருக்கிறார், அவருக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்பதை நான் அனுமானிக்க முடிகிறது" டாக்டர் ஜாயா அன்று வெளியிட்ட கருத்துக்கள் பிற்காலத்தில் உண்மையாகவே அமைந்துவிட்டதை சம்மாந்துறை மக்கள் நன்கறிவர். **அதே ஆருடம் எம் இளைய சகோதரர் அன்வர் இஸ்மாயிலைப் பொறுத்தம் சரியாகவேபடும்.**

ஜனாதிபதி மேதகு மஹிந்த ராஜபக்ஷவின் மனம் கவர்ந்தவர் அன்வர் இஸ்மாயில் தேசநிர்மாணப் பணிகளில் முக்கியமான நீரோட்டத்தில் சங்கமிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணம் அவருக்கு நீர்ப்பாசன அமைச்சையே வழங்கியுள்ளார். கல்லோயா பள்ளத்தாக்கு அபிவிருத்தித்திட்டம் முகிழ்ந்த நிலப் பரப்பில் இருந்து முழு நாட்டினதும் நீர்ப்பாசனத் துறையை முடுக்கிவிட்டு பசுமைப்புரட்சி செய்ய அன்வர் இஸ்மாயில் பணிக்கப்பட்டிருப்பது மிகவும் அர்த்த புஷ்டி உள்ள விடயமாகும். அவர் பசுமைப் புரட்சியாளர்!

தன் பொன்னான பொழுதுகளை எல்லாம் எம் நாட்டு மண்ணை வளம் காணச் செய்ய வாலிப மிடுக்கோடு, விறுவிறுப்போடு, வேகத்தோடு, விவேகத்தோடு உழைத்து வருபவர் அமைச்சர் அன்வர் இஸ்மாயில் எமது அகமும் முகமும் பூரிப்படைகின்றது.

அமைச்சர் இஸ்மாயில் சொல்லாற்றல் மிக்கவர். அவர் பேச்சு தமிழின் இனிமை மேலோங்கச் செய்யும். மணி மணியான அவர் மொழி வளத்தை மணித்தியாலங்களாக மக்கள் கேட்டு இன்புறளாம்.

பாசன வசதிகளைக் கொண்டு நிலத்தை பண்படுத்துவது போன்று அவர் மேடைப் பேச்சும் மக்கள் உள்ளங்களை பண்படுத்த வல்லது.

சூழல்காரணிகள் ஒருவனை பல படித்தரங்களுக்கு உயர்த்துகின்றன என்ற உளவியலாளரின் கருத்துக்கு இனைய ஒரு முஸ்லிம் என்ற முறையில் இஸ்லாமிய விதிமுறைக்கொப்ப தம் சூழலை நெறிப்படுத்திக் கொண்டு வாழும் வாய்ப்பை வசதியை எல்லாம் வல்ல அல்லாஹ் அவருக்கு வழங்க வேண்டும்!

அமைச்சர் அன்வர் இஸ்மாயிலுக்கு என் மன நிறைவான சுப சோபன வாழ்த்துக்கள்!
துஆ!

**அல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர்**
ஜனாதிபதியின் பாராளுமன்ற ஆலோசகர்
ஊடகத்துறை ஆலாட்சியாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாந்துறை பிரதேச செயலாளர்

## A.L.M. தாசிம்

அம்பாறை மாவட்டத்தின், சம்மாந்துறை மண்ணிற்கு மங்காப்புக ழுடன், மகுடம் சேர்க்கும் மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினரும், நீர்ப்பாசன அமைச்சரும், சட்டத்தரணியு மான அல்-ஹாஜ். எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கு 18.05.2007ல் நம்மாந்துறையில் இடம் பெறும்வரலாறு காணாத வரவேற்பு விழாவின் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் எனது மனப்பூர்வமான மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சம்மாந்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளராகநான் கடமை புரிந்த காலத்தில் இடம் பெற்ற 'மகாபொல' நிகழ்வின் போது மிக நெருக்கமாக இவருடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது. அதுமட்டுமன்றி எனது குறுகிய சேவைக்காலத்தின். பின் ஊர்வாதமின்றி இப்பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளராகவும் என்னை அக்கதிரையில் அமர்த்தி அழகு பார்த்த பெருமையும் இவருக்குண்டு. எனது சேவைக்காலத்தில் என்னோடு ஒட்டிஉறவாடி, எனது சேவையின் போதும் எனக்கு ஏற்பட்ட பிரச்சினையின் போதும், சம்பவங்களின் போதும், எனக்கு ஆறுதலும், உற்சாகமும் தைரியமும் வழங்கி பக்கபலமாகவும் உறுதுணையாகவும் செயற்பட்டதை என்வாழ்நாள் முழுக்க மறக்க முடியாது.

பிரதேச செயலகம் மூலமாகவே சகல அபிவிருத்திகளும் வேகமாக நடைபெறுவதால், இப்பிரதேசத்தின் அபிவிருத்தி வேலைகள் மக்களின் ஆக்கபூர்வமான தேவைகள், உதவிகள், ஒத்தாசைகள் யாவற்றையும் இனம்கணங்கண்டு அவ்வப் போது நேரடியாகவும், தொலைபேசிமூலமாகவும் வேலைகளை துரிதப்படுத்தமாறும், சேவைகளை உடன்வழங்குமாறும் அன்போடும். அதேநேரம் வேகமாகவும் செயற்படுத்த தூண்டுவதுடன், எந்த இடத்தில் எதுசெய்ய வேண்டும் என்று திட்டம் தீட்டுவதிலும் முன்னின்று செயல்படுத்துவதிலும், மக்களின் துயர்துடைக்க பாடுபடுவதிலும் இவரைப் போன்ற துடிப்பும், வேகமும் கொண்ட அரசியல்வாதியை, சமூகசேவகரை என் வேவைக் காலத்தில் காணவில்லை. என்றே கூறவேண்டும் அதேநேரம் எனது நிர்வாகத்தில் தலையிவதும் கிடையாது. எனவே, இத்தகைய சமூகசிந்தனையும் சேவைமனப்பான்மையும், மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கடமைபுரியும் மண்ணின் மைந்தன், நீர்ப்பாசன அமைச்சருக்கு வழங்கும் இவ்வரவேற்பு விழாவும், மலர்வெளியீடும் என்னைப் பொறுத்தவரை ஒருவரலாற்று நினைவாகவே இருக்க வேண்டும். இருக்கும் என்று விரும்புவதுடன் அன்னாரின் அரசியல் சேவையும், ஆயுளும் நீடித்து இருக்க எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் இருகரம் ஏந்தி இறைஞ்சுவதுடன், இவ்வரவேற்பு விழாமலரில் எனக்கும் ஒரு சந்தர்ப்பத்தினை வழங்கியமைக்காக வரவேற்பு குழுவிற்கு நன்றியையும், பிரதேச செயலக சகல ஊழியர்களின் சார்பாகவும் மகிழ்ச்சியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி!

**ஏ.எல்.எம். தாஸிம்,**
பிரதேச செயலகம்,
சம்மாந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாந்துறை வலயக் கல்வி பணிப்பாளர்
அல்ஹாஜ் **எம்.ரீ.எம். தௌபீக்**

பாராளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான மாண்புமிகு அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கு சம்மாந்துறை மக்கள் எடுக்கும் பாராட்டு விழாவிற்கு எனது செய்தியை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அமைச்சர் அன்வர் இஸ்மாயில் சம்மாந்துறைக்கு மாத்திரமல்ல: அம்பாறை மாவட்ட மக்களுக்கு கிடைத்த வரப்பிசாதமாகும். சம்மாந்துறையின் கல்வியில் இவர் காட்டும் அக்கறை என்னை மயிர்க்கூச்செறிய வைத்திருக்கின்றது. குறிப்பாக, கிராமப்புற பாடசாலைகளின் வளர்ச்சியில் அவர் அதிகம் அக்கறை காட்டி வருகின்றார். கிராமப்புற மாணவர்கள் எதுவித மன உளைச்சலுமின்றி கல்வி கற்றுத்தேற வேண்டும். அவர் குறிப்பிடுவார் இந்த மனோநிலை மிகவும் விரும்பத்தக்கது.

சம்மாந்துறை தேசிய பாடசாலையின் பழைய மாணவரான இவர், இப்பாடசாலை சகல விடயங்களிலும் தேசிய தரத்திற்கு உயர்த்தப்பட வேண்டும் என அக்கரையுடன் செயற்பட்டு வருகின்றார். இன்னும் சம்மாந்துறையின் கல்வி முன்னணிப் பாடாசாலைகளின் தரத்தை உயர்த்ததப் அவர் அரும்பாடுபட்டு வருகின்றார்.

மேலும், சுதந்திரமான கற்றல் நடவடிக்கை, பாடசாலை அபிவிருத்தி என்பனவற்றுக்கு அமைச்சர் என்றும் உறுதுணையாக இருந்து வருகின்றார். இத்தனைக்கும் மத்தியில் மிகச் சிறுவயதிலேயே அமைச்சராகியுள்ள அவரை சம்மாந்துறை மக்கள் மனதில் சுமந்து பாராட்டுவது மிகுந்த மகிழ்ச்சியான விடயமாகும். அவருக்கு எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின் றேன்.

**அல்ஹாஜ் எம்.ரீ.எம். தௌபீக்**
வலயக் கல்வி அலுவலகம்
சம்மாந்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஜ்லிஸ் அஷ் ஷூறா அமீர்
தலைவர், ஜம்இயத்துல் உலமா

## அல்ஹாஜ் மௌலவி எம்.பீ.அலியார்

அல்-ஹாஜ். எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் நீர்ப்பாசன அமைச்சராக நியமனம் பெற்றமைக்காகவும், சேவை நலன் பாராட்டுக்காகவும் ஏற்பாடு செய்யப்படவிருக்கும் விழாவுக்காக எனது பாராட்டையும், வாழ்த்துக்களையும் மனப்பூர்வமாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

நீர் உலகத்தின் தேவை, அது இயங்குவதற்கு மிகமிக அத்தியாவசியமான சேவையாகும். அதிலும் முக்கியமாக மனிதனின் வாழ்வாதார தேவைக்கு அடிப்படைக் காரணியாக அமைந்துள்ளதை மறக்க முடியாது.

நமது சகோதரர் அன்வர் இஸ்மாயில் நீர்ப்பாசன அமைச்சராக, மாண்புமிகு ஜனாதிபதி அவர்களால் நியமனம் செய்துள்ளமை நமக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும். இச்சந்தர்ப்பத்தில் மாண்புமிகு ஜனாதிபதி அவர்கட்கு நமது பிரதேசத்தின் சார்பில் நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விவசாயிகளுக்கு நீர் மிக அத்தியாவசியமான தேவையாகும். அத்தேவை பாகுபாடற்ற முறையில் கிடைக்கத்தக்க ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும். என்பதனை வலியுறுத்திக் கூறுகின்றேன். நெய்நாகாடு பிரதேசத்தில் அவர் செய்து முடித்துள்ள பாரிய பாலங்கள் விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றியுள்ளதாக அறிகின்றேன். அல்லாஹ் அவருக்கு ஒளியையும், அருளையும் குறைவின்றி வழங்கப் பிரார்த்திக்கின்றேன்.

நமது பிரதேசத்திலுள்ள பள்ளிவாசல்கள், சமய நிறுவனங்களுக்கு தாங்கள் அளித்துவரும் உதவி ஒத்தாசைகளை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக. அரசியல்வாதிகளின் நிதிப்பங்கீடுகளில் சமய நிறுவனங்களுக்கும் பங்களிப்புச் செய்யும் தங்களின் துணிவை மேலும் மேலும் வழங்க அல்லாஹ் அருள்புரிவானாக.

சமய கோட்பாடுகளை மனிதனின் பூரணமாக பின்பற்றி வாழும்போது தான் உலகத்தில் சாந்தி சமாதான நிலைபெறும். அந்த வகையில் சமயங்களின் வழியில் நாம் நடந்தது செல்ல வல்லநாயனை வேண்டிநிற் கின்றேன்.

அல்ஹம்துலில்லாஹ்.

**அல்-ஹாஜ். எம்.பி. அலியார் ஹஸறத் (தேவ்பந்து) ஜே.பி,**
அமீர், மஜ்லிஸ் அஷ்ஷூறா, சம்மாந்துறை,
தலைவர், ஜம்இயத்துல் உலமா, சம்மாந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை பதில் தலைவர்

## P.P. கிதிர் முஹம்மட் J.P.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பம் செய்கின்றேன். அல்ஹம்துலில்லாஹ்

சம்மாந்துறையின் சமகால அரசியல் வரலாற்றின் கதாநாயகன், மண்ணின் மைந்தன் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் சட்டத்தரணி, அல்-ஹாஜ் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களைப் பாராட்டிக் கௌரவிப்பது சம்மாந்துறை மக்களின் தலையாய கடமையாகும்.

இந்தப் புனிதமான நிகழ்வை மையமாகக் கொண்டு மலர் ஒன்றை வெளியிட உத்தேசித்திருப்பதைப் பாராட்டுகின்றேன். மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

சமய, கல்வி, கலை கலாச்சார விழுமியங்களுக்கு மத்தியிலே மலர் மலர்வது அதன் சிறப்பு அம்சங்களில் ஒன்றாகும். இதனை மக்கள் விரும்புகின்றனர். அவர்களின் எதிர்பார்ப்பும் அதுவாகும். மலர் சம்மாந்துறை வரலாற்றிலே பொன் எழுத்துக்களால் பொறிக்க வேண்டியதாகும். சரித்திரத்திற்கு இது ஒரு சான்றாகவும் அமையும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அம்பாறை மாவட்டத்திலே, சம்மாந்துறை பிரதேசத்திலே வரவேற்பு விழாவும், மலரும் அல்-ஹாஜ் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் பா.உ. அவர்களுக்கு மக்கள் இணைந்து செயல்படுத்துவது அன்னாரின் குணத்திற்கும் - செயல்திறனுக்கும் எடுத்துக் காட்டாக அமைகிறது.

எமது கலாச்சாரத் தனித்துவத்தையும், சேவைத் திறனையும் கட்டியெழுப்பும் மலராக, இம்மலர் மலர்ந்து மணம் பல வீசவேண்டும். மேலும் விழாவும் - மலரும் சிறப்பாக அமைவதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.

**P.P. கிதிர் முஹம்மட் J.P.**
சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை பதில் தலைவர்
இஸ்லாமிய செயலகம் - சம்மாந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியஸ்த சபைத் தலைவர்

**எஸ். அப்துல் றாஸிக் J.P.**

சம்மாந்துறையின் வரலாற்றில் இளம் வயதிரனரான ஒருவர் நீர்ப்பாசன அமைச்சரான நியமனம் பெற்றுள்ளமையிற்று மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம்

இவரது சேவை முழு நாட்டிற்கும் பயனளிக்கும் விதத்தில் திட்டங்கள் உருவாக்கப்பட்டு நடந்தேறிவருகின்ற நிகழ்வுகளையும் நாம் அவதானிக்கும் போது, மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் பொருத்தமான ஒருவருக்கு இப்பதவிணை வழங்கியுள்ளமை பாராட்டப்படவேண்டிய அம்சமாகும்.

கல்லோயாத்திட்டத்தின் மூலம் அம்பாறை மாவட்டத்தில் விவசாய அபிவிருத்திகள் முன்னேறி வந்தாலும், தமிழ், முஸ்லிம் பிரதேசங்கள் ஏதோ ஒருவகையில் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளமையை நிராகரிக்க முடியாது. இந்த அடிப்படையில் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களினால் தீர்க்கதரிசனத்தோடு செய்யப்பட்டுள்ள நீர்ப்பாசன அமைச்சர் என்ற இந்நியமனத்தால் அம்பாறை மாவட்டத்தின் நீர்ப்பாசனக்குறைபாடுகள் பூர்த்தி செய்யப்படு மென்ற நிம்மதிப்பெரு மூச்சை விடுகின்றோம்.

குறிப்பாக சம்மாந்துறைப்பிரதேசத்தின் விவசாய நடவடிக்கைகளுக்கு போக்குவரத்து சீராக இல்லாதிருந்து வந்த குறைபாடுகள் காலம் காலமாக நாம் கண்டுவந்துள்ள , அனுபவித்து அல்லல்பட்ட வரலாறுகள் அதிகம் அதிகம்.

இன்று அச்சோகத்தில் இருந்து விடுபட்டிருக்கும் காட்சிகளை நாம் அவதானிக்கின்றோம். நெயினாகாட்டுப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள மூன்று பாலங்கள், எதிர்காலத்தில் சீரமைக்கப்படவுள்ள சம்மாந்துறை ஹிஜ்ரா சந்தி தொடக்கம் இறக்காமம் ஊடாக செல்லவிருக்கும் பாரிய பாதை அபிவிருத்தி வேலைகள் நமது விவசாய தேவைகளில் அரைவாசியை பூர்த்தி செய்துவிடும் என எதிர்பார்க்கின்றோம்.

மிகக்குறுகிய காலத்தில் இப்பிரதேச மக்களின் விவசாயத்தேவைகளை இனம் கண்டு தீர்த்து வைக்கப்போராடிவரும் கௌரவ அமைச்சர் அல்-ஹாஜ் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கு எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதுடன் வல்ல அல்லாஹ் சகல பாக்கயங்களையும் வழங்கப் பிரார்த்திக்கின்றோம்.

**அல்-ஹாஜ் எஸ். அப்துல் றாசிக் (ஜே.பி)**
**செயலாளர் நாயகம்,**
**மஜ்லிஸ் அஷ்-ஷூறா,**
**தவிசாளர், மத்தியஸ்த சபை, சம்மாந்துறை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாந்துறையின் மூத்த உலமா
செய்குத் தத்ரீஸ்
## மௌலவி O.M. **பாசி ஆலிம்**

அல்லாஹ் மஹா பெரியவன். அவன் ஏழு வானங்களையும் தட்டுதட்டாக படைத்து அவைகளில் எந்த குறையுமின்றி அமைத்து அதில் கோடிக் கணக்கான மலாயிகா அமரர்களை படைத்து அதில் நிரப்பியுள்ளான். அதைப்போன்று பூமியைப் படைத்து அதில் மனு ஜின்கள் உட்பட கோடிக்கணக்கான ஜீவராசிகளையும் படைத்து அவன் அர்ஷில் அமர்ந்து ஆட்சி புரிகிறான். அவனது வேலைகளில் ஒன்று சிலரை உயர்த்துவான். சிலரை தாழ்த்துவான். ஆனால் அல்லாஹ் உயர்த்தியவர்களை தாழ்த்தவில்லையே என்றும், தாழ்த்தியவர்களை உயர்த்தவில்லையே என்றும் மனிதர்களில் சிலர் கவலைப்படுவதுமுண்டு. இப்படி சொல்லும் நோய் உலகமுழுவதிலும் பரவியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

கிழக்கில் புகழ்பெற்று விளங்கும் பெரிய ஊர் சம்மாந்துறை. சம்மாந்துறையைப் பற்றி முதலில் பேச விரும்புகின்றேன். சம்மாந்துறை மண்ணில் பிறந்த மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ர.ஃப் அவர்கள் இலங்கை முஸ்லிம்களை ஒரு கொடியின் கீழ் கொண்டுவர வேண்டுமெனும் நோக்கில் அரசியலில் ஈடுபடத் தொடங்கி முஸ்லிம் காங்கிரஸ் என்ற ஒரு கட்சியை உருவாக்கினார். அவர் பாராளுமன்றத்தில் பேசத் தொடங்கினால் அவரின் திறமையான பேச்சைக் கண்டு எதிரிகள் கூட ஓடிவந்து அவருடைய திறமையான பேச்சை செவிமடுக்கக் குந்தி விடுவார்கள். சுருக்கமாகச் சொல்லப்போனால் அவருடைய திறமையான புத்திசாலித்தன்மையால் இலங்கை முஸ்லிம்களிடம் நற்பெயரை பெற்றுவிட்டார். அல்ஹம்துலில்லாஹ்!

மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ர.ஃப் அவர்களின் அரசியல் தொட்டில் தாலாட்டி பயிற்றப்பட்ட அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களும் மர்ஹூம் அஷ்ர.ஃபை போல பேச்சுத் திறமையிலும் காலூன்றிவிட்டார். பேச்சுத் திறமையை கொடுப்பது கொடுக்காமல் இருப்பது அல்லாஹ்வைப் பொறுத்த விடயமாகும். அல்லாஹுத்தஆலாவின் நாட்டம் இல்லாதிருந்தால் அவருக்கு அமைச்சர் பதவி கிடைத்திருக்கவே மாட்டாது. ஏனெனில் ஒரு மரத்தின் பழுத்த இலை கீழே விழுவதாயினும் அல்லாஹ்வின் நாட்டமில்லாமல் கீழே விளவேமாட்டாது என்று அல்லாஹ் பரிசுத்த குர்ஆனில் கூறுகிறான்.

முன்னிருந்த அரசியல்வாதிகளின் சிந்தனையில் ஏற்படாத நல்ல சிந்தனை இவருக்கு வந்ததின் காரணமாக சம்மாந்துறை ஊர் நுழைவாயில் கட்டிடம் காணக் கூடியதாகவும் மேலும் உலமாக்கள் ஒன்று கூடி ஆலோசனை செய்து நற்பணிசெய்ய ஒரு கட்டிடமும் கட்டப்படுகிறது. அக்கட்டிடம் கட்டப்பட்டதும் அதில் பணியாற்றும் உலமாக்களின் உயர்ந்த பணியின் காரணமாக அந்த கட்டிடத்தில் இருந்து அல்லாஹுத்தஆலாவின் அருள் என்ற சமுத்திரம் பெருக்கெடுத்து சம்மாந்துறை முழுக்க பரந்தோடுவது மட்டுமல்லாமல் இதர பகுதிகளுக்கும் பெருக்கெடுத்து பாய்ந்தோடி விடும். இதுவும் அமைச்சர் அன்வர் இஸ்மாயில் ஊருக்காக செய்யும் சேவைகளில் ஒன்றுதான். இதற்காகவெல்லாம் என்றும் அவரும் அல்லாஹ்வுக்கு நன்றி செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாந்துறை பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவர்

**டாக்டர் I.L. அப்துல் மஜீட்**

அஸ்ஸலாமு அலைக்கும்,

இலங்கை நாட்டின் மிகவும் பிரபலம் பூத்து ஜொலித்துக் கொண்டிருக்கும் சம்மாந்துறையின் அரசியல் விடிவெள்ளியும் இளைய தளபதியும், சட்டத்தரணியுமாகிய அல்-ஹாஜ் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில், நீர்ப்பாசனத்துறை அமைச்சருக்கு வரவேற்பு விழா செய்தி எழுதுவதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன். காலாகாலமாக பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தையும் அமைச்சுப் பொறுப்புக்களையும் கட்சித் தலைமைத்துவத்தையும் பெற்றுத் தந்த அன்னைமார்களுக்கு அல்லாஹ் வல்ல இறைவன் ஜென்னத்துல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கத்தை வாரிவழங்குவானாக. ஆமீன் .... யாரப்பல் ஆலமீன்........

இந்த வரிசையில் நாதியற்று, அடக்கி ஒடுக்கப்பட்ட எமது முஸ்லிம் சமூகத்தின் உரிமைக் குரலாக பரிணமித்த உதய சூரியனும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவருமான புரட்சிப் புயல் அஷ்-ஷேக், அல்-ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் எம்மை விட்டுப் பிரிந்து சென்றாலும் இவரது அரசியல் வாரிசாகவும், வளர்ப்பு மகனாகவும் அல்-ஹாஜ் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அமைச்சர் அவர்களை விட்டுச் சென்றார்கள். எட்டிப்பிடிக்கவே இயலாத அரசியல் வியூகம் கொண்ட அமைச்சர் அவர்கள் தனது இளம் வயதிலே சமூக சேவைகளில் முற்போக்கு எண்ணம் கொண்டவர். பாடசாலை வாழ்க்கையில் மிகவும் திறமை கொண்டு விளங்கியவர். மாபெரும் தலைவர் அவர்கள் கற்ற அதே சட்டக் கல்லூரியில் சட்டத்துக்கான பட்டம் பெற்று இதன் பின் துறைமுக அபிவிருத்தி, கப்பல்துறை அமைச்சின் கீழ் இணைப்பாளராகச் செயற்பட்டு பாராளுமன்ற உறுப்பினராக, அதன்பின் கிழக்கு அபிவிருத்தி உட்கட்டமைப்பு பிரதியமைச்சராகி இன்று இரு தடவைகளாக நீர்ப்பாசனத்துறை அசைச்சராக இலங்கை மக்களுக்கு சேவை செய்து கொண்டிருக்கின்றார்.

தனது இளம் வயதிலே தந்தையை இழந்து மிக அண்மையில் தாயையம் இழந்து ஆறாத் துயரில் பரிதவித்துக் கொண்டிருக்கும் அமைச்சர் அவர்களின் துயரத்தைப் போக்கும் சக்தியாக படைபடையாக உள்ள ஆதரளவாளர்கள் தான் இவர் வாங்கும் சுவாசக் காற்றாகும்.

அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றி வாகைக்குக் காரணகர்த்தாவாக இருந்த அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் ஜனாதிபதி அவர்களினதும் அவரது இளைய சகோதரரும் அரசியல் ஆலோசகருமாகிய பசல் ராஸபக்ஷ அவர்களின் இதயதில் தனக்கென்று ஒரு தடயத்தைப் பதித்துள்ளார். இன்ஷாஅல்லாஹ் மிக விரைவில் மிகத் துல்லியமான அரசியல் காய் நகர்த்தல்களினால் கெபினட் அமைச்சுப் பொறுப்புக் கிடைத்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றபோதும் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பறங்கியர்கள் என்று இனப்பாகுபாடின்றி அவரவர் சமயங்களுக்கு மதிப்பளிப்பதில் நல்ல குணாம்சங்களையும் நற் பண்புகளையும் கொண்ட இவர் எல்லா சமூகத்தவர்களினதும் விடுதலைக்காகத் தொகுதி ரீதியாகவும் மாவட்ட, மாகாண ரீதியாகவும் பரிணமித்து இன்று முழுத்தேசத்துக்குமே தொண்டு செய்யும் ஒரு ஊழியனாக வளர்ந்துள்ளார்.

இந்தவகையில் அபிவிருத்தித் திட்டங்களின் மிகவும் மோகம் கொண்ட இவர் இலங்கையிலேயே இல்லாத கலாச்சார ரீதியான வடிவமைப்புக்களைத் தீட்டுவதில் மிகமிக நவீனமானவர். இந்த வரிசையில் மகாஓய, ரம்புக்கன் ஓய நீர்ப்பாசனத் திட்டம், நெய்னாகாடு பாலங்கள், குருணாகல் தெதுரு ஓய நீர்ப்பாசனத்திட்டம், வெலிஓய நீர்ப்பாசனத்திட்டம், வெகரகல நீர்ப்பாசனத்திட்டம், நெயினாகாடு வீரையடி அணைக்கட்டு, உடங்காவெளி அணைக்கட்டு, சம்மாந்துறை கேற்வே, அதன் பக்கத்தில் அமைந்திருக்கும் அம்பாறை மாவட்ட உலமாக்கள் காரியாலயம், சம்மாந்துறை சுப்பர் மார்கட், பங்களாவடியடி விளையாட்டு நிலையம், பாடசாலைக் கட்டிடங்கள், வைத்தியசாலைக் கட்டிடங்கள் இப்படிப் பல அரிய சேவைகளையும் புரிந்துள்ளார்.

மேலும் இவர் இதுபோன்ற பலதரப்பட்ட சேவைகளை மக்களுக்குச் செய்து கொடுக்க வேண்டுமெனவும், இவரது வரவேற்பு விழா சிறப்புறவும், இவரது ஆயுள் நீண்டகாலம் நிலைக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்தவனாக மனமாற வாழ்த்தி வரவேற்றவனாகவும், மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ர∴ப் அவர்கள் இல்லாத குறையை நிவர்த்தி செய்ய வேண்டும் எனவும், கூறி எனது ஆசியுரையை இத்துடன் நிறைவு செய்து கொள்கின்றேன்.

**டொக்டர் ஐ.எல். அப்துல் மஜீட்,**
எதிர்க்கட்சித் தலைவர் (ஐ.ம.சு. முன்னணி)
பிரதேச சபை, சம்மாந்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டு விழாக் குழு உப தலைவர்

## ஜனாப் M.A. சபூர் தம்பி

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் அவர்கள் தோழர்கள் மீதும் ஸலவாத் சொன்னவனாக இந்த மலருக்கான ஆசிச் செய்தியை எழுதுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பல நூற்றாண்டுகால வரலாற்றுப் பழமையும் பெருமையும் கொண்ட பொற்பதியாம் சம்மாந்துறை ஊரில் எம்.எல். இஸ்மாயில் அவர்களுக்கும் - சுபைதா உம்மா அவர்களுக்கும் தலைமகனாகப் பிறந்த சகோதரர் கௌரவ அல்ஹாஜ் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கு இம்மண்ணின் மைந்தர்கள் எடுக்கும் மாபெரும் வரவேற்பு விழாவிற்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சம்மாந்துறை எனும் நம்மூரில் அரசியல் அபிவிருத்திப் போக்கில், அல்ஹாஜ் எம்.ஏ. அப்துல் மஜீட், கௌரவ யூ.எல்.எம். முகைதீன், மாமனிதர் அல்ஹாஜ் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் போன்ற கௌரவமான வரிசையில், இன்று தடம்பதித்து சாதனை புரிந்துவரும் இலட்சிய நாயகன் அமைச்சர் அல்ஹாஜ் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களின் பெயரும் முக்கிய இடத்தை பிடித்துள்ளது என்பதையிட்டு சந்தோசமடைகின்றேன்.

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தியானது அப்பிரதேச மக்களது வாழ்வியலில் ஒரு பாரிய முன்னேற்றத்தினையும் மாற்றத்தையும் ஏற்படுத்தக்கூடியது என்பது வரலாற்றில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் பேருண்மையாகும். இவ்வுண்மையை கருத்திற்கொண்டு முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றிலே என்றுமில்லாத சோதனைகள் தழுவிய இக்கால கட்டத்தில் - சம்மாந்துறைத்தாயின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பெற்று தந்து இப்பிரதேசத்தின் அபிவிருத்தியே தனது இலக்கு என வரிந்து கட்டிக்கொண்டு, தேசிய அரசியல், அபிவிருத்தி ஆகிய இரண்டு துறைகளிலும் தனது துரித நடவடிக்கை மூலமாக பிரசாசித்து வரும் இவ்விழாவின் கதாநாயகன் தலைவரின் அந்திம காலத்தில் அரசியல் வாரிசாக ஆசிர்வாதம் பெற்ற அருந்தவப் புதல்வனை இச்சம்மாந்துறை மண் பெற்றுள்ளமை இம்மண்ணும் மக்களும் பெற்ற வரமென்றே கூறவேண்டும். தலைவரின் அரசியல் வாரிசாக பிரகடனப்படுத்தப்பட்ட இந்த இளம் தலைவனின் அரசியல் ரீதியிலான அபிவிருத்திப் போக்கு என்பது சமூகத்தை நோக்கியே அமைந்து செல்கின்றது, மிகவும் தூரநோக்குடன் சிந்தித்து செயற்படுகின்ற கௌரவ அமைச்சர் அவர்களின் சம்மாந்துறைக்கான செயற்பாடானது, ஊர் மக்களின் கவனத்தையும், பிரதேச மக்களின் கவனத்தையும் ஈர்த்துள்ளது என்பதில் சந்தேகமில்லை. அல்லாஹ்வின் உதவியினால் இந்த ஊருக்கு முகம்கொடுத்த இந்த இளம் தலைமகனை ஊர்மக்கள் சார்பாகவும், இவ்விழாக் குழு உப தலைவர் என்றவனாகவும் நீண்ட ஆயுளையும் பொறுப்புணர்வையும் ஆயுள் வரை இறைவன் கொடுக்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kalapooshanam, Alhaj, Moulavi.
**A.C.A.M.Buhary (Ghafoori) J.P.**
Chief Trustee - The Board of Trustees, Grand Mosque, Islamic Secretariat, Sammanthurai.
President - Thableequl Islam Arabic college, Sammanthurai.

No: 23, Bazaar Street,
Sammanthurai.05 (32200)
Sri Lanka.
Telephone No: 009467 - 2260055, 0777- 512791

அஷ்ஷஹீத் கலாநிதி M.H.M. அஷ்ர.்.ப் என்ற மாமனிதர் முஸ்லிம் காங்கிரஸ் என்ற பெயரில் ஒரு தோட்டத்தை உருவாக்கினார். அதில் ஆயிரக் கணக்கான இளைஞர்களைப் போராளிகள் என்ற பெயரில் கன்றுகளாக நாட்டி நீரூற்றி பசளை இட்டு பாதுகாத்து வளர்த்தார். அவற்றுள் சில காய்ந்து கருகி விட்டன.

வேறு சில கன்றுகள் பயனற்றவைகளாக வளர்ந்து அவரையே விமர்சித்து நலன் காண்கின்றன. பெரும்பாலான கன்றுகள் ஓங்கி வளர்ந்து நிழல்தரு மரங்களாக மட்டுமன்றி முகவரி அற்றிருந்த முஸ்லிம் சமூகத்தின் முதுகெலும்புகளாக மாறி வெற்றிலையாக மிளிர்ந்து கொண்டிருக்கின்றனர்.

தலைவர் அவர்களால் அவதானத்துடன் வளர்ந்தெடுக்கப்பட்ட மரங்களில் ஒன்றுதான் இன்று மிகவும் இளவயதில் அமைச்சராக நம்முன் காட்சியளிக்கும் சட்டத்தரணி சகோதரர் அன்வர் இஸ்மாயில் ஆவர். தலைவர் அஷ்ர.்.ப் ஒரு அரசியல்வாதியாகவன்றி ஒரு அரசியல் ஞானியாக சிறப்புற்றிருந்த காரணத்தினால் தான் அமைச்சர் அன்வர் இஸ்மாயில் போன்ற எத்தனையோ துடிப்புள்ள இளைஞர்களை நமது சமூகத்தின் தலைவர்களாக இனங்கண்டு அவர்களை வளர்த்து விட்டுச் சென்றுள்ளார்.

அமைச்சர் அன்வர் இஸ்மாயில் மிகவும் துடிப்புள்ள இளைஞன் மட்டுமன்றி எடுத்த காரியத்தை முடித்து வைப்பதிலும் வல்லவர் என்பதை அவர்மீது சேறு பூச முனைபவர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சிறு வயது முதலே சமூக சேவையில் மிகத் துடிப்பாக இயங்கிய அன்வர் இஸ்மாயில் ரிஸ்லின் என்ற செல்லப் பெயரினால் பிரபல்யம் பெற்றிருந்தார். பள்ளிப் படிப்பைப் பயின்று கொண்டிருக்கும் போதே Muslim United Student Association (MUSA) என்ற பெயரில் ஒரு சமூக சேவை இயக்கத்தை நிறுவி அதன் தலைவனாகவிருந்து அதன் போஷகர்களுள் ஒருவனாக என்னையும் தெரிவு செய்திருந்தமை அந்தவயதிலேயே அவர் என்மீது வைத்திருந்த மதிப்பையும் அபிமானத்தையும் எண்ணும் போது எனது உள்ளம் மகிழ்ச்சியடைகின்றது.

முஸா என்ற இயக்கத்தைக் கொழும்பில் உள்ள பாமிஸ் என்ற அமைப்புடன் தொடர்புபடுத்தி பல்வேறு சமூக நலத்துறைகளில் ஈடுபட்டிருந்தார், விளையும் பயிர் முளையில் தெரியும் என்பதற்கொப்ப இளமைக்காலம் முதலே சிறந்த சமூகப் பணிகளில் தன்னை இணைத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட ரிஸ்லின் சட்டக்கல்லூரியிலும் தமது முதன்மையையும் திறமையையும் வெளிப்படுத்தத் தவறவில்லை. தலைவர் அஷ்ர∴ப் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட முஸ்லிம் சமூக விடுதலைக்கான அரசியல் அரங்கில் சட்டக் கல்லூரி மாணவனான ரிஸ்லின் தன்னை இணைத்துக் கொண்டமை வியப்பிற்குரிய விடயமல்ல.

தலைவர் அவர்கள் அமைச்சரானதும் தனது இணைப்புச் செயலாளராக (Co-ordinating Secretary) அன்வரை நியமித்து சகல அமைச்சர்களிடமும் இவரை அறிமுகப்படுத்தி தனது வேலைப்பழுவைக் குறைத்துக் கொள்ள இவரைப் பயன்படுத்திக் கொண்டார். இதன் மூலம் இவரது திறமைகளை அவர் அப்போதிருந்தே இனங்கண்டு இவரை எதிர்காலத்தில் சிறந்த அரசியல்வாதியாக உருவாக்குவதற்கான அத்திவாரமிட்டார். இதனால் இவர் தலைவரின் அபிமானத்திற்கும் நம்பிக்கைக்குரியவருமாக மாறிவிட்டார்.

தனக்கும் அன்வர் இஸ்மாயிலுக்கும் இடையிலுள்ள கண்ணாடி மரைக்காரின் குடும்பத் தொடர்பினை மேலும் வலுப்படுத்த தனது மருமகன் ஸல்மானை அன்வர் இஸ்மாயிலின் சகோதரி பஸ்லுனாவுக்கு மணமுடித்துக் கொடுத்ததன் மூலம் தனது நெருங்கிய உறவினராகவும் ஆக்கிக் கொண்டார். இரண்டாயிரத்து ஓராம் ஆண்டில் மக்கள் பிரதிநிதியாக பாராளுமன்றத்தினுள் நுழைந்த இவர் 2004 இல் கிழக்கு அபிவிருத்தி உட்கட்டமைப்பு பிரதி அமைச்சராகவும், 2006 இல் நீர்ப்பாசன அமைச்சராகவும் பதவிகள் வகித்தமை சம்மாந்துறையின் வரலாற்றில் இவருக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும்.

கிழக்கு அபிவிருத்தி உட்கட்டமைப்பு பிரதி அமைச்சராகப் பதவி வகித்த போது பல அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்தார். சம்மாந்துறையின் இதயமான ஹிஜ்ரா சந்தியில் சிறந்த கட்டடக் கலைஞர்களைப் பயன்படுத்தி சந்தைக் கட்டிடத் தொகுதியைப் பூரணப்படுத்தியதுடன், ஹிஜ்ரா ஜும்ஆப் பள்ளிவாசலின் முகப்புத் தோற்றத்தையும் வடிவமைத்து அழகுபடுத்தினார். அதனை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்க அன்றைய பிரதமராகவிருந்த ம்ஹிந்த ராஜபக்ஷ அவர்களை அழைத்து வந்து எதிர்கால ஜனாதிபதி என ஆருடம் கூறி அவரது வெற்றிக்காக உழைத்ததன் மூலம் அவரது செல்லப் பிள்ளையாகவும் மாறிவிட்டார். இவரது ஆளுமையையம் செயற்றிறனையும் கண்ட ஜனாதிபதி மிக முக்கிய அமைச்சுகளில் ஒன்றான நீர்ப்பாசன அமைச்சர் என்ற அந்தஸ்தை அவருக்கு வழங்கிக் கௌரவித்தார். இதன் மூலம் தேசிய ரீதியில் பலம் பொருந்திய பொறுப்பு வாய்ந்த அமைச்சராகவிருப்பது எமக்கு மட்டற்ற மகிழச்சியாகும்.

இத்தனைக்கும் மகுடம் சூட்டியது போன்று 2006 இல் சம்மாந் துறையிலே தேசிய மீலாத் விழாவை நடாத்த மேதகு ஜனாதிபதி அவர்களிடம் அனுமதி பெற்று கோடிக் கணக்கில் சம்மாந்துறைப் பிரதேசத்தின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தியமை எமது நெஞ்சை விட்டும் நெகிழாத நிகழ்வாகும். பற்றிவாசல்கள், கலாசார நிலையங்கள், சம்மாந்துறையின் முகப்பில் ஜம்இய்யத்துல் உலமாவிற்கான அழகிய கட்டிடம், சம்மாந்துறையின் முகப்புத் தோற்றம், பாடசாலைக் கட்டிடங்கள், பாதைகள், மின் இணைப்பு போன்ற அபிவிருத்திப் பணிகளுக்கு முன்னுரிமை வழங்கியதன் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய கலாசார விழுமியங்களை வளர்த்தெடுப்பதில் இவரது கரிசனையின் பெறுமானத்தையும் அழகியற் கலையில் இவரது உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றது.

கிழக்கிலங்கையிலேயே தரம் வாய்ந்த அறபுக் கல்லூரிகளுள் ஒன்றான தப்லீகுல் இஸ்லாம் அறபுக் கல்லூரியின் விடுதிக் கட்டிடத்திற்கான பணிகளை ஆரம்பித்து அக்கல்லூரியினைப் பாராளுமன்றத்தின் அறக்கட்டளை நிறுவனமாகப் பதிவு செய்துகொள்ள முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். தான் அமைச்சராக இருப்பதால் தனது பெயரில் அதனை முன்மொழிய முடியாத காரணத்தால் மக்கள் விடுதலை முன்னணியின் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் முஸம்மில் அவர்களின் பெயரில் அதற்கான வேலைகள் முடிவுறும் நிலையில் உள்ளது. அத்துடன் சம்மாந்துறையின் பழமைவாய்ந்த பகுதிகளை உள்ளடக்கி புனித பிரதேசமாகப் பிரகடனம் செய்ய நடவடிக்கை எடுத்தால் என்ன என்ற எனது விருப்பத்தை நம்பிக்கையாளர் சபை மூலம் வெளிப்படுத்திய போது அதற்குப் பூரண ஆதரவளித்து அதன் இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அவரைக் கௌரவப்படுத்த சம்மாந்துறை மக்கள் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளமை அவரது சேவைக்கு அவர்கள் நன்றிகூறும் ஒரு நிகழ்வாகும். ‘‘அல்ஹம்துலில்லாஹ்’’

இந்த சந்தர்ப்பத்தில் மலருக்கு ஆசிச்செய்திகள் ஜனாதிபதி. பிரதம மந்திரி, சபாநாயகர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உலமாக்கள், உள்ளூர் பிரமுகர்கள் அனைவருக்கும் எமது நன்றி அத்தோடு கட்டுரைகள் வழங்கியோர் கவிதைகள் வழங்கியோர் அனைவரையும் நாம் நன்றியுடன் பாராட்டுகிறோம். மலர் குழு, விழாக்குழு உறுப்பினர்கள் அனைவரும் எமது நன்றிக்குரியவர்கள்.

இறுதியாக அல்லாஹ் அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் பணிகளைப் பொருந்திக் கொள்வதுடன் சம்மாந்துறை மண்ணின்மைந்தனாக தேசிய ரீதியில் தொடர்ந்து பணி புரிய வாய்ப்புக்களை வழங்குவதுடன் அவனது அருள் பெற்ற அடியானாகவும் ஆக்குவானாக. சகல வளங்களையும் அவருக்கு வழங்கி சகல தீங்குகளிலிருந்தும் பாதுகாப்பானாக.

வஸ்ஸலாம்.

**மௌலவி ஏ.ஸீ. ஏ. எம். புஹாரி**
மலர்க்குழு, விழாக்குழுத் தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

கலாபூசணம் மௌலவி
அல்ஹாஜ் ஏ.ஸி.ஏ.எம். புஹாரி ஜே.பி

அல்ஹாஜ் எஸ்.ஏ. றாசிக், முன்னாள் அதிபர்.

கலாபூசணம் அல்ஹாஜ் ஏ.ஸி. இஸ்மாலெப்பை, முன்னாள் அதிபர்.

அல்ஹாஜ் ஏ.எல்.எம். யாசின் ஜே.பி.

அல்ஹாஜ் எம்.எச். அஸீஸ் மெய்டீன், பிரதிக் கல்விப் பணிப்பாளர்.

அல்ஹாஜ் எம்.ரி.எம். சஹீட் M.Sc

ஜனாப் ஏ.பி.எம். றகீம் M.Sc

ஜனாப் எம்.ஏ. சபூர்தம்பி அதிபர்

அல்ஹாஜ் யூ.எல். பஸீர்

ஜனாப் எம்.ஏ.எம். றமீஸ்

ஜனாப் யூ.எல்.ஏ. றசீட்.

ஜனாப் எம்.சி. அன்ஸார்

ஜனாப் நபீஸ் இஸ்மாயில்

ஜனாப் எம்.எச்.எம். ஹில்மி

ஜனாப் சீ.எம். தௌபீக் (விரிவுரையாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் அன்வர் இஸ்மாயிலின் ஆசிரியர் நா. செல்வக்குமாரன் அவர்கள் வாழ்த்துகிறார்



அன்வர் இஸ்மாயில் சட்டபீட மாணவனாக இருக்கும்போது விவாத போட்டியில் வெற்றி பெற்றமைக்காக சட்டபீடாதிபதி நா.செல்வகுமாரனிடம் இருந்து சான்றிதழ் பெறுகின்றார்

பாராளுமன்ற உறுப்பினரும், நீர்ப்பாசன அமைச்சருமான கௌரவ அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கு பாராட்டு விழா எடுக்கப்படும் இவ் வேளையில் இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

1980ஆம் ஆண்டுகளில் வாலிபனாகவிருந்த அன்வர் இஸ்மாயில் கொழும்புப் பல்கலைக்கழக சட்டபீட மாணவராக உள்புகுந்த வேளை அங்கு நான் அரசியலமைப்புச் சட்டம், நிருவாகச் சட்டம், உள்ளூராட்சிச் சட்டம் போன்ற பாடங்களில் விரிவுரையாற்றி வந்தேன். எனது விரிவுரைகளைக் கிரமமாகவும், கவனமாகவும் செவிமடுத்த அன்வர் இஸ்மாயில், வகுப்புக் கலந்துரையாடல்களின் போது காத்திரமான கருத்துக்களைத் தெரிவித்தும் விவேகமான வினாக்களைத் தொடுத்தும் தனது திறமையை வெளிப்படுத்தியமையை நான் நினைவு கூர்கிறேன்.

அவரது விமர்சனக் கண்ணோட்டம், விவாதத் திறன் என்பன பாராளுமன்ற அலுவல்களிலும் விவாதங்களிலும் கலந்துகொண்டு தனது பங்களிப்பை நேரிய முறையில் வழங்குவதற்குக் கைகொடுத்து உதவுகின்றன. எனின், தாக்கமான விடயங்களில், உதாரணமாக அரசியலமைப்புத் திருத்தம்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம் என்பவை தொடர்பாகத் தனது பங்களிப்பை வழங்குவதற்கு முன்பாகத் தன்னைத் தயார்படுத்தும் சீரிய பண்பைக் கொண்டுள்ள அன்வர் இஸ்மாயில் அவர்கள் அரசியலமைப்புச் சட்டம் தொடர்பான ஐயங்களைத் களைவதற்காக என்னை அணுகி ஆலோசனை பெற்றமையும் எனது மனக்கண் முன் வந்து மறைகின்றது.

சிறிய வயதினிலேயே நாட்டின் பொதுவாழ்க்கையில் - தேசிய மட்ட அரசியலில் - அமரர் அஷ்ரப்பின் வழிநடத்தலில் தன்னை ஈடுபடுத்தி வந்த அன்வர் இஸ்மாயில் படிப்படியான முன்னேற்றம் கண்டு இன்று அமைச்சராக உயர்ந்துள்ளமை இவரின் செயற்றிறனுக்குச் சான்று பகருகின்றது.

நெற்பயிர்ச் செய்கையையும் விவசாயத்தையும் பிரதான தொழில் வாய்ப்பாகக் கொண்டுள்ள இந்நாட்டில், மக்களின் பிரதான உணவுத் தேவைப்பாட்டைப் பூர்த்திசெய்வதற்கு உதவி செய்வதில் அத்தியாவசியத் துறையாக விளங்கும் நீர்ப்பாசனத் துறைக்கு அமைச்சராக நியமிக்கப்பட்டமை இவரின் செயற்பாட்டில் மாண்புமிகு ஜனாதிபதிக்குள்ள நம்பிக்கையைக் காட்டுகின்றது.

இந்த நம்பிக்கைக்கும், நாட்டின் அமைதி, அபிவிருத்தி, மற்றும் சகவாழ்வு என்பன உருவாக்குவதற்கு வேண்டிய புரிந்துணர்வும் பரஸ்பர விட்டுக்கொடுப்பும் அவசியமாக விளங்கும் இவ்வேளையில் நிரந்தர சமாதானத்தை வேண்டி நிற்கும் மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்புக்கு மதிப்பளிக்கும் விதமாக பொறுப்பான பிரதிநிதியென்ற வகையில் தூரநோக்குட னும் நேரிய சிந்தனைனும் செயற்பட மனத்தைரியத்தையும் திடசித்தத்தையும் அன்வர் இஸ்மாயில் கொண்டவராகுக.

அவ்வாறு செயற்பட எனது அன்பார்ந்த ஆசிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். கௌரவ அன்வர் இஸ்மாயில் நீண்ட காலம் மக்களுக்கு மென்மேலும் சேவைபுரிய வழிசமைக்கும் வகையில் தேக சுகத்துடனும், மன வலிமையுடனும் திகழ எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**நா. செல்வக்குமாரன்,**
**சட்ட பீடாதிபதி,**
**கொழும்புப் பல்கலைக்கழகம்,**
**3பீ-1, தயா வீதி,**
**கொழும்பு-0**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமைச்சர் திருமண பந்தத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமைச்சரின் திருமண வைபவத்தில்
தலைவர் அஷ்ரஃபும் துணைவி பேரியல் அஷ்ரஃபும்



அமைச்சர் தன் குடும்பத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமைச்சரின் மகன் அஸ்மான் அன்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சட்டத்தரணி அன்வர் இஸ்மாயில் தனது தாயுடனும், ஒரே தங்கை ஜனுல் பஸ்லுனாவுடனும்



உயர் நீதிமன்றத்தில் அன்வர் இஸ்மாயில் சட்டத்தரணியாக சத்தியபிரமாணம் செய்ய தலைவர் அஷ்ரஃபுடனும் தனது குடும்பத்தினருடனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சட்டபீட நண்பர்களுடன்

பாராளுமன்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது





பாராளுமன்ற உறுப்பினராகி மக்களுடன்

தங்கையின் திருமணத்தின் போது தலைவர் அஷ்ர.ஃ.ப், தலைவரின் தாயார் (மதீனா உம்மா) ஆகியோருடன்





தங்கையின் திருமண வைபவத்தில் மச்சான் சல்மானும் மர்ஹூம் அஷ்ர.ஃ.ப்,மர்ஹூம் மொஹிடீன் எம்.பி(மச்சான்)., மர்ஹூம் அலிலெவ்வை மெனெஜர்(பெரியப்பா), ஆகியோரும்

விசேட பிரார்த்தனையில் தலைவரும் அமைச்சரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்வர் இஸ்மாயில் -
## மனந் திறந்து பேசுவோம்.

- றமீஸ் அப்துல்லா

சம்மாந்துறையின் அரசியலில் அன்வர் இஸ்மாயில் முடிசூடிய காலம் இது. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் முகாந்திரம் ஈசா முதல் பல விடுதலை வீரர்கள் கோலோட்சிய மண் இது. சம்மாந்துறை என்றால் அப்துல் மஜீட் என்று பேசப்பட்ட மண் இது. முஸ்லிம் காங்கிரஸ் என்றால் அஷ்ர.்.ப் என்றும் அஷ்ர.்.ப் என்றால் முஸ்லிம் காங்கிரஸ் என்றும் பேசப்படும் பெருமகனைப் பெற்ற மண் இது. இந்த மண்ணிலே தான் அமைச்சர் அன்வர் இஸ்மாயில் இன்று பேசப்படுகின்றார்.

அன்வர் இஸ்மாயிலுக்கு பல அரசியல் பின்னணி இருக்கிறதென்று சொல்வார்கள். லத்தீப் சேமன், சுலைமாலெவ்வை சேமன், அப்துல் மஜீட், அஷ்ர.்.ப், தொப்பி முகைதீன் இவர்களெல்லாம் அன்வர் இஸ்மாயிலின் குடும்பம் என்று சொல்வார்கள். ஆனால் இதுவரை சம்மாந்துறையில் அரசியல் ஆட்சியில் சம்பந்தப்பட்டது கோசப்பா குடிதான். அந்த குடியிலே பிறந்த ஒருவர்தான் அன்வர் இஸ்மாயில். எல்லாவற்றிற்கும் மேலாக ஆட்சியையும் அதிகாரத்தையும் அல்லாஹ் தான் விரும்புகின்றவர்களுக்கு வழங்குவான். அப்படியான ஒரு சந்தர்ப்பம் அன்வர் இஸ்மாயிலுக்கு கிடைத்திருக்கிறது.

அன்வர் இஸ்மாயில் கண்ணாடி மரைக்காரின் மகள் சுபைதாவுக்கும் இஸ்மாயில் மாஸ்டருக்கும் 16.07.1967 இல் பிறந்தவர். தாறுல் உலூம், மகளிர் வித்தியாலயம், சம்மாந்துறை தேசிய பாடசாலை ஆகியவற்றில் கல்வி பயின்றவர். ஆரம்பக் கல்வியில் துடுக்குத்தனம்மிக்கவர். உயர்தரக் கல்விக்குப் பின்னர் சங்கங்கள் உருவாக்குவது, பொதுச் சிந்தனைகளில் ஈடுபாடுகாட்டுதல் போன்ற விட்யங்களில் ஈடுபட்டார். இதன் விளைவாக முஸா என்ற சங்கத்தை தோற்றுவித்தார். கொழும்பு பல்கலைக் கழக சட்டபீட மாணவனாக தெரிவுசெய்யப்பட்ட இவர் அங்கு முஸ்லிம் மஜ்லிஸ், விவாதக் குழு முதலானவற்றில் முக்கிய பதவி வகித்தார்.

திராவிடர் முன்னேற்றக் கழகத்தின் செல்வாக்குமிக்க கலாபிருத்திக் கழகத்தின் உறுப்பினர் அன்வர் இஸ்மாயிலின் வாப்பா. இக்குழுவினர் நல்லவை நம்மவை என்ற கருத்தில் இருந்தார். இதில் பெரும்பான்மையினோர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரித்தனர் அதன் பிரதிநிதியாக இருந்த அட்வகேட் ஜப்பாரை ஆதரித்து அன்வர் இஸ்மாயில், றயீஸ் அப்துல்லாஹ் போன்றவர்கள் மாணவப் பருவத்தில் மேடைபோட்டு பேசுவர். இந்தப் பின்னணியில் அன்வர் இஸ்மாயில் அரசியல் ஆர்வமுள்ளவராக தொழிற்பட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸா இயக்கத்தை தேசிய ரீதியாக செயற்பட்ட பாமிஸின் கிளையாக மாற்றினார். இதன்போது இஸ்ரேல் எதிர்ப்பு ஊர்வலத்தில் சம்பந்தப்பட்டிருந்தார். அப்போது அரச படையினரால் கைது செய்யப்பட்டார். பின்னர் சட்ட பீட மாணவனாக கொழும்பு சென்றபோது அஷ்ர.்.பின் தொடர்பு இவருக்கு கிடைக்கிறது. முஸ்லிம் காங்கிரசின் முன்னணிப் போராளிகளில் ஒருவராக இவர் இனங்காணப்பட்டார். அரசியல, தேர்தல் நடவடிக்கைகளை திட்டமிடுதலில் அன்வர் இஸ்மாயில் வல்லவர். தமிழ் குழுக்களினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் கிராமங்களின் வீடியோ பிரதிகளை கொண்டு வருகின்றபோது அஷ்ர.்.பின் ஏஜன்டான அன்வர் இஸ்மாயில் சம்மாந்துறையின் அரசியல் எதிர் சக்திகளால் உந்தப்பட்டு படையினரால் கைதுசெய்யப்பட்டார். பின்னர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இவர் சிறையில் அடைக்கப்பட முயற்சிசெய்த அதேநேரம் தலைவர் அஷ்ர.்.ப், ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் செல்வாக்கினால் விடுதலை செய்யப்பட்டார். இது அன்வர் இஸ்மாயிலின் அரசியல் பிரவேசத்தின் முக்கியமான ஒரு களம். அன்று மாலை சிறைமீண்ட செம்மல் என அடையாளப்படுத்தப்பட்டு கூழப்பா சந்தியில் தலைவர் அஷ்ர.்.பால் வரவேற்கப்பட்டார். அன்றுதான் அவர் தனது முதலாவது அரசியல் உரையை நிகழ்த்தினார். மக்கள் மத்தியில் அன்வர் இஸ்மாயில் என்ற காற்று மெல்ல வீசத் தொடங்குகிறது.

தலைவர் அஷ்ர.்.ப் அவர்களின் பாராளுமன்ற உரை தொகுப்பாள ராகவும் உதவியாளராகவும் இருந்த அன்வர் இஸ்மாயில் பின்னர் அவர் அமைச்சரவைப் பொறுப்புக்களை ஏற்றபோது அவரது இணைப்பாளராக தொழிற்பட்டார். அப்போது அன்வர் இஸ்மாயில் அஷ்ர.்.பினால் பாராளுமன்ற உறுப்பினர் செயற்பாடுகளுக்காக பயிற்றுவிக்கப்பட்ட காலம் என்று சொல்ல வேண்டும். பத்திரிகையாளர் மாநாடுகளை ஒழுங்குசெய்து அமைச்சர்களையும் செயலாளர்களையும் சந்திப்பது சர்வதேச மகாநாடுகளில் கலந்துகொள்வது முதலானவற்றை அவர் தனது அமைச்சர் அஷ்ர.்.ப் அவர்களுக்காக செய்துவந்தார்.

அரசியல்வாதிகளுக்கு சொந்த ஊரில்தான் பெண் வாய்க்க வேண்டும். அரசியலுக்காக காதலை துறக்க அன்வர் இஸ்மாயில் விரும்பவில்லை. அன்வர் இஸ்மாயிலின் தலைவர் அஷ்ர.்.புக்கும் இதுதான் நடந்தது. அஷ்ர.்.ப்தான் மாத்தளை உக்குவலையைச் சேர்ந்த றொசானாவையும் அன்வர் இஸ்மாயிலையும் சேர்த்துவைத்தார். அப்போது அவர் தலைவர் அஷ்ர.்.பின் இணைப்பாளர். இந்த இணைப்பாளர் பதவி அரசியலில் அன்வர் இஸ்மாயில் காலூன்ற இன்னுமொரு காரணமாயிற்று. இந்த காலகட்டத்தில் ஒரு இளைஞர் படையை தனக்குப் பின்னாலே சேர்த்துக்கொண்டார். இதனால் அஷ்ர.்.ப் இருக்கும்போதே அன்வர் இஸ்மாயில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட வேண்டுமென்ற கோசம் மிக உக்கிரமானது. ஆனால் அன்வர் இஸ்மாயிலினுடைய வயது இன்னும் வளரவேண்டுமென அஷ்ர.்.ப் எதிர்பார்த்தார். ஆனால் முகைதீனு க்குப் பின்னர் சம்மாந்துறையின் அரசியல் வாரிசு அன்வர் இஸ்மாயில்தான் என குறிப்பிட்டார். சம்மாந்துறையின் அரசியல் கட்டுரையாளர் எச்.எம். அன்வர் அலி இதனை இன்னுமொரு படி மேலே அஷ்ர.்.பின் அரசியல் குழந்தை என குறிப்பிடுகின்றார். (அறுவடை - 2002, தேசிய பாடசாலை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2001 இல் இலங்கையின் 12 வது பாராளுமன்ற உறுப்பினராக அன்வர் இஸ்மாயில் தெரிவுசெய்யப்பட்டது தவிர்க்க முடியாததாகி விட்டது. 2001 முதல் 2003 வரை அன்வர் இஸ்மாயில் மிகத் தீவிரமான ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். சம்மாந்துறையின் பல்முனை அபிவிருத்தியில் அவர் கவனம் செலுத்தினார். இந்த காலகட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்குமிடையில் ஏற்பட்ட உடன்பாட்டினை ஆளும் கட்சியினராக இருந்துகொண்டே அவர் வன்மையாக எதிர்த்தார். முஸ்லிம் அரசியல் நிலைப்பாட்டில் அவர் மிகத் தெளிவாக இருந்நதார். முஸ்லிம்களுக்கெதிரான தாக்குதல் உக்கிரமடைந்தபோது அவர் பாராளுமன் றத்தை பகிஸ்கரித்தார். அன்வர் இஸ்மாயிலின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்ட ரணில் விக்ரமசிங்க அவர்கள் சம்மாந்துறையில் தங்கியிருந்த அன்வர் இஸ்மாயிலை தனியான விமானத்தின் மூலம் கொழும்புக்கு வரவழைத்தார். ஆனால் ஐ.தே.மு. அரசில் எந்த மாற்றமும் இல்லை. அதேநேரம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஐ.தே.மு. அரசை விட்டு வெளியேறுவதற்கும் அப்போது தயாராகவில்லை. இந்த காலகட்டத்தில் முஸலிம் காங்கிரசிலிருந்து ஒன்றும் இரண்டுமாக பல பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியேறினார்கள். இக்கட்டத்தில் அன்வர் இஸ்மாயிலின் வெளியேற்றம் தவிர்க்க முடியாததாக மாறுகிறது.

முஸ்லிம் அரசியலில் மூச்சுள்ளவராக அன்வர் இஸ்மாயில் இனங் காணப்பட்டார். அப்போது சம்மாந்துறையில் இரு பிரஜைகள் அநியாயமாக கொல்லப்பட்ட போது வழமைபோலவே இனங்தெரியாத குழு என பேசப்பட்டது. அந்நேரம் பி.பி.ஸி க்கு பேட்டியளித்த அன்வர் இஸ்மாயில் தெற்காசியாவின் வல்லமைமிக்க குழுவான விடுதலைப் புலிகளால் இவர்களை அடையாளம் காண முடியாதா என கேள்வி எழுப்பினார். அப்போது அஷ்ர.்.ப் பலரால் நினைவுகூரப்பட்டார். அன்வர் இஸ்மாயிலை அவரது வாரிசாக பார்த்தார்கள்.

ஒரு சமூகம் மற்றைய சமூகத்தின் மீது அதிகாரம் செலுத்தாமல் வாழ்ந்தால்தான் சுபீட்சம் ஏற்படும், அரசினாலும் புலிகளாலும் தொடாந்தும் முஸ்லிம்கள் இழப்புக்களை சந்திப்பது அனுமதிக்க முடியாது, முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களை புலிகள் நிறுத்தும் வரை சமாதானம் உருவாக மாட்டாது, முஸ்லிம்களை புறக்கணித்துவிட்டு புலிகளால் தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுக்கொடுக்க முடியாது. அப்போதெல்லாம் பத்திரிகைகளில் அன்வர் இஸ்மாயிலின் செய்திகள் இவ்வாறுதான் வந்தது. முஸ்லிம் அரசியலில் மிக முக்கியமான சக்தியான அன்வர் இஸ்மாயில் முஸ்லிம் காங்கிரசை விட்டு வெளியேறுகிறார். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ர.்.பின் வழியில் வழிநடத்தப்பட வேண்டுமென குறிப்பிட்டார். முஸ்லிம் அரசியலுக்கான புதிய வியூகங்கள் பற்றி பேசினார்.

2004ஆம் ஆண்டு அன்வர் இஸ்மாயில் தேசிய பட்டியல் எம்.பி. ஆக தெரிவு செய்யப்பட்டார் இதுவும் இளம் வயதில் அரசியல் ரீதியாக அவர் கண்ட முதிர்ச்சிதான். அக்காலத்திலே முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவின் ஆட்சியில் ரணில் விக்ரமசிங்கவினால் புறக்கணிக்கப்பட்ட கிழக்கின் அபிவிருத்தியினுடைய பிரதியமைச்சரானார். முஸ்லிம் காங்கிரசை விட்டு அவர் வெளியேறியபோதும் சம்மாந்துறை முஸ்லிம்கள் தமது பிரதிநிதியாக அன்வர் இஸ்மாயிலையே இனங்கண்டனர். சம்மாந்துறையின் அரசியலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய இடமுள்ள ஹிஜ்றா சந்தை அன்வர் இஸ்மாயிலால் பூர்த்திசெய்யப் பட்டது. அது ஒரு முக்கியமான நிகழ்ச்சிதான். அதன் முகப்பு வேலைகளையும் முன் பூங்காவையும் பார்த்த மக்கள் அஷ்ர.்.பைத்தான் அப்போதும் பேசினார்கள். ஹிஜ்றாப் பள்ளியின் முகப்பை பார்த்தார்கள். அப்போதும் அஷ்ர.்.பைத்தான் பேசினார்கள். அன்வர் இஸ்மாயில் செயல்படுகின்ற போதெல்லாம் அஷ்ர.்.ப்தான் பேசப்பட்டார். மார்கடை திறந்துவைத்தபோது யார் ஜனாதிபதி வேட்பாளர் என்ற புயல் இலங்கையின் அரசியலில் வீசியது. அப்போது அதனை திறந்துவைத்த பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ஷ அவர்களைப் பார்த்து இலங்கையின் எதிகால ஜனாதிபதி என்றுதான் அவர் விழித்தார். இந்த தீர்க்கதரிசனம் பலரை விழிக்கவும் வியக்கவும் வைத்தது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் ஆட்சிபீடமேறியதும் அன்வர் இஸ்மாயில் நீர்ப்பாசன அமைச்சரானார். சம்மாந்துறை விவசாயப் பிரதேசத்தின் பாலங்களும் அணைக் கட்டுக்களும் மீள் வடிவம் பெற்றன. 50 வருடங்களான எதிர்பார்க்கப்பட்ட நீர்ப்பாசனக் காரியாலயம் சம்மாந்துறையில் திறந்த வைக்கப்பட்டது. சம்மாந்துறையின் அரசியல் வரலாற்றில் இதுவரையும் இல்லாதவாறு தேசியவைபவம் ஒன்று மீலாத் விழாக இங்கு உருப்பெற்றது. அதன் பேரில் வரலாறு பதிவுசெய்யப்பட மஸ்ஜித்கள் புனர்நிர்மாணம்பெற அன்வர் இஸ்மாயில் காரணமானார். புனித பிரதேசம் என்ற பெயரில் சம்மாந்துறையின் பள்ளிவாசல்களுக்கு நிரந்த வருமானம் பெற்றுக்கொடுக்கும் வழியை அன்வர் இஸ்மாயிலின் அரசியல் தீர்க்கதரிசனம் பெற்றுக்கொ டுக்கவுள்ளது.

தென் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் அறபு மொழிப் பீடத்தின் உருவாக்கம், சம்மாந்துறை முகப்பில் ஜம்இய்யதுல் உலமாவிற்கான செயலகம், சம்மாந்துறையின் நுழைவாயிலில் கலாசார சின்னங்கள் கொண்ட வளைவு, நெல்லுப்பிடி ஓரமாக சிறுவர் பொழுது போக்கு இடம், பாதைகள், பாடசாலைகள் புதிய வடிவங்கள் இவை அத்தனைக்காகவும் சம்மாந்துறை மண் அவருக்கு நன்றி சொல்வதில் தவறில்லைதானே.

அரசியலில் எதிரியும் இல்லை. நண்பனும் இல்லை. ஆனால் காழ்ப்புணர்ச்சி இருக்கவே செய்யும். மேல்சொன்ன வரலாற்று முக்கியத்தவ ம்வாய்ந்த சேவைகளுக்காகவும் இன்னுமே நாற்பதினைக்கூட அடையாத வயதில் பாராளுமன்ற உறுப்பினராகி, பிரதியமைச்சராகி, அமைச்சராகி தவிசுபெற்றிருக்கிறார். நமது மண்ணில் பிறந்த ஒருவரை நாம் வாழ்த்தாமல் என்ன செய்ய முடியும். இன்னும் சம்மாந்துறையின் புதிய உருவாக்கத்தில் அவர் துணை செய்ய வேண்டும். மனந் திறந்து பேசியிருக்கிறோம். நன்றிகளுக்காகவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துக்கள்! வாழிய நீ...

இக்கவிதை
இன்றிலிருந்து
உனக்கோர் ஆற்றுப்படை

உனைப்பற்றி
எழும்போது
என் பேனா கர்வம்
கொள்கிறது
'மை'கூட மையல்
கொள்கிறது
நான் காதல் கொள்கிறேன்

நலமாயிருக்கிறாயா?
காலத்தின் நாட்களும்
நாட்களின் நிமிஷங்களும்
நலமாயிருக்கும்வரை
நீயும் நலமாயிருப்பாய்...

வாழ்க்கை
சௌந்தர்யமாயிருக்கும்...
கவிப்பூக்களையிங்கு
காணிக்கையாக்குகின்றேன்

உனது
மண்ணின் பேச்சும்
மணக்கும் மூச்சும்
உனக்கான
பிரார்த்தனைகளாயிருக்கின்றன

உனையிங்கு நான்
விளம்பரப்படுத்த
விரும்பவில்லை...
விளம்பரமே
உன் முகவரி தேடி
வந்தபோது
ஒதுங்கிக்கொண்டவன் நீ...
உனையிங்கு நான்
விளம்பரப்படுத்த
விரும்பவில்லை...

ஆனாலும்
இக்கவிதை
இன்றிலிருந்து
உனக்கோர் ஆற்றுப்படை!
நேற்று
வழக்காடு மன்றிலிருந்து
காற்று வந்தது...

நீ
சட்டத்தரணியாக
சத்தியப்பிரமாணம்
செய்ததாக
காற்று வந்த
சேதி சொன்னது

காற்றுக்கு
வயிறெரியத் தெரியாது
மனிதர்களைப் போல
வாழ்த்திவிட்டுப் போனது
வெறும் காற்றாக!

பொண்ணு பூப்பெய்திய
தாயின் சந்தோஷம் எனக்குள்
'அன்வர் நீ '
ஆளாகியிருப்பதையுணர்கிறேன்

அன்வர்
நீ ஆளப்பிறந்தவன்
ஆளாகியிருக்கிறாய்...

உன்னோடு சேர்த்து
உன் அரசியலும்
வயதுக்கு வந்திருக்கிறது...

மலை முகடுகளில் - தொடர்
பள்ளத்தாக்கின் குழிவுகளில்
வாய்விட்டுக் கத்தனும்...

தெளிந்த நீரோடையில்
சின்னச் சின்னக்
கல்லெறிந்து கலக்கனும்...
வெள்ளைத் தாளொடுத்து
கலவையாய்க் கலர் கலர்
மையூற்றனும்...
மூங்கிலுடைத்துக் குழல்
செய்தூதனும்... பின்
ஆகாயத் தென்றலை
முத்தமிட்டு மகிழனும்...
அன்வர்
நீ ஆளாயிருப்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்க
மனசு சந்தோஷிக்கிறதுடா...

பட்டப்டென்று
அடித்துக்கொள்கிறது
வண்ணத்துப் பூச்சு மாதிரி...
இந்தச் சந்தோசம்
ஒரு சுகமான அவஸ்தை
காதல்மாதிரி...
பெருமாள் கோயில் வாசல்
பிச்சைக்காரர்கள்
போல
மசூதிகள் முன்
முண்டியடிக்கும் முஸாபர்கள்
போல
சட்டம் உன்முன்னொருநாள்
சரணடையும்
என்றெனக்குத் தெரியும்
தோழா...

கறுப்புத்துணி கொண்டு
கண்கட்டிய நீதி தேவைகூட
தன் உள் மனதால்
உனை வாழ்த்திக்
கொண்டிருக்கிறாள்

நீயுயர்வாய்
உரம் பெறுவாய்
என்றெனைப்போல்
அவளுக்கும் முன்கூட்டிச்
சொன்னது யார் தோழா...

உனை நேசிக்கிறேன்
ஏனெனில்
நீ நேசிக்கப்படுபவன்

ஆனாலும்...
சுகநரகச் சொர்க்கம்
போல
எனக்கு உன்மேல்
ஒரு துளிக்கோபம்...
''சட்டம் உன்முன்னால்
சத்தியம் செய்வதை
விடுத்து
சட்டத்தின் முன் ஏன்
சத்தியம் செய்தாய் தோழா? "

உன்னிலொரு
புதிய பரிமாணம்
பிறக்கவேண்டுமே...
புரிந்து கொண்டவன்
உனக்கே
புரியவில்லையா?

சொற்களுக்குள்
சிறைபிடிக்க
என் எழுத்துக்கு
வலுவில்லை
இதுவொரு
சுகமான கோபம்
சுட்டெரிப்பதில்ல...

அன்வர்
நீ ஆதரித்த
அரசியல்
உனை ஆதரிக்கிறது
நான் ஆதரித்த
அன்வருக்காக
அரசியலையும்
ஆதரிக்கிறேன்!

கடந்துபோன
காலங்களைப் பார்...
உன்னில்
மறந்துபோகக்
காலங்கள்...
நம் இறந்த
காலங்கள்!

சுகப்பிரவசமாய்
உன்னிலொரு
அரசியல் பிறந்தபோது
சுகக்கப்பட்டவன் நான்...
நீ அரசியல்
நீராடியபோது
தண்ணீர்கூட அமிலமான
உன் கதை
நானறிவேன்!

சிசேரியனாய்
உனையறுக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிவகுத்தோர்
ஆயிரம்பேர்!
அப்படியிருந்தும்

நீ கனாக்களைத் தின்று
இராக்களை விழித்து
வாழ்ந்தவன்

சாதாரண இளைஞர்களின்
தேடல்களில்
உன் தொடுகை
வித்தியாசமானது தோழா

எங்கே
கற்றுக்கொண்டாய்?
அப்போதே
உனக்குள்ளொரு
முதுமையின் எழுச்சி:
கல்லூரிக் காதலர்களில்
நீயொரு
காங்கிரஸ் காதலன்!

பச்சை மரத்தடியில்
கொச்சையாய்ப் பேசி
பலர் காற்று
வாங்கும்போது
நீ மட்டுமே
பச்சை மரத்தை
உந்தன் மூச்சாய்
வாங்கியவன்

காவோலை விழக்
குருத்தோலை சிரித்த
கதையாய்
நீ காங்கிரஸில் தனித்து
கல்லூரியில் இயங்கியபோது
கரங்களைப் பெற்ற
சூரியனின் பிரகாசம்
உனக்குள்...

ஆனால்,
சூரியனையே சுட்டெரிக்க
கிரகங்கள் கிளம்பினவே
தோழா...
நிலாவென்றாலே
வெட்கப்படுபவன் நீ

கிரகங்களில்
ரசாயனத்தை எப்படித்
தாங்கிக்கொண்டாய்?

மறந்திருக்க மாட்டாய்...

நடுச்சாமத்தில்
நட்சத்திரங்கள் கூட
நழுவிப் போயினவே...

தோழா சொல்...
இல்லை
மனதுக்குள் என்னைக்
கொல்!

சப்தத்தை இசையென்றும்
ஆசையை அன்பென்றும்
வாழ்ந்த வைரிகளின்
வாழ்க்கையே
வியர்த்துப்போக...

காஷ்மீர் மாதிரி
நீயின்று
குளிர்ந்துபோயிருக்கிறாய்!

சந்தோஷம் தானே

முகமூடியே
முகமென்று நம்பிய
சமூகத்தில்
உன் முகமே
முகவரியாகிருக்கிறது

ஏனெனில்
உன் பாட்டன்
முப்பாட்டன்
எல்லோரும் முத்தெடுத்தவர்கள்

சருகுகளுக்கு மத்தியில்
சருகாய்போன சமூகத்துக்கு
மத்தியில்
அரசியல் மாலை
கோர்த்தவன் நீ...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலால் மாலை
கோர்த்தவன் நீ...

சூடிப்பார்த்தால்
எத்தனையழகு!

உனக்குத் தெரியுமா?

நீ
அரசியல் கனி
சாப்பிடுவதில்
அந்த ஆதமுக்கே
வெட்கம் போலும்...

ஏனெனில்
நீ சாப்பிடும் போதுதான்
அரசியலே கனியாகிறது
அடுத்தவர்க்கு
அது வெறும் காய்தான்

ஆலமரத்துக்கு
வேர் விட்டு வளர
பாசிச்சொடி பாடஞ்சொல்ல
வேண்டும்?

ஆலமரக் கிளைகள்
மாதிரி
விண்ணில் மண்ணிலெல்லாம்
நீ விரைந்தெழும்ப
வேண்டும்

இது என் விண்ணப்பம்

நீ
விரைத்தெழும்பும் வரை
நான்
மரணிக்கமாட்டேன்

இது
உன்மீதான சத்தியம்

தொப்பையே கர்ப்பமென்று
தூளியாடும் உலகில்
நான்
உனைக் கரர்ப்பம் தரித்துத்
தூளியாடுவேன்

தோழா
தொய்வென்பதே உன்
மெய்யில் வரக்கூடா...
ஏனெனில்...

நீ ஆளப்பிறந்தவன்
ஆலம் மரம்மாதிரி...
பாசிச்செடி
நான் பாயிசைக்கிறேன்...
என்றாலும்

பளிங்குக் கவிதையால்
தாஜ்மஹாலை அர்ச்சிக்கவா
முடியும்

சொல்
இல்லை மனதுக்குள்
என்னைக் கொல்

எ.ஃ.தோ
வாழிய நீ பல்லாண்டு!
வாழ்த்துக்கள்!!

என்றாலும்
தோற்றுப்போகிறேன்
உன்னைப்
பெற்றவளுக்கு
முன்னால்
என் வாழ்த்துக்கள்
வெறுமனே
வார்த்தைகளாகின்றன
எனினும்
சந்தோஷம்தான் தோழா
விடைபெறுகிறேன்.

**மாவனல்லை**
**ரிஸ்கி ஷெரீப்**
(நன்றி தினகரன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்மாந்துறையின் சமகால தலைமகன் அன்வர் இஸ்மாயில்

**- கலை மணி, கலாபூசனம் ஏ.சீ.இஸ்மாலெவ்வை**

சமகால இலங்கை முஸ்லிம் அரசியல்வாதிகளுள் இளையவராக இருந்தபோதும் அதிக கவனத்தைப் பெற்றவராக அன்வர் இஸ்மாயில் அவர்கள் திகழ்ந்கின்றார். இந்த கவனத்திற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றை இந்தக் கட்டுரை அலச விரும்புகின்றது. அதன் முதற் காரணம் தலைவர் அஷ்ரப் அவர்களோடு இருந்து அன்வர் இஸ்மாயில் பணியாற்றியமை தான். மிகவும் உள்ளார்ந்த அர்த்தத்தோடு பலர் இரகசியமாக 'அஷ்ரபிற்குப் பின்னர் அன்வர் இஸ்மாயில் தான்' என்று பேசிக் கொள்வர். (ஆனால் அதனை அவர்கள் வெளிப்படையாகப் பேசிக் கொள்வதில்லை) இத்தகைய ஆற்றலும் ஆளுமையும் அவருக்கு இருக்கிறது. ஆனால் அவர் இன்னும் வயதில் பெரியவராகவில்லை. அவருக்கு வயது 37 தான்.

## சம்மாந்துறைப் பண்பாட்டின் பிரதிநிதி :

சம்மாந்துறைக் கலாசாரத்தின் முழுமையான கலவைதான் அன்வர் இஸ்மாயில். அவர் இங்குள்ள பதினெண்டகாட்டு ஆற்றுப் பள்ளங்களிலும் சம்புமடுப் புழுதியிலும் அஷ்ரபா வட்டை மாட்டுச் சாணத்திலும் புரண்டு எழும்பியவர்தான். இன்னொரு பக்கம் சம்மாந்துறை தமிழ், முஸ்லிம் உறவின் பண்பாட்டுப் பிரதிநிதிதான் கோவிந்தனும் கலாவும் ஆனந்தனும் தான் இவரது நண்பர்கள். இங்குள்ள தமிழ் மக்களின் துன்பங்களில் துயரங்களில் பங்குகொண்டவர்தான். மாளிகைக்காடும் காரைதீவும் குழம்புகின்றபோது காரைதீவு மக்களுக்காக முஸா என்ற வாலிபர் சங்கத்தின் பேரிலே நிவாரணம் தலையிலே சுமந்து சென்றவர்தான் இவர். மற்றொருபுறம் கொழும்பு முதலான நகரப் பாடசாலைகளில் கற்று வெளியேறியவரல்ல. சம்மாந்துறையில் மிஷனரி ஸ்கூல் என்று அழைக்கப்பட்ட தாறுல் உலூம் வித்தியாலயத்திலும் முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்திலும் உயர்தரம் வரை பயின்று வெற்றி கண்ட வர்தான். பின்னர் கொழும்பு பல்கலைக் கழகத்தில் சட்டபீட மாண வனாகத் தெரிவு செய்யப்பட்டு ஊரிற்கு வெளியே பேர் பெறுகின்றார். பல்கலைக்கழ கத்தில் முஸ்லிம் மஜ்லிசின் செயலாளராகவும் விவாதக் குழுவின் தலைவரா கவும் இருந்து செயற்பட்டு தலைமைத்துவப் பண்புகள் நிறைந்த இளம் மனிதனாக இன்று நமக்கு மத்தியில் உலா வருகின்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவர் அஷ்ரஃபும் அன்வர் இஸ்மாயிலும் :

தலைவர் அஷ்ர.ஃ.புக்கும் அன்வர் இஸ்மாயிலுக்கும் ஒரு குடும்ப உறவு உண்டு. அஷ்ர.ஃ.பின் தாய் மாமாவான சம்மாந்துறையைச் சேர்ந்த சுலைமா லெவ்வைச் சேமன் அன்வர் இஸ்மாயிலுக்கு பெரியப்பா. இந்த உறவின் ஊடாக அஷ்ர.ஃ.புக்கும் அன்வர் இஸ்மாயிலுக்கும் சிறிய அறிமுகம் இருக்கின்றது. பின்னர் 1984 இல் இலங்கையில் இஸ்ரேலிய தூதரகம் திறப்பதனை முஸ்லிம்கள் எதிர்க்கின்ற போது அதன் பிரசுரங்களை எழுதி ஒட்டும் தொண்டனாகச் செயற்பட்டு அதனால் பொலிசாரால் கைது செய்யப்பட்டவர் இவர். அந்தச் சந்தர்ப்பத்தில் பொலிசாரிடம் இருந்து அவரை மீட்டி எடுத்தவர் சட்டத்தரணி அஷ்ர.ஃ.ப்தான். பின்னர், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியாகப் பதிவுசெய்யப்பட்ட பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிற்றூண்டி அறையில் சட்டத்தரணி அஷ்ர.ஃ.பும் அன்வர் இஸ்மாயிலும் அடிக்கடி சந்தித்து தமது உறவை வளர்த்துக் கொண்டனர். பின்னர் 1989 இல் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ர.ஃ.ப் எம்.பி. யானதன் பின்னர் அவருடைய பாராளுமன்ற உரைக்குத் தேவையான புள்ளி விபரங்களைத் தயாரிப்பவரா கவும் அவருடைய சம்மாந்துறையின் பிரதிநிதியாகவும் இருந்து தொழிற்பட்டவர் அன்வர் இஸ்மாயில்தான். இந்த காலகட்டங்களில்தான் அஷ்ர.ஃ.புக்குள் இருந்து அன்வர் இஸ்மாயில் என்ற இன்னுமொரு அரசியல் ஆளுமை வளரத் தொடங்குகிறது.

1991 இல் தலைவர் அஷ்ர.ஃ.ப் அவர்கள் 'கறுப்பு வெள்ளி' பிரகடனம் செய்த போது அதனை சமூக மட்டத்திற்குள் கொண்டு சென்றதில் அன்வர் இஸ்மாயில் பெரிதும் துணையாக இருந்தார். இதற்குப் பலத்த விமர்சனம் இருந்தபோதும் கறுப்பு வெள்ளிப் பிரகடனம் அஷ்ர.ஃ.பின் அரசியலில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. பின்னர், 1994 இல் தலைவர் அஷ்ர.ஃ.ப் அமைச்சரானவுடன் அவரது அமைச்சின் இணைப்புச் செயலாளராக அன்வர் இஸ்மாயில் அவர்கள் கடமையாற்றிய போது அவரது ஆளுமை பெரிதும் விரிவடைந்தது. அக்காலகட்டத்தில் காரைதீவில் முஸ்லிம் பொலிசார்கள் கொல்லப்பட்டபோது அந்த அநீதியினை அரசிற்குத் துலக்கச் சென்றபோது ஐக்கிய தேசியக் கட்சியின் காடையர்களின் தூண்டுதலால் அன்வர் இஸ்மாயில் மல்வத்தை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டு பெரும் அரசியல் துன்புறுத்தலுக்குள்ளானார். அதேநேரம் முஸ்லிம் விரோதப் போக்கை ஐக்கிய தேசியக் கட்சியும் ரணில் விக்கிரமசிங்கவும் கொண்டிருந்தபோது சம்மாந்துறை ஹிஜ்றா சந்தியில் இளைஞர்களை ஒன்றுதிரட்டி கறுப்புக்கொடி காட்டினார். இந்தச் செயற்பாடுகளினால் இளைஞர்களுக்கு மத்தியில் அவர் செல்வாக்குப் பெறத் தொடங்கினார். இளைஞர்களும் மக்களும் அவர் பின் அதனால் அணிதிரளத் தொடங்கினர். அந்த திரட்சிதான் இன்று அன்வர் இஸ்மாயிலை இவ்வளவு இளம் வயதிற்குள் ஒரு பிரதி அமைச்சராக எம்மையெல்லாம் சந்திக்க வைத்திருக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்வர் இஸ்மாயிலின் அரசியல் :**

தலைவர் அஷ்ர.்.ப் அவர்களுடைய மரணத்திற்குப் பின்னர் 2001 இல் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக அன்வர் இஸ்மாயில் தெரிவு செய்யப்பட்டார். சுமார் 02 வருடங்கள்தான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அவர் அம்பாறை மாவட்டத்தில் பல கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவுசெய்து அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டார். அது மாத்திரமன்றி அவரது அரசியல் இலக்குகளில் மிகப் பெரும் சவாலாக முஸ்லிம் அரசியல் தொடர்பான அஷ்ர.்.பின் கனவுகளை நிறைவேற்றுவதில் அவர் பெரிதும் அவாக் கொண்டார்.

முஸ்லிம் காங்கிரஸின் தற்போதைய தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களது தீர்க்கதரிசனமற்ற அரசியலையும் ஐக்கிய தேசிய முன்னணியின் ஏமாற்று வித்தைகளையும் மிகத் தெளிவாக அவர் இனங்கண்டு கொண்டு அவ்வரசுக்கும் ரவூப் ஹக்கீம் அவர்களுக்கும் இதனை அவர் பல்வேறு வழிகளில் அடிக்கடி உணர்த்தி வந்தார். ரவூப் ஹக்கீமின் சுயவிசுவாச அரசியலை இனங்கண்ட கொண்ட அன்வர் இஸ்மாயில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இப்பிராந்திய மக்களின் அபிலாசைகளுக்கே முன்னுரிமைகொடுத்து இயங்கி வந்தார். இதன் காரணமாக முஸ்லிம் அரசியலை இன்னொரு கோணத்திற்குக் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பினை அவர் எடுத்துக் கொண்டார். இதன்படி 2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசின் தேசிய முக்கியத்துவம் பெற்ற அரசியல்வாதியாக அவர் தன்னை இனங்காட்டிக் கொண்டார்.

**இனப்பிரச்சினைக்கான தீர்வு :**

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு முஸ்லிம்களின் அபிலாஷைகளை உள்ளடக்கியதாக அமையாவிடில் அது ஒரு நிரந்தரமான தீர்வாக அமையாது என்பதிலே அன்வர் இஸ்மாயில் தெளிவான நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளார். இலங்கையின் இனப்பிரச்சினை பேச்சுவார்த்தையின் அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டும். அதில் தமிழர்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்கின்ற அதேவேளை முஸ்லிம்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமைய வேண்டும். இதனை அரச தரப்பும் தமிழர் தரப்பும் உலக நாடுகளும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதுதான் அவரது நிலைப்பாடு. தலைவர் அஷ்ர.்.ப் அவர்கள் இலங்கையின் இனப்பிரச்சினையைச் சிங்கள, தமிழ், முஸ்லிம் பிரச்சினையாக அடையாளப்படுத்தியவர். அதனையே அன்வர் இஸ்மாயில் அவர்கள் அதற்குரிய தீர்வும் சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய மும்முனைப்பட்ட தீர்வாக அமைய வேண்டும் என வற்புறுத்தி வருகின்றார். திகாமடுல்ல மாவட்ட மக்கள் அன்வர் இஸ்மாயிலை தமது அரசியல் இலக்குகளில் மிகப் பொருத்தமான ஆளுமையாக இன்று இனங்கண்டு கொண்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாந்துறையைப் பிரதிநிதித்துவப்படுத்திய எம்.ஏ. அப்துல் மஜீத், யூ.எல்.எம். முகைடீன் முதலான அரசியல்வாதிகள் எல்லாம் முதலில் தோல்வியுற்றே பின்னர் பாராளுமன்ற உறுப்புரிமையைப் பெற்றனர். ஆனால் 2001 ஆம் ஆண்டு அன்வர் இஸ்மாயில் என்ற இளைஞன் போட்டியிட்டு வெகு இலகுவாக வெற்றிவாகை சூடிக்கொண்டார். அது மாத்திரமன்றி பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் பெற்று இரு வருடங்களுக்குள்ளே பிரதியமைச்சராகவும் பேறுபெற்றுள்ளார். சம்மாந்துறையில் இஸ்மாயில் மாஸ்டருக்கும் சுபைதா உம்மாவிற்கும் பிறந்த மகனாக அல்லாது சம்மாந்துறை பெற்ற மகனாக இன்று சம்மாந்துறையின் தலைமகனாக பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களை மக்கள் மனங்கொண்டுள்ளனர். அவர் சேவை இன்னும் வளரவேண்டும். அவர் எதிர்காலம் இன்னும் சிறக்க வேண்டுமென இம்மக்கள் பிரார்த்திக்கின்றனர்.

( நன்றி : நவமணி 18.07.2004)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சேவையின் மூலம் மகோன்னத நிலையை அடைந்தவர்

- மீரா இஸ்ஸடீன்

**1967** ஆம் ஆண்டு ஜுலை மாதம் 16 ஆம் திகதி சம்மாந்துறை கிராமத்தில் முகம்மது இஸ்மாயில் (ஆசிரியர்) சுபைதா உம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அன்னாரின் 37 ஆவது பிறந்த தினம் இன்று. தனது ஆரம்பக் கல்வியை தாருல் உலூம் பாடசாலையிலும், முஸ்லிம் மகளிர் வித்தியாலயத்திலும் கற்றுத் தேறிய பின், உயர்தரக் கல்வியை முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் கற்றார். உயர்தரக் கல்வியின் பெறுபேறு இவரை கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடத்துக்கு உள்வாங்கும் தகுதியைப் பெற்றிருந்தது மட்டுமன்றி மகா வித்தியாலயத்தின் முதலாவது சட்டபீட மாணவன் என்ற பெருமையையும் இவருக்கே வழங்கியது. இளம்வயது முதலே இவருக்கு அரசியலில் இருந்த ஆர்வம் தான் இவரைச் சட்டத்துறையில் நாட்டம் கொள்ளச் செய்தது.

அன்வர் இஸ்மாயில் சாதாரண நடுத்தர குடும்பத்திலிருந்து பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர். எந்தவிதமான தடைகள் வரினும் அதனை உடைத்தெறிந்து தான் ஒரு சட்டத்தரணியாகவும் அந்த அடிப்படைத் தகைமையோடு அரசியலில் நாமம் பதிக்க வேண்டுமென்ற அவாவும் இன்று யதார்த்த நிலை அடைந்துள்ளது.

1989 ஆம் ஆண்டு காலகட்டத்தில் பல்வேறு சக்திகள் முஸ்லிம் மக்களுக்கெதிராக மேற்கொண்ட அரசாங்க நடவடிக்கைகளைக் கண்டித்து கற்ப்பு வெள்ளை பிரகடனத்தை சுயாதீன மாணவர் அமைப்பினூடாக வெற்றிகரமாகச் செயற்படுத்தினார். காலப்போக்கில் இவர் பெற்றுக் கொண்ட சட்டத்துறை அறிவு இவரை விரைவாக அரசியலுக்கு உள்வாங்கியது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் எழுச்சிக் காலகட்டத்தில் தன்னையும் அதனுடன் இறுகப் பிணைத்துக் கொண்ட அன்வர் இஸ்மாயில் மர்ஹூம் அஷ்ர.்.ப் அவர்களுடன் இருந்த குடும்ப உறவு காரணமாகவும் காங்கிரஸ் நிலையான ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டதுடன், பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியிலும் முஸ்லிம் காங்கிரஸின் விதையை ஆழப்பதித்து வேரூன்ற செய்வதில் முன்னணி வகித்ததுடன் காங்கிரஸின் முதன்மை போராளியாகவும் மாறினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்வர் இஸ்மாயில் தான் எடுத்துக் கொண்ட விடயத்தில் சற்றும் தளராமல் போராடுவதில் வல்லவர். அவரது போராட்டக் குணத்தின் தன்மையைக் கடந்த பொதுத் தேர்தலில் நன்கு அறியக் கூடியதாகவும் இருந்தது.

மற்ற மக்களுடன் மிகவும் அந்நியோன்யமாகப் பழகும் அன்வர் இஸ்மாயில் தேர்தல் காலங்களில் கனல்பறக்கும் ஆசாமியாகக் கூடச் செயல்படுவது அவரது ஆதரவாளர்களுக்கு உற்சாகத்தை ஊட்டும் செயலாகவும் அமைந்து விடுகிறது. சட்டத்தையும் அரசியலையும் ஒரே இடத்தில் அனுபவமாகப் பெற்ற பாக்கியம் அன்வர் இஸ்மாயிலுக்கே உண்டு. மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ர∴பின் பாசறையில் வளர்ந்தவர்.

1994 ஆம் ஆண்டிலிருந்து தேசிய அரசியலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பங்காளிக் கட்சியாகத் தன்னை ஆக்கிக் கொண்டதிலிருந்து அஷ்ர∴பின் நாமமும் மரமும் விருட்சமாக அகலப் படர்ந்த சமயத்தில் அன்னாரது அலுவல்களில் பெரும்பாலானவற்றை ஓய்வுறக்கமின்றி செய்தவர்கள் சிலர் அன்வர் இஸ்மாயிலுக்கு முக்கிய பங்குண்டு. சம்மாந்துறை மண்ணில் ஒரு சாதாரண பிரஜை தலைநகரில் பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவரின் இணைப்பதிகாரியாகச் செயற்படுவதற்குரிய திராணியைப் பெற்றிருந்ததை தலைவர் அஷ்ர∴ப் நன்கு உணர்ந்ததனால் என்னவோ தனது இணைப்பதிகாரியாக அன்வர் இஸ்மாயிலை வைத்துக் கொண்டார்.

அமைச்சர் வழங்கிய பொறுப்புக்களுடன் தனது கவனத்திலும் எதிர்காலத் திட்டத்திலும் கண்ணுங்கருத்துமாக அன்வர் இஸ்மாயில் செயற்பட்ட விதம் மற்றவர்களுக்கு அதிகம் புரிந்திருக்க நியாயமில்லை போலும். அன்வர் இஸ்மாயிலின் செயற்பாடுகள் பூமி தன்னையும் சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருவது போன்று இயல்பாக அமைந்திருந்தது. அன்வர் இஸ்மாயில் தலைவரின் பணிகளுடன் தனது எதிர்கால அரசியலுக்குத் தயார் நிலைப்படுத்தல்களைச் செய்து கொண்டு வந்ததை பற்றித் தலைவர் அஷ்ர∴ப் கூட நன்கு உணர்ந்திருந்தார்.

நான் அறிந்தவரை சம்மாந்துறையிலிருந்து ஒரு புல்லு அசைந்து வந்தாலும் அதனை அமைச்சு அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று அதன் நோக்கத்தை நிறைவேற்றி வைப்பதில் அன்வர் இஸ்மாயில் கண்ணுங்கருத்துமாக இருந்தார். கல்விச் சுற்றுலாவுக்கு வரும் சம்மாந்துறை மாணவர்கள் துறைமுகத்தைச் சுற்றிப் பார்க்காமல் வருவதில்லை. அத்துடன் அன்வர் இஸ்மாயில் வழங்கும் உபசரிப்புகளால் திக்கு முக்காடாமலுமில்லை.

மர்ஹூம் அமைச்சர் அஷ்ர∴ப் துறைமுக அதிகார சபையில் தனது பணியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அன்றைய காலகட்டங்களில் அமைச்சரைச் சந்திப்பதும் அன்வர் இஸ்மாயிலைச் சந்திப்பதும் சம்மாந்துறை மக்களின் கண்களில் தூசு விழுந்தால் கூட அதை எடுத்துவிடும் அளவுக்கு அன்வர் இஸ்மாயில் தன்னைத் தயார்படுத்தி வைத்ததன் பலன்தான் இன்று பிரதியமைச்சர் தரத்துக்கு உயர்த்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓ ...... அந்த இளைஞன்!

ஹர்தால்களின் ஆரம்பக் காலமது;
1985 இன் நடுப்பகுதி;
நாளைக்கு நாடு முழுவதும் முஸ்லீம்களெல்லாம்
இஸ்ரவேல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் என்றெதினால்;
அத்தனை பொருட்களையும் கல்முனை
சந்தையில் இருந்து வாங்கிவரும் வேளை ........

**

காரைதீவில் வாகனங்கள் கனதூரம்வரை;
வரிசையில் சோதனைக் கெடுபிடிகள்;
நூதனமாய் எங்கள் வாகனத்தையும்
பரிசோதித்து விடுபட்டது.

**

துடிப்பான ஓர் இளைஞனின் கையில்;
பாரமான இஸ்ரவேல் எதிர்ப்பு விளம்பரங்கள்;
சடுதியாய் இறக்கப்படுகின்றார்;
சனமெல்லாம் பார்த்து நிற்க
திகைத்து நிற்க!....

**

வீரனின் சாயல்
தியாகியின் தெளிவு;
துடிதுடிப்பான நடை எதனையும்;
சாதிக்கும் தலைமைப் பாங்கு;
பாருக்குள் ஓர் தலைவன் உண்டான
புளகாங்கிதம் எனக்கு – ஆனால்
ஓ ......... அந்த இளைஞன் யாரென்று தெரியாது.......

**

ஊரை நோக்கி எனது வாகனம்
ஊந்து வருகிறது – எனது வாகனத்தில்;
இருந்து இறங்கியவர் கூறினார் .....
கூழாச் சந்தியடியில் உள்ள
இஸ்மாயில் மாஸ்டரின் மகனென்றார் ......

**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடித்துக் கரும்பினை கண்தகர
இடித்து நீர் கொள்ளினும்
இன்சுவை தேனாகும்" – என்று
இலக்கியம் படித்துத் தந்திட்ட;
எனது ஆசிரியரின்
மகனா இவரென்று மனம்
சந்தோசப்பட்டது
ஓர் தலைவன் உதயமாகிவிட்டான்
ஊருக்கென்று ........

**

காலம் உருண்டது புதிய பாதைகள்
பிரகாசமாய்த் தெரிந்தது;
அபிவிருத்திகள் ஆயிரம் நடந்தது –
புதுத் தலைமைகள் புனிதமாய் ஆனது
மக்களின் மகிழ்ச்சி, இளைஞர் கூட்டத்தின்
எழுச்சி, வரவேற்பு .......
கௌரவ எம்.ஐ. அன்வர் இஸ்மாயில்
பாராளுமன்ற உறுப்பினர் ஆனது.

**

நாட்டுக்குள் பொழியும் மழை
நமக்கு எல்லாம் சொந்தமல்லவா - அது போல்
ஊருக்குள் நடக்கின்ற உதவாத
செயல்களும் - நல்ல செயல்களும்
நமக்கும் சொந்தமல்லவா
உருப்படியாய் பேசித் தீர்த்தால்

**

முற்றத்தில் தென்னை
மரத்தைச் சுற்றிய வெற்றிலைக் கொடியாய்
மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள்
யாறும் கதிரையில் அமர்ந்திட
வரவே மாட்டார்கள். என்றும்
நீயே எங்களுக்கு எம்.பி.யும்
மந்திரியுமாய் இருந்தே
நீடு வாழ்வீர்கள்

கவிஞர் சம்மாந்துறை ஆ. அஸீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மூத்த உலமாக்களுடன்



உலமாக்களுடன் அமைச்சர்
சம்மாந்துறை தப்லீக்குல் இஸ்லாத்தில்




ஜம்யத்துல் உலமா அடிக்கல் திரை நீக்கம்



ஜம்யத்துல் உலமா கட்டிடத்துக்கு
அடிக்கல் வைக்கும் போது




தலைவர் மர்ஹூம் அஷ்ர.்.ப்கான பிரார்த்தனையில்



தலைவர் மர்ஹூம்
அஷ்ர.்.ப்கான கத்தமுல் குர்ஆன் நிகழ்ச்சியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தலைவர் அஷ்ர.்.ப் முது சட்டமாணி பட்டம்
பெற்றபோது தனது இணைப்பாளர்
சட்டத்தரணி அன்வர் இஸ்மாயிலுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தலைவர் அஷ்ர.்.ப் அன்வர் இஸ்மாயிலை
அரவணைக்கும் போது




தலைவர் அஷ்ர.்.ப்பின் தாய் மதீனா உம்மாவுக்கு
அன்வர் இஸ்மாயில் உணவூட்டும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தலைவர் அஷ்ர.்.ப் ஜனாதிபதி சட்டத்தரணி ஆன
போது தனது இணைப்பாளர்
சட்டத்தரணி அன்வர் இஸ்மாயிலுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிழக்கு உட்கட்டமைப்பு பிரதிய அமைச்சராக
சத்தியபிரமாணம் செய்தபோது



நீர்ப்பாசன துறை அமைச்சராக சத்தியப் பிரமாணம்
செய்தபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சம்மாந்துறை அரசியல் வரலாற்றில் முதன் முதலாக மக்கள் பணிக்காக தனிப்பணிமனை



மக்கள் பணிமனையின் கூட்ட அறை



பழைய மாணவர் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினர் ஆகியதற்கு சம்மாந்துறை தேசிய பாடசாலையின் வரவேற்பு



அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்து கண்காணிப்புக் குழுவுடன்



கிழக்கு முஸ்லிம்களின் காணிப்பிரச்சினை தொடர்பாக கொக்கொட்டிச்சோலையில் விடுதலைப் புலிகளுடன்



வெளிநாட்டு ஊடக நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி வழங்கும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமைச்சர் தனது ஆதரவாளர்களுடன்



சம்மாந்துறையில் இடம்பெற்ற மக்கள் நடமாடும் சேவை



சம்புமடுவில் வைத்தியசாலையை திறந்துவைத்த போது



ஸியாசந்தி கிளையில் அமைச்சர்



தலைவர் மர்ஹூம் அஷ்ர.்.ப் ஞாபகார்த்தத்தில் நடமாடும் சேவை (தாருஸ்ஸலாம் வித்தியாலயம்)



குர்ஆன் மத்ரஸா மாணவர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாடசாலை அபிவிருத்தி தொடர்பாக நிகொட் உத்தியோகத்தருடன்



பாடசாலை அபிவிருத்தி தொடர்பாக உலக வங்கியின் இலங்கை பிரதிநிதியுடன்



இஸ்மாயில் வித்தியாலயத்தை திறந்துவைத்த போது



பாடசாலை அபிவிருத்தி தொடர்பாக நிகொட் உத்தியோகத்தருடன்



அன்வர் இஸ்மாயில் புரத்தில் அமைச்சர் அதாவுல்லாவுடன்



அல் அஸ்ஹர் வித்தியாலயத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்மாந்துறைத் தாயகத்தின் நாயகன் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில்

எம்.எல்.ஏ. மஜீட்,
தலைவர், சுவாட் அமைப்பு

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் காலத்திற்கு காலம் தோன்றிய அரசியல் தலைவர்களில் குறிப்பாக அறிஞர் சித்திலெவ்வை, ரி.பி.ஜாயா, சேர் ராசிக் பரீட், எம்.சீ.எம். கலீல், டாக்டர் பதியுதீன் மஃமூத் போன்ற தலைவர்கள் பிரபுத்துவ ஆட்சியிலும் பேரீனவாத ஆட்சியிலும் இருந்து கொண்டு முஸ்லிம்களுக்கு அன்று ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தற்காலிகத் தீர்வுகளைப் பெற்றுத் தந்தார்கள். அதன் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மாநாடுகளுக்கு அன்று பேரினவாத அரசியலில் இருந்தவர்கள் இலங்கை முஸ்லிம்களின் சார்பாக எந்தவித ஆக்க பூர்வமான தீர்வையும் முன்வைக்கவில்லை. அல்லது அத்தீர்வை அவர்களுக்கு முன்வைக்கத்தெரியாமலும் இருந்திருக்கலாம்.

இலங்கை இனப்பிரச்சினை ஜனனாயக வழியில் தீர்வு காணப்படாமல் ஆயுதப் போராட்டமாக மாறிய போது அதில் கூடுதலாக பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லிம்களே என்பது இந்த நாடு அறிந்த உண்மையாகும். அதன் தாக்கத்தின் வெளிப்பாடே வடமாகாணத்தில் இருந்த முஸ்லிம்கள் துரத்தியடிக்கப்பட்டதில் இருந்து காத்தான்குடி பள்ளிவாசலில் தொழுது கொண்டிருந்த முஸ்லீம்களின் மீது பாசிசவாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட படுகொலை வரை வடகிழக்கு முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இப்பாதிப்புக்களை கூறிக் கொண்டே போகலாம். இதனால் வட,கிழக்கு முஸ்லீம்களின் விவசாயம், வர்த்தகம் கோடிக்கணக்கான சொத்துக்கள் இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஆயிரக்கணக்கான உயிர்களையும் இழந்தவர்கள் முஸ்லிம்களே என்பதை தெரிந்து இருந்தும் என்று பேரினவாதிகளின் அரசியலில் ஒட்டிக்கொண்டிருந்தவர்கள் அல்லது அவர்களின் காலைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்தவர்களால் தங்களின் பாராளுமன்ற ஆசனங்களைப் பாதுகாத்தார்களே தவிர முஸ்லிம்களின் பாதுகாப்பில் கையாலாகத் தன்மையுடனேயே இருந்தார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அரசியலில் பின்னணியில்தான் சிறிலங்காமுஸ்லிம் காங்கிரஸ் என்ற ஓர் அரசியல் கட்சியை மறைந்த மர்ஹூம் மாமனிதர் எம்.எச்.எம். அஸ்ரப் கொண்டு வந்தார்கள். அக்கட்சி குறுகிய காலத்தில் இலங்கையின் பேரினவாத சமகால அரசியலிலும் ஆயுதப் போராத்திலும் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தியது. அந்த மாமனிதன் அரசியல் பாசறையில் செல்லப் பிள்ளையாகவும் வளர்ப்பு மகனாகவும் அந்த மாமனிதனின் நவீன அரசியல் சக்கரத்தை சரியான நேரத்தில் தோளோடு தோளாக நின்று கற்றவர்தான் இன்று நாம் கானும் நவீன காலத்து அரசியல் தாரகையும் சம்மாந்துறையின் அபிவிருத்தி நாயகனுமான கௌரவ அமைச்சர் அன்வர் இஸ்மாயில் என்றால் அது மிகையாகாது.

இவரின் குடும்ப வரலாறு ஆத்மீக, அரசியல் பின்னணியைக் கொண்டதாகவே இருப்பதும் இவரின் அரசியல் வளர்ச்சிக்கு காரணமாக உள்ளது. மீராலெவ்வை முகம்மது இஸ்மாயிலுக்கும், முகம்மது இஸ்மாயில் மரைக்கார் சுபைதா உம்மாவுக்கும் மூத்த மகனாக 16.07.1967ஆம் ஆண்டு சம்மாந்துறையில் பிறந்து, ஆரம்பக்கல்வியை தாறுல் உலூம் வித்தியால யத்திலும், இடைக்கல்வியை மகளிர் வித்தியாலத்திலும், உயர் கல்வியை முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் கற்று மேற்படிப்புக்காக கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் பட்டம் பெற்று வெளியேறினார்.

இவர் இளமையில் தந்தையை இழந்த காரணத்தினால் அவரின் கல்வியைத் தொடர்வதற்கு மிகவும் கஸ்டப்பட்டே இவ்வுயர் நிலையை அடைந்தார். இவரின் தந்தை ஓர் ஆசிரியராகவும் அரசியல் மேடைப் பேச்சாளராகவும் சம்மாந்துறை சமூக சேவை அமைப்புக்களில் இருந்து கொண்டு இவ்வூருக்கு பல சேவைகளைச் செய்தவர். இவரின் தாயார் இவரின் உயர்ச்சிக்கு மிகவும் பாடுபட்டவர். இவர் இவ்வூரின் கண்ணியமான உயர் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரின் தாய்வழிப் பாட்டனார் அனைத்து பள்ளி பரிபாலனை சபைத் தலைவராக இருந்து கண்ணாடி மரைக்கார் என்ற செல்லப்பெயரோடு இவ்வூரின் செல்வாக்குப் பெற்றவர். இவரின் தாய்மாமனான முகம்மட் லத்தீப் சேமன், இவ்வூரில் பட்டின ஆட்சிமன்றத் தலைவராக இருந்து இவ்வூருக்கு பல ஆக்க பூர்வமான சேவைகளைச் செய்தார். அத்தோடு அவரின் பெரியப்பா சுலைமாலெவ்வை ஐக்கிய தேசிய கட்சியை முதன் முதலாக இவ்வூருக்கு கொண்டு வந்து யானைச்சின்னத்தில் வேட்பாளராகத் தேர்தலில் போட்டியிட்டவர். இவர் ஆலிமுத்தம்பி என்ற செல்லப்பெயரோடு அழைக்கப்பட்டார்.

அதுமட்டுமல்ல இவரின் மச்சான் யூ.எல்.எம்.முகைதீன் பாராளுமன்ற உறுப்பினராகவும், பிரதி அமைச்சராகவும் இருந்து இவ்வூருக்கு நிரந்தரமான பாரிய சேவைகளைச் செய்தவர். இவ்வூரின் நீண்ட அரசியல் வரலாற்றைக் கொண்டவரும், ஒட்டுமொத்தமாக இவ்வூரை 32 வருடங்கள் ஆட்சிசெய்த முன்னாள் அமைச்சர் எம்.ஏ. அப்துல் மஜீட் இவரின் மிகவும் நெருங்கிய குடும்பமாக இருப்பதும், இவரின் அரசியலுக்கு இன்னும் கால்கோளாக இருக்கின்றது. இது எல்லாவற்றிற்கும் மேலாக இந்த நாட்டில் உள்ள முஸ்லிம்களை அரசியல் புரட்சியின் மூலம் ஒற்றுமையாக்கிய மர்ஹூம் மாமனிதர் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்களின் மருமகன் கௌரவ அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்வர் இஸ்மாயிலின் தங்கையை திருமணம் முடித்ததன் காரணமாக இவரின் குடும்ப வரலாறு ஓர் அரசியல் பரம்பரையைக் கொண்டது என்பதும் நிதர்சன உண்மையாகும்.

கௌரவ அமைச்சர் அன்வர் இஸ்மாயிலின் ஆளுமையையும் விவேகத்தையும் அன்று மாமனிதர் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்களுடன் இருந்த உள்ளூர் போலி அரசியல் ஏஜன்டுகள் இவரின் வளர்ச்சியை முளையிலேயே கிள்ளி எறிவதற்கு திரை மறைவில் சதிமுயற்சிகள் செய்து கொண்டிருந்தார்கள். இவர் தன்னந்தனியாக எந்தவித ஆதரவும் இல்லாமல் தலைவரால் வழங்கப்பட்ட துறைமுக அமைச்சின் இணைப்பாளர் பதவியினைக் கொண்டு அம்பாரை மாவட்ட இளைஞர்களுக்கு குறிப்பாக சம்மாந்துறையைச் சேர்ந்த 250 க்கு மேற்பட்ட வறிய இளைஞர்களுக்கு துறைமுகத்தில் தொழில்வாய்ப்பை ஏற்படுத்தி துயர்துடைத்த வரலாறை இவ்வூரும் இவ்விளைஞர்களும் எளிதில் மறந்துவிடமாட்டார்கள்.

இப்பின்னணியில்தான் இவரை சம்மாந்துறையின் அரசியல் சக்தியாக ஊரின் நன்மை கருதி மாற்றம் காணுவதற்கு தன்னந்தனியனாக தத்தளித்துக் கொண்டிருந்த றிஸ்லீன் என்ற இளைஞனை சுவாட் என்ற சகோதர வாகனத்தில் ஏற்றி இவர்தான் சம்மாந்துறையில் நாம் கண்ட எதிர்கால அரசியல் தாரகை என்ற உண்மையை கொழும்பு சென்று மாமனிதரிடம் எடுத்துக்கூறி இவரை 2001 ம் ஆண்டு வேட்பாளராக ஆக்குமாறு வேண்டி நின்றபோது தலைவர் அவர்கள் அவரின் வீட்டில் வைத்து இவர்தான் சம்மாந்துறையின் அரசியல் வாரிசு என்ற உறுதிமொழியைத் தந்ததோடு, இவரை பாராளுமன்ற உறுப்பினராகவோ அல்லது அமைச்சராகவோ நான் கனவு காணவில்லை. இவர் என் மகன், இன்ஷா அல்லாஹ் எனக்குப் பின் எதிர்காலத்தில் இக்கட்சியை வழிநடாத்துகின்ற பொறுப்பு இவரையே சாரும் என்ற உண்மையை அங்குசென்ற 44 பேர் முன்னிலையிலும் உறுதிபடக் கூறினார் என்பதை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தம் என நினைக்கிறோம்.

இச்சுவாட் அமைப்பு அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் அரசியல் முன்னேற்றத்தில் உந்து சக்தியாகவும், உறுதுணையாகவும் இருந்ததை எவரும் எளிதில் மறந்துவிடமாட்டார்கள் என நினைக்கின்றோம். தலைவரின் மறைவுக்குப் பின் 2001 ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த பொதுத் தேர்தலில் வெற்றியீட்டி பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டார். அன்றிலிருந்து சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பாடுபட்ட அமைச்சர் அவர்கள் தற்போதைய சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரின் தான்தோன்றித்தனமான போக்கையும் கட்சியாப்பு விதிகளுக்கு மாற்றமாக ஒரு தலைப்பட்சமான முடிவுகளையும் கண்டித்து 2004 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்த பொதுத்தேர்தலில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறுவதற்காக சம்மாந்துறையின் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் புத்திஜீவிகள், உலமாக்கள், போராளிகள், கட்சித் தொண்டர்களை அல்மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியின் காரியப்பர் மண்டபத்தில் ஒன்றுகூட்டி தலைவரின் நடவடிக்கை பற்றியும் கட்சியின் நிலை பற்றியும் மிக நீண்ட உரையாற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அங்கு கூடியிருந்த கட்சித் தொண்டர்களில் 90 வீதமானவர்கள் கட்சியிலிருந்து வெளியேறும்படி கூறியதற்கிணங்க தேர்தல் நடைபெற இன்னும் 28 நாட்கள் இருக்கின்ற நிலையில் கட்சியை விட்டு வெளியேறியபோது பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து மரத்திற்கு வாக்களித்து பழகிப்போன மக்களிடம் உண்மை நிலையை தீவிரப் பிரச்சாரம் மூலம் விளங்கப்படுத்தி சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உதயமான காலத்திலிருந்து சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசின் கோட்டையாக இருந்த சம்மாந்துறையை 28 நாட்களுக்குள் 28,000 வாக்குகளை வெற்றிலைச் சின்னத்திற்கு வாக்களிக்க வைத்த பெருமை கௌரவ அமைச்சர் அன்வர் இஸ்மாயிலையே சாரும். இதுதான் இவரின் மிகப்பெரிய ஆளுமையாகும். இதனைக் கண்டறிந்த அன்றைய ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க அவர்களால் இவருக்கு பிரதி கிழக்கு உட்கட்டமைப்பு அமைச்சுப் பதவி வழங்கி கௌரவிக்கப்பட்டார். அதன் பின்பு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றியீட்டியதன் காரணமாக அமைச்சரவை மாற்றத்தில் அம்பாறை மாவட்டம் ஒரு விவசாய மாவட்டம் என்பதால் இவருக்கு நீர்ப்பாசன அமைச்சர் பதவியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவரது காலத்திற்கு முதல் இவ்வூர் இருந்த நிலையையும் இன்று நாம் காணும் நிலையையும் சற்று அவதானித்துப் பார்க்க வேண்டும்.

நமது ஊரின் கிழக்கு பிரதேசத்தால் வருகின்றபோது அங்கு காட்சியளிக்கின்ற உலமாக்களின் தலைமைக் காரியாலயத்தையும் ஊர் வரவேற்பு முகப்புத் தோற்றத்தையும் அவதானிக்கலாம். மேற்குப் பக்கமாக நமது ஊரைப் பார்க்கின்றபோது ஜனாதிபதி கலாசார விளையாட்டு நிலையத்தையும் வரவேற்பு முகப்புத் தோற்றத்தையும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. ஊரின் தென் பகுதியைப் பார்க்கின்றபோது நெயினாகாடு இற்றைக்கு 80 வருடங்களாக சாவாற்றில் நீந்திச் சென்று ஆனைவிழுந்தான், கொச்சிக்காய்லந்து, திராவோடை, பொன்னன்வெளி, ஆசுபத்திரிச் சேனை, தொப்பியன்குடா, விக்கிளாமடு, வாங்காமம், வரிப்பத்தாஞ்சேனை போன்ற விவசாயப் பிரதேசங்களுக்கும் குடிவில், நல்லதண்ணிமலை, ஓட்டுத்தொழிற்சாலை, இறக்காமம், வாங்காமம், வரிப்பத்தாஞ்சேனை போன்ற முஸ்லிம் கிராமங்களுக்கும் மிகவும் கஸ்டமான முறையில் பிரயாணம் செய்த மக்களுக்கு பாரிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மூன்று பாலங்களை கட்டியமை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. அத்தோடு கட்சிபேதமின்றி அப்பாலத்தை அம்பாரை மாவட்ட மக்கள் சுற்றுலா சென்று பார்க்கும் அளவுக்கு மிகவும் நவீன முறையில் அப்பாலங்கள் அமைக்கப்பட்டிருப்பதும் அவற்றின் சிறப்பம்சமாகும். ஊரின் மத்திய பகுதியை எடுத்துக்கொண்டால் கவனிப்பாரற்று பாழடைந்து கிடந்த சந்தையை நவீன முறையில் சீராக வடிவமைத்த மிகவும் அழகுத் தோற்றத்துடன் காட்சிப்படுத்தியுள்ளதையும் அவதானிக்கலாம். **அழகை இரசிக்கத் தெரியாத ஆணவம் உள்ள அரைகுறைகள் அதை அசிங்கப்படுத்தியதையும் அதில் மேலதிகமாகக் காணலாம்.**

இவ்வூரின் தென்மேற்குப் பகுதியில் அமைந்திருக்கும் செந்நெல் கிராம மக்களுக்கு நீர்ப் பிரச்சினையைத் தீர்த்து தாகம் தீர்ப்பதற்கு பாரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் வழங்கல் திட்டத்தை உருவாக்கினார். முன்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரையுள்ள கட்டிடக் குறைபாடுகளையும் தளபாடக் குறைபாடுகளையும் நிவர்த்திசெய்து அவர் கல்விக்கும் புத்தூக்கத்தினை ஏற்படுத்தினார். குறிப்பாக தென் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இஸ்லாமிய அரபு கலாபீடத்தை உருவாக்கிய பெருமையும் இவரையே சாரும். ஒட்டுமொத்தமாக ஊரைச் சுற்றிப் பார்க்கின்றபோது பாரிய விவசாயப் பிரதேசங்களான வீரயடி அணைக்கட்டு முதல் உடங்காவெளி அணைக்கட்டு வரை அவர் விவசாயத் துறைக்கு செய்திருக்கின்ற மகத்தான சேவைகளையும் எம் கண்களால் காணமுடியும்.

இவை எல்லா சேவைகளுக்கும் மேலாக அல்லாஹ்வின் மாளிகை களின் முகப்புத் தோற்றங்கள் மதீனத்து மனோராக்களாக மாற்றி அதற்கு நவீனமான முறையில் மின் விளக்குகளை அமைத்ததைப் பார்க்கின்றபோது மாமனிதர் அஷ்ர.்.ப் அவர்களின் பாசறையில் உண்மையாக பயிற்றப்பட்ட ஒருவரை அவதானிக்க முடிகிறது. ஆக கல்வி, கலாசார, நீர்ப்பாசன, நீர்வழங்கல், வர்த்தகர்கள், மீனவர்கள், விவசாயிகள் போன்ற வர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் திட்டமிடல் அதிகாரிகள் இல்லாமல் மிகவும் சிறந்த முறையில் திட்டமிட்டு இளவயதில் குறுகிய அரசியல் காலத்தில் செய்த மகத்தான சேவைக்கு இந்த மகனை அரசியலில் விடிவெள்ளியாக்கிய சுவாட் அமைப்பு காலம் பிந்தியாவது தனது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக சொரிகின்றது. சத்தியத்தின் திருவிளக்கே! சமாதானத்தின் வெண் மலரே! சம்மாந்துறையின் அரசியலின் நம்பிக்கை நட்சத்திரமே! உனது ஆயுள்தொடர சேவை வளர வல்ல அல்லாஹ்விடம் கையேந்தி துஆக் கேட்பவர்களாக மீண்டும் வாழ்த்துகிறோம்.

(சமூக சேவையால் மனிதன் பூரணத்துவமாகின்றான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாக்காணும் எங்கள் அன்வர் இஸ்மாயில்!

வித்தியாகீர்த்தி - இறையருட் கவிஞர்
ஏ. இப்றாஹீம்.

சரித்திரங்கள் சாந்தி நிற்கச்
சரித்திரம் சமைத்த ஊர் !
சங்கை மலிந்த சம்மாந்துறை
எங்கும் அவள் நாமம் ஏற்றமுறும்!

**

ஸ்ரீ லங்காவின் அரசவையில்
சம்மாந்துறையின் குரல்களாய்
அன்றலர்ந்த அப்துல் மஜீட், அஷ்ர.ஃ.ப்
தொப்பி முகைதீன் வரிசையிலே
இளமைத் துடிப்புடன் இயங்கும்
இளைஞன் அன்வர் இஸ்மாயில்
இந்நாட்டின் இன்றோர் அமைச்சர்!
இதனால் பூரிக்கின்றாள் சம்மாந்துறை!

**

விவசாயம் செய்து விளைச்சல் பெருக்கும்
விவசாயத்துறை சிறக்கும் நீர்வளத்தால்
நீர்வளம் காத்து நற்பாசனம் வழங்கும்
நீர்ப்பாசன அமைச்சர் நீயானாய்
ஆகையினால் இன்றிந்தப் பாராட்டு விழா!
நீர் - பாசனம் செய்யும் நற்சேனைதான்
நாளை சரித்திரமாய் சாற்றி நிற்கும்!
பாளை விரிந்தது பல பூக்கள் சிரித்திடும்!
பூக்கள் சிரித்திடப் பூச்சிகள் புடை சூழும்
பூச்சிகள் புடைசூழப் பிஞ்சுகள், காய்கள்........
காய்களும் கனியாகிக்
கணக்கிலா நன்மை தரும்!

**

ஊரின் தேவைகள் உளமாற அறிந்துமே
எவரும் கேளாமல் எண்ணித்துணிந்து
நிறைவேற்றி நிறைவு காணும் நின்திறமை
நிறைவான தென்பதை நிரூபிக்கும்
நெல்லுப் பிடியாற்றுச் சந்தி!
ஊரின் நுழைவாயில்
உலமா சபைப் பணிமனை
பேர் சொல்லிடும்!
தந்தை அன்வர் இஸ்மாயில் என்றே!
இப்படி விரிந்து செல்லும் சேவைப்பட்டியல்!
எப்படி உம்மை மறைக்கும்?
எப்படி உண்மை மறக்கும்!

**

நெஞ்சில் உரம் கொண்டு
நேர்மைத் திறன் கொண்டு
அஞ்சாமல் ஆற்றும் அறப்பணிகள்
மிஞ்சாமல் அடி தொடரும் ......
விஞ்சிடும் நன்மைகள் மேட்டிமை தந்திடும்
ஆகையினால்,
இகபர நல்வாழ்வுக்காய் இவ்வேளை
இதயம் கனிந்து வாழ்த்துகின்றோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்ப்பாசனத்தை மிகச் சரியாகப் பயன்படுத்தி அபிவிருத்தி காண்பதற்கு ஒரு சரியான சிந்தனை

- மர்லின் மரிக்கார்

**வ**ரலாற்றுக் காலம் தொட்டு இலங்கை ஒரு விவசாய பொருளாதார நாடாகவே விளங்கி வருகின்றது. 1977 ம் ஆண்டின் பின்னர் திறந்த பொருளாதாரக் கொள்கை பாரிய எதிர்பார்ப்புடன் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்பயனாக கைத்தொழில் சேவைகள் துறையில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றங்கள் ஏற்பட்டன. ஆயினும் இந்நாட்டின் விவசாயப் பொருளாதாரத்தை இக்கொள்கையால் இற்றைவரை மேவமுடியவில்லை. இதற்கு பல காரணிகள் துணைபுரிந்து வருகின்றன. இலங்கை ஆரம்பகாலம் தொடக்கம் விவசாயப் பொரளாதார நாடாக விளங்குவதற்கு இங்கு நிலவுகின்ற சீதோசன நிலையும் விவசாயத்திற்கு தேவையான அளவு நீரைக் கொண்ட கங்கைகளும் ஆறுகளும் இயற்கையாக அமையப் பெற்றிருப்பதும் மன்னர் காலத்தில் நீர்ப்பாசனத்திற்கென அமைக்கப்பட்ட குளங்கள் காணப்படுவதும் இதற்கு துணைபுரியும் சாதகப் பண்புகளாக இருக்கின்றன.

இருந்தும் அண்மைக்கால ஆட்சியாளர்களின் செயற்பாடுகளால் விவசாயப் பொருளாதாரத் துறை பாரிய வீழ்ச்சியை அடைந்து விடக்கூடிய ஆபத்தை எதிர்நோக்கியது. இவ்வாறான சந்தர்ப்பத்தில்தான் விவசாயப் பொருளாதார ரீதியாக நாடு தன்னிறைவு அடைவதற்குத் தேவையான திட்டங்களைச் சுமந்த வண்ணம் மகிந்த சிந்தனை வெளிவந்தது. இத்திட்டங்கள் யாவும் நடைமுறைக்குச் சாத்தியமானவை. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மூன்று தசாப்தங்களுக்கும் மேற்பட்ட பாராளுமன்ற அரசியல் அனுபவத்தின் வெளிப்பாடுகளே இத்திட்டங்கள். இத்திட்டங்களை சீராகவும் முறையாகவும் முன்னெடுப்பதற்கு தேவையான தலைமைத்துவத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரு வருட காலமாக வழங்கி வருகின்றார்.

விவசாயப் பொருளாதாரத் துறையில் தன்னிறைவை அடைவதற்கு சீரானதும் ஒழுங்கு முறையானதுமான நீர்ப்பாசன வசதி இன்றியமையாதது. இதனைக் கருத்திற்கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நீர்ப்பாசனத்துறைக்கென அமைச்சொன்றை ஏற்படுத்தினார். நாட்டின் விவசாயப் பொருளாதாரத் துறை வீழ்ச்சியை நோக்கி நகர்வதற்கு அண்மைக்காலமாக நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படாததும் ஒரு முக்கிய காரணம். இதனையும் கவனத்தில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துத்தான் ஜனாதிபதி இந்த அமைச்சை உருவாக்கினார். நாட்டின் விவசாயப் பொருளாதார மேம்பாட்டிற்கு அடித்தளமாக விளங்கும் இந்த அமைச்சின் பணிகள் சீராகவும் ஒழுங்கு முறையாகவும் சுறுசுறுப்பாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்குப் பொருத்தமானவர் நாட்டின் முக்கிய விவசாய மாவட்டங்களில் ஒன்றான திகாமடுல்லையை பிறப்பிடமாகக் கொண்ட சட்டத்தரணி எம்.ஐ. அள்வர் இஸ்மாயில்தான் எனக் கருதி இந்த அமைச்சுப் பொறுப்பை அவரிடம் கையளித்தா ஜனாதிபதி. அமைச்சர் அன்வர் இஸ்மாயில் சுறுசுறுப்பானவர். செயற்திறன்மிக்க இளைஞர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த அமைச்சுப் பதவியை என்ன நோக்கத்துடன் என்ன எதிர்பார்ப்புடன் தம்மிடம் ஒப்படைத்திருக்கின்றார். இவரது செயற்பாடுகள் நீர்ப்பாசனத் துறைக்கு தெம்பை அழித்திருக்கின்றன. விவசாயிகள் மத்தியிலும் இவரது பணிகள் வரவேற்பை பெற்றிருக்கின்றன. நீர்ப்பாசனத் துறை அமைச்சை பொறுப்பெடுத்த ஒரு வருட காலத்திற்குள் பல நீர்ப்பாசன அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் இவர் தொடக்கி வைத்திருக்கிறார்.

அந்தவகையில் அம்பாந்தோட்டை வெஹரகல நீர்ப்பாசனத் திட்டம் பிரதானமானது. இப் பிரதேசத்தில் உள்ள சுமார் 5000 ஹெக்டயர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதிகளை செய்துகொடுக்கும் நோக்கிலேயே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 1972 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படுகின்ற இந்நீர்ப்பாசனத்திட்டத்தின் மூலம் சுமார் 2600 விவசாயக் குடும்பங்கள் நன்மைபெற இருக்கின்றன. இந்நீர்ப்பாசனத்திட்டத்தின் வேலைகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைச்சருடன் அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டார். அங்கு குழுமியிருந்த விவசாயிகளுடனும் அளவளாவினார். இது இவ்வாறிருக்க அம்பாரை மாவட்டத்தில் உள்ள றம்புக்கன் ஓயா நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்ட வேலைகளும் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டிருக்கின்றன. 2000 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதிகள் செய்துகொடுக்கும் நோக்கில் 2500 மில்லியன் ரூபா செலவில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இப்பிரதேசத்திற்கான நீர்ப்பாசன வசதியை மேம்படுத்தி விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கிலேயே இத்திட்டம் நடைறைப்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் ஊடாக இப்பிரதேசத்தில் பொருளாதார ரீதியான சுபீட்சத்தை ஏற்படுத்த முடியுமென எதிர்பார்க்கப்படு கின்றது. இந்நீர்ப்பாசனத்திட்ட அபிவிருத்தி வேலைகள் யாவும் நிறைவுபெற்றதும் சுமார் 19100 விவசாயக் குடும்பங்கள் நன்மைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை புத்தளம் கெதுறுஓயா நீர்ப்பாசனத் திட்டம் 6500 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட இருக்கின்றது. இத்திட்டத்தின் மூலம் 11000 ஹெக்டயர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி செய்துகொடுப்பதற்கு திட்டமிடப்பட்டு இருக்கின்றது. இதனால் 14000 விவசாயக் குடும்பங்கள் நன்மைபெற இருக்கின்றது.

இதேநேரம் இந்நீர்ப்பாசனத்தில் நீர் மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கும் வடமேல் மாகாணத்தில் உள்ள பல பிரதேசங்களுக்கு குடிநீர் வசதி செய்துகொடுப்பதற்கும் நன்னீர் மீன் வளர்ப்பை மேம்படுத்துவ தற்கும் உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது. இந்நீர்ப்பாசனத் திட்டத்தை நடைறைப்படுத்தும்போது சுமார் 700 குடும்பங்களை வேறு இடங்களில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளக் குடியமர்த்த வேண்டிய நிலமை ஏற்பட்டிருக்கின்றது. இதற்குத் தேவையான காரணிகள் அமைச்சரவையின் அனுமதியுடன் வேறு இடங்களில் பெறப்பட்டிருக்கின்றன. இதனடிப்படையில் குடும்பங்கள் விரைவில் மீளக் குடியமர்த்தப்படவிருக்கின்றன. மேலும் பாரிய நிதி முதலீட்டுடன் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் அடுத்த நீர்ப்பாசனத் திட்டம் ஹெடஓயா நீர்ப்பாசனத் திட்டமாகும். இத்திட்டத்திற்கு 4250 மில்லியன் ரூபா செலவிடப்படவிருக்கின்றன. ஹெடஓயா மொனறாகலை மாவட்டத்தில் அமைந்திருந்தாலும் இந்நீரைப் பயன்படுத்தம் விவசாய நிலங்கள் அம்பாரை மாவட்டத்திலேயே காணப்படுகின்றன. இந்நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் இப்பிரதேச விவசாயிகள் பாரிய நன்மைகளைப் பெறுவர்.

சம்மாந்துறை நெயினாகாடு வீரையடி அணைக்கட்டு சுமார் 80 மில்லியன் ரூபா செலவில் தற்போது புனரமைக்கப்படுகின்றன. அத்தோடு 14 மாவட்டங்களில் உள்ள 21 நடுத்தர நீர்ப்பாசனத் புனரமைப்பு வேலைகளை இவ்வருடம் முடிவிற்குள் பூர்த்திசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென 430 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 20700 விவசாயக் குடும்பங்கள் நன்மைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு கடந்த ஒரு வருட காலப்பகுதிக்குள் பல நீர்ப்பாசனத் திட்டங்களின் அபிவிருத்தி வேலைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இவ்வேலைத்திட்டங்கள் பூர்த்தியாகும் போது நாட்டின் பெரும்பாலான விவசாய நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும். இதன் மூலம் நாட்டின் விவசாயப் பொருளாதாரத் துறையும் மேம்பாடு அடையும். அதேநேரம் அடுத்த வருடமும் மேலும் பல நீர்ப்பாசனத் திட்டங்களின் அபிவிருத்திவேலைகள் தொடங்கப்படுவதற்கு திட்டபிடப்பட்டி ரக்கின்றன. நாடு விவசாயப்பொருளாதார ரீதியாகத் தன்னிறைவு அடைவத ற்கான காலம் வெகுதூரத்தில் இல்லை என்பதையே இவை காட்டுகின்றன. இதற்குத் தேவையான சரியான தலைமைத்துவத்தை ஜனாதிபதியும், நீர்ப்பாசனத்துறைக்கு அவசியமான முறையான வழிகாட்ட ல்களை அமைச்சர் அன்வர் இஸ்மாயிலும் வழங்கிக் கொண்டிருக்கின்றனர் என்பதில் ஐயமில்லை.

( நன்றி : தினகரன் வாரமஞ்சரி )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் அமைச்சர் நீர்

நீர் இப்போது
நீர் அமைச்சர்......

நீர் என்கின்ற
நிசப்த ஒலி
ஓடிப் பாய்ந்து
தாவித் தவழ்ந்து
வீறு நடை போட்ட பாதை
நாயுருவியும், நெருங்கியும்
தொட்டாச் சுருங்கியும் - என
முட்களும், கற்களும்
நிரம்பியதால் சூறத்து இளந்த
குறும்பாதைதான் - இருந்தாலும்
அதன் உயரம்
இமையமாகவும் இருக்கலாம்
இன்ஷா அல்லாஷ்....

அழ மறுத்த நீர்நிலைகளை
விம்மி விம்மியும்
தேம்பித் தேம்பியும்
அழவைத்தாய்...
வரமறுத்த தண்ணீரை
வழிந்தோடச் செய்தாய்...
பித்தம் வெடித்த குதிகால் போல
வயல்நில வரவைச் சஹனகள்
பரட்டை பத்திக் கிடந்த போது
போசனம் பெருகச் செய்ய
சிறந்த நீர்ப்பாசனம்
நீ செய்தாய்...
வாய் மூடி வற்றிப்போய்
மௌனிகளாய்க் கிடந்த
ஊமை வாய்க்கால்களை
உரத்துப் பேசவைத்து
நீர் நடனம் ஆடச் செய்தாய்...

அணையாப் புகழ் பேச
அணைக்கட்டும்..,
நெடுங்காலமாய்
நிலைத்திருக்கும்
நெயினா காட்டு
மேம்பாலமும்..,
நீங்காத கதைகூற
நீச்சல் தடாகமும்..,
திட்டு திட்டென்று
திட்டிக் குமிக்கும்
திட்டி நிலத்தில்
விளையாட்டுத் திடலும்..,
முகம் மலர்ந்து சலாம் கூறும்
முகப்புக் கோபுரமும்..,
ஜாம் ஜாமென்று வரும்
ஜம்மிய்யத்துல் உலமா
சபைக் கட்டடமும்..
என்றெல்லாம் - உன்
சுப்பறான சேவைகளுக்கு
சுப்பர் மார்க்கட் ஒன்றே
சுப்பறான சான்றைய்யா....

நறுக்கி விடும் உன் பேச்சு
சிலரை நசுக்கி நடு நடுங்கச்
செய்யுமதில் அய்யமேயில்லை
என்பர்...
கனதியான உன் கருத்து
சிலர் மனதை கருகலடையச்
செய்யுமதில் அய்யமேயில்லை
என்பர்...
புடைந்திருக்கும் - உன்
புகழ் சிலரைப்
புழுங்கவே செய்யுமதில்
அய்யமேயில்லை என்பர்...

உலங்கு வான்
ஊர்தியையும் சுட்டு வீழ்த்துமும்
ஏவுகணைப் பேச்சோடு..
நீ நடந்தால்
ஓர் இராணுவவீரன்..
நீ நின்றால்
ஓர் போர்க் கவசம்..

சாணை பிடிக்கும்
சம்பவமாய்
பொரி பறக்கும் தேர்தல்
உன் சகாப்தத்தில்
இன்னும் பல
வந்திடவே வேண்டுமையா...

சம்மாந்துறையின்
சகோதரனாய்...
சரித்திரம் படைக்கும்
சாதனை வீரனாய்...
சகாப்தத்தின்
சன ரஞ்சகனாய்...
சங்கிலி முடிச்சவிழ்த்த
சாகசனாய்...

மின்னும் மின்னும் உன் புகழை
இன்னும் மின்னும் கூறாமல்
மைத் துளிகள் உறங்கட்டும்
மெய்த் துளிகள் உலங்கட்டும்...
உலகே உன்னை அறியும்
ஒருவனே உன்னை அறிவான்...

**துறையூரான் அஸாறுதீன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முந்தெனிஓயா பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டம் றம்புக்கன் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டம்

- எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் -

முந்தெனி ஆற்று அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இடம் பெறும் றம்புக்கன் ஓயா நீர்த்தேக்க செயற்த்திட்டம் பாரிய அளவிலானதொரு நீர்ப்பாசனத் திட்டமாகும். பலநோக்கு அபிவிருத்திக் குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்படும்போது நதிப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி முறையாகவும் படிப்படியாகவும் நடைபெறும். இந்த செய்ற்திட்டம் அம்பாறை மாவட்டத் திலுள்ள மஹாஓயா பகுதியில் அமைந்துள்ளது.

இலங்கையின் தென்கிழக்கு பக்கவாட்டில் முந்தெனி ஓயா அமைந்துள்ளது. இது இலங்கைத்தீவில் உள்ள 17 நதிகளும் மிகவும் பிரதானதொரு நதியாகும். இது ஆயிரம் சதுர அடி கிலோமீற்றர் பகுதியினை உள்ளடக்கும். இதன் எல்லைகளாக மதுறுஓயா பள்ளத்தாக்கு மேற்குப்புற மாகவும் மஹலைவட்டுவான் ஆறு கிழக்குப்புறமாகவும் மியன்கொல்ல, வடக்குப்புறமாகவும் கல்ஓயா தெற்குப்புறமாகவும் அமைந்துள்ளது.

றம்புக்கன் ஓயா, மஹாஓயா, கல்லோடை ஆறு என்பன முந்தெனி ஓயாவின் மேற்ப்பகுதியில் அமைந்துள்ளது. முந்தெனிஓயா நிலம், நீர்வள அபிவிருத்தித்திட்டத்தின் கிழ் மூன்று நீர்த்தேக்கங்கள் அமைக்கத்திட்டமிடப் பட்டுள்ளன. இங்குள்ள விவசாயக் காணிகள் 12000 ஏக்கருக்கு நீர்ப்பாச்சல் வசதிகளை செய்து கொடுக்க முடியும். அந்த வகையில் முதலாவதாக கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள மஹாஓயா பிரதேச செயலாளர் பிரிவில் றம்புக்கன் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டம் ஆரம்பிக்கப்ப டுகிறது.

இன்றும் கூட றம்புக்கன் ஓயா நீர்த்தேக்கம் உள்ள பகுதியில் 1மைல் நீளமான பண்டைக்கால அணைக்கட்டினைக் காணலாம். அவற்றின் மேல் காடுகள் வளர்ந்து காணப்படுகின்றன. கி.பி.400 ம் ஆண்டளவில் சத்தாதிஸ்ஸ மன்னாரில் கட்டப்பட்டது. என்ன காரணத்திற்காகவோ இந்த அணைக்கட்டு பூரணமாகக் கட்டி முடிக்கப்படவில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக்காலத்தில் அதாவது 1977ம் ஆண்டில் அப்போதைய நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலை அமைச்சரினால் றம்புக்கன்ஓயா நீர்த்தேக்கத்தினைக் கட்டுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால், இந்த முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. எனவே, பலநூற்றாண்டுகளாக மூடிக்கிடந்த இந்த செயற்திட்டம் இப்போது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மஹிந்த சிந்தனை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மஹாஓயா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தும் அதிசிறந்த செயற்திட்டமாக இது கணிக்கப்படுகிறது.

அரசாங்கத்தினால் பெருந்தொகையான மூலதனமிடப்பட்டு செயற்படுத்தப்படும். திட்டத்தின் மூலம் இங்கு வாழும் விவசாயக் குடும்பங்கள் நன்மையடைவதுடன், முந்தெனிஓயாப் பள்ளத்தாக்கில் மழையினை நம்பி விவசாயம் செய்யும் மக்களை விடவும் கூடுதலான நன்மை பெறுவர். அத்துடன் பிரதேச அபிவிருத்தி வேறுபாடுகளும் நீங்கி சமமான பொருளாதார வளர்ச்சி ஏற்படும். மஹாஓயா பிரதேசத்தில் 23000 மக்கள் வாழ்கின்றனர். இக்குடும்ப ங்கள் மாதமொன்றுக்கு ரூபா ஆயிரம் மட்டுமே வருமானமாகப் பெறுகின்றனர். இலங்கையைப் பொறுத்தவரையில் சனத்தொகையில் மூன்றில் ஒருபங்கு வறுமைக் கோட்டிற்கு கிழ்வாழும் மக்களாகும். அவற்றில் உயர்வலய கிராமப் புறங்களிலேயே மிகவும் ஏழைகள் வாழுகின்றனர். மஹாஓயாவும் அதுபோன்ற ஒரு பகுதியே. இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 7-8 வீதமாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசு இந்த வளர்ச்சியினை அடைவதற்கு வறுமையான மக்களுக்குச் சாதகமான பொருளாதார வளர்ச்சி உபாயங்களைக் கையாளத் திட்டமிட்டுள்ளது. இதன்படி இலங்கையின் தேசிய வளங்களையும் மனித வளங்களையும் பயன்படுத்தி பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்தும். இதனை அடைவதற்காக உட்கட்ட மைப்பு வசதிகள் அபிவிருத்தி சமூக உட்கட்டமைப்பு, விவசாயம்,கால நடை அபிவிருத்தி மற்றும் மீன்பிடித்துறை அபிவிருத்தி, கைத்தொழில்துறை வாழ்க்கைத்தரம் உயர்வதான ஆதார நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. இவைகள் அனைத்தும் வறுமையான மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளாகும். வறுமை, பசி, நோய், கல்வி அறிவின்மை போன்றவை கிழக்கிலங்கையின் உலர்வலயப் பகுதியான மஹாஓயா மக்களிடையே காணப்படும் பொதுவான குறைபாடுகளாகும்.

உலகின் எங்கும் காணப்படும் இந்தப் பொதுவான இக்குறைபாடுகளை நீக்கி அவர்களின் வாழ்வினை சிறப்பாக்குவதற்கு சகல அபிவிருத்தித்திட் டங்களும் அமைய வேண்டும். ஐக்கிய நாடுகளின் இக்கொள்கையினை இலங்கையும் ஏற்றுக்கொண்டுள்ளது. வறுமையினைக் குறைப்பதே இதன் பிரதான நோக்கமாகும். இலங்கையின் மஹாஓயா பிரதேசவாதிகள் மிகவும் ஏழைகளாகவும் விவசாயத்தினை நம்பி வாழ்பவர்களாகவும் இருக்கின்றனர். அவர்களது பிரதான வாழ்க்கைக்குரிய வருமானம் முழுமையாக விவசாயம் மட்டுமே.எனவே, கிராமிய விவசாயத்து றையினையும் அதேவேளை, அதனு டன் தொடர்புடைய ஏனையதுறைகளையும் அபிவிருத்தி செய்தல் வேண்டும்.

மஹாஓயா பிரதேச செயலாளர் பிரிவில் போதிய நிலவளமுண்டு. கால்நடை அபிவிருத்திக்கு சிறந்த வாய்ப்புண்டு. ஆனால், அவைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணமாகப் பயன்படுத்தப்படவில்லை. எனவே, றம்புக்கன்ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்தின் மூலம், நீர்ப்பாசன வசதிகள் அளிப்பதுடன் சகல உட்கட்டமைப்பு வசதிகளையும் அதிகரிப்பதனால் நீர்ப்பாசனத்தின் மூலம் விவசாய அபிவிருத்தியும் பயனும் அந்த மக்களை வந்தடையும்.

றம்புக்கன்ஓயா நீர்த்தேக்க செயற்திட்டம் 45,500 Ac அடி கொள்திறன் கொண்ட நீர்த்தேக்கமாகும். 3500 ஏக்கர் காணி நிலத்திற்கு நீர்ப்பாசன வசதிபெறும். இதனால் பொருளாதார வளர்சிக்கு விவசாயம் முக்கிய காரணியாக அமையும். 4.75 மைல் நீளமான பிரதான வாய்க்கால்கள் இருமருங்கிலும் அமைந்து மொத்தமாக 20 மைல் நீளமாக இவை அமையும். நீர்ப்பாசன வசதி, உட்கட்டமைப்பு வசதி, நீர்விநியோகம், பாதைகள், சுகநலன் கல்வி, விவசாயம், கால்நடை அபிவிருத்தி என்பவற்றிக்கு 1750 மில்லியன் ரூபா செலவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்தச் செலவு 2500 மில்லியன் ரூபாவாகும். இந்த செயற்திட்டம் 2007 ம் ஆண்டு தொடக்கம் 2010 ம் ஆண்டு வரை அமுலாக்கப்படும். நீர்ப்பாசனப் பகுதியினை நீர்ப்பாசனத் திணைக்களம் மேற்பார்வை செய்யும் அதேவேளை, ஏனைய துறைகளை அவற்றிக்குரிய துறைசார் அமைச்சுக்கள் மாகாண மட்டத்திலோ, தேசிய மட்டத்திலோ கவனமெடுத்துச் செயற்படுத்தும். செயற்திட்டம் தொடங்கி 3வது வருடத்தில் நீர்ப்பாசனம் சிறப்பாக இயங்கி முழு அளவில் பயன்தரும். அதாவது 11480 மெற்றிக்தொன் நெல், 11150 மெற்றிக்தொன் கொச்சிக்காய், 4155 மெற்றிக்தொன் வெங்காயமும் ஓயாவில் இத்திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும். மக்களுக்குச் சுத்தமான குடிநீர் வழங்கலுக்கு இந்த நீர்த்தேக்கத்தில் 22 எம்.சீ.எம். வருடாந்தம் கிடைக்கப்பெறும்.

நீர்ப்பாசன முதலீட்டில் 533 மில்லியன் ரூபாவில் 15 வீதம் மீள் பெறுகையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளில் முதலீடு செய்யப்பட்டவை சிறந்த நெடுஞ்சாலை, பாதை, சுகாதார வசதி, கல்வி வசதி தோட்ட வருமானம் என்பன மஹாஓயா மக்களின் வறுமையினை ஒழித்து வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தும். எனவே, இந்த செயற்திட்டத்தின் உள்ளார்ந்த குறிக்கோள் நிறைவேறும் போது நீண்டகாலத்தில் ஒருபுது யுகத்தினைக் கொண்டு வரும் அபிவிருத்தியினைத் துரிதப்படுத்தி வறுமையான மக்களின் வாழ்வினை வளம்படுத்துவதே அரசாங்கத்தின் நம்பிக்கையும், கொள்கையுமாகும்.

( நன்றி: தினகரன் வாரமஞ்சரி: 2007- 02-11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் கிழக்குப் பிராந்தியத்தின் இன்னும் ஒரு மறுமலர்ச்சி கல்லோயா நவோதய திட்டம்

- ஏ.எல்.எம். யாசின் ஜே.பி -

தென் கிழக்குப் பிரதேசத்தை பொன்கொளிக்கும் பிரதேசமாக மாற்றியதில் கல்லோயாத் திட்டத்திற்கு பெரும் பங்குண்டு. இத்திட்டம் சுமார் 50 வருடங்களாக புதிய மாற்றங்கள் எதனையும் பெறாத போது அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த மகன் ஒருவருக்கு நீர்ப்பாசன அமைச்சு கிடைக்கப்பட்டதன் மூலமாக மீள் எழுச்சிக்கு திட்டமிடப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சி தருகின்றது. இன்னும் சம்மாந்து றையைச் சேர்ந்த இஸ்மாயில் துரை என்ற மனிதனுக்கு கிடைத்த சந்தர்ப்பம் மீண்டும் அதே ஊரைச் சேர்ந்த அன்வர் இஸ்மாயில் என்ற அமைச்சருக்கு கிடைத்திருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சி தருகின்றது.

அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கு நீர்ப்பாசன அமைச்சு கிடைத்த வுடன் அவர் மேன்மைதங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களோடு வெஹரகல, ஹெடஓயா, றம்புக்கன்ஓயா போன்ற நீர்ப்பாசனத் திட்டங்கள் பற்றி உரையாடிய அதே சந்தர்ப்பத்தில் கல்லோயா நவோதய திட்டத்தை பற்றியும் எடுத்துரைத்தபோது மிகுந்த மகிழ்ச்சி தெரிவித்த ஜனாதிபதி அவர்கள் 2007 ம் ஆண்டைய வரவுசெலவுத் திட்டத்தில் 1260 மில்லியன் இதற்காக ஒதுக்கி இவ்வேலைத்திட்டத்தினை ஆரம்பிக்கும்படி பணித்துள்ளார். கிராமிய பொருளாதார மேம்பாட்டினை உன்னத குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டம் பல்வேறு வழிகளில் செயற்படவுள்ளது.

பலநோக்கு இலக்குடன், ஆரம்பிக்கப்பட்ட கல்ஓய நீர்வள அபிவிருத் தித்திட்டம், 50 ஆண்டினை பூர்த்தியான நிலையில், புதிய இலக்கினை அடிப்படையாகக் கொண்டு கல்லோயா நவோதய திட்டம் ஆரம்பிக்கப்ப டுகிறது. இலங்கையின் முதன்மையான இம்முயற்சியிலிருந்து பரந்துபட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளது. 'நவீன இலங்கையை நோக்கி' எனும் கொள்கைக்கு அமைய, இத்தேசிய நிகழ்ச்சித்திட்டம் காலத்தின் தேவைக ளையும், எதிர்பார்ப்புக்களையும் எதிர் கொள்ளும் வகையில் அமைவதோடு, துறைசார் அபிவிருத்தி பலவற்றைக் கொண்டு செயற்படவுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனத்தொகைப் பெருக்கம் இன்று எமது பிரதேசத்தில் புதிய தேவைப்பாடுகளை உணர்த்தியுள்ளது. காணி, நீர் மற்றும் இயற்கை வளங்கள் போன்றவைகள் உட்பட பல்வகைப்பட்ட வளங்கள் உகந்த முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டு பாவனைக்கு உட்படுத்த வேண்டும். விவசாய உற்பத்தி மேலும் மேம்படுத்தப்பட வேண்டியதுடன், அறுவடையின் பின்னரான நடவடிக்கையில் பல வாய்ப்புக்கள் இருப்பதனையும், தொழில் முயற்ச்சி அபிவிருத்திற்கான இயல்திறன் உள்ளடக்கியிருப்பதையும் கவனத்தில் எடுக்க வேண்டும். கல்லோயா நவோதய திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணிகளுக்கு ஊக்கமூட்டுவதாக அமைவதோடு நீர்ப்பாசன மூலமான விவசாயம், கைத்தொழில் மக்களுக்கான சேவைகள் மற்றும் பௌதீக உட்கட்டமைப்பை மேம்படுத்தும் பணிகளை ஊக்குவிக்கும்.

குறிப்பாக நீர், மக்கள், பொருளாதாரம், ஏனைய தேவைகள் முதலானவற்றில் பல்வேறு மாற்றங்களை கொண்டு வரக்கூடியதாக இத்திட்டம் அமையும்.ஒருங்கிணைந்த நீர்வள அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசன திட்டங்களின் மூலம் உகந்த பாவனைக்குட்படுத்தப்படாத வளங்கள் வலுவூட்டும் வகையிலும் நீர்ப்பாவனைத்திறனை மேம்படுத்தம். நீர்ப்பாசன மூலம் மேற்கொள்ளப்படும் விவசாயத்திலிருந்து கூடிய வருமானத்தைப் பெறக்கூடிய வகையாக ஒரு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்குதல்.மக்களுக்கு சேவையாட்டு வதையே நோக்காகக் கொண்டு, பௌதீக் உட்கட்டமைப்பான வீதிகள், நீர்வளங்கள், சுகாதாரம், கல்வி என்பவற்றை அபிவிருத்தி செய்தல் மற்றும் தரத்தை மேம்படுத்தல். அறுவடையின் பின்னதான தொழில்நுட்ப நடவடிக்கை கள் உட்பட விவசாய அடிப்படையின் கைத்தொழில்களின் இயல் வளத்தை ஒருங்கிணைப் பெறுமதி கூட்டல் நடவடிக்கைகள் மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி முதலானவற்றிற்கு பங்களிப்புச் செய்யும். கல்லோயா நவோதய திட்டத்தின் மூலமாக இப்பிராந்திய மக்களின் வாழ்க்கையில் தர மேம்பாடு அடைவதோடு வருமானம் அதிகரித்தல், புதிய வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தல், சமூகங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தல் முதலான பல்வேறு விடயங்களில் நன்மைகள் ஏற்படவுள்ளன.

கல்லோயா நவோதய திட்டம் இரண்டு கட்டமாக செயற்படுத்தப்படும். முதலாவது கட்டம்: மூன்று ஆண்டு முதலீட்டுத் திட்டத்திற்கான செயற்பாட்டுப் பட்டியலில் உள்ள முதன்மையான விடயங்கள் உடனடியாகச் செயற்படுத்த ப்படும்.இரண்டாம் கட்டம்: மேலும் இரண்டு தொடக்கம் மூன்று ஆண்டுகளுக்கு நீடிக்கப்படுவதோடு பாரிய அளவிலான (செய்திட்ட) முயற்சிகளும் மேற் கொள்ளப்படும். இந்நிகழ்ச்சி திட்டத்தை உருவாக்குவதற்கும், விரிவாக்கி உரிய முறையில் கட்டம் கட்டமாக செயற்படுத்துவதற்கும் ஏதுவாக ஆலோ சனைக் குழாம் ஒன்றைக் கொண்ட செய்பாட்டுக்குழு அண்மையில் தாபிக்க ப்பட்டுள்ளது.

தூர நோக்கிப் பார்க்கின்றபோது இப்பிரதேசத்தின் கிராமங்களுக் கிடையே இன்னும் ஒரு புதிய அபிவிருத்தி நகர்வு இடம்பெறவுள்ளது. அத்தனைக்கும் காரணமான அமைச்சர் அன்வர் இஸ்மாயிலையும் மேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களையும் எதிர்காலம் என்றும் நன்றியுடன் நினைத்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர் மக்கள் பிரார்த்தனை

“பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே”
கற்றவர் கூறியமுத் தொளிர் வார்த்தையை
காலமெல்லாம் நிலை கொண்டிட வைத்தவர்.
**
அல்லா தந்த அருட்கொடை இதுவென
ஆய்ந்தோய்ந்து பார்த்து நன்மைகள் கருதி
எல்லாமக்களும் ஏற்றிடும் வண்ணம்
இயன்றதைச் செய்து இன்புறுகின்றாய்.
**
பென்னம் பெரிய சேவைகள் செய்து
பிறந்த மண்ணுக்குப் பெருமையைத் தந்தாய்
முன்னொரு போதிலும் கண்டிடா வளர்ச்சியை
முழுச் சமுதாயமும் போற்றிடச் செய்துள்ளாய்.
**
கையில் கிடைத்தது அமானிதமென்று
கரிசனையோடு நல் திட்டம் வகுத்து
மெய்ப் பயன் கிடைத்திட வேண்டுமென்று
விழிப்புடன் பணிகள் ஆற்றி மகிழ்கின்றாய்.
**
அன்னம்தேடும் பறவைகள் போல
அங்கும் இங்கும் அலைந்து திரிந்து
பென்னம் பெரிய இரைகளைப் பொறுக்கி
பெற்ற மண்ணுக்கு உயர்வை அளித்தாய்.
**
ஊருக்குள் மட்டும் உன்சேவையைப் பெய்து
உள்ளே முடக்கி வைத்து விடாமல்
பாருக்கும் சேவைகள் பகிர்ந்தளிக்க நண்ணி
பல்வகைத் திட்டங்கள் தீட்டியும் உள்ளாய்.
**
நீர்ப்பாசனத்தின் அமைச்சராய் ஆன
நியமனம் உனக்குக் கிடைத்ததனாலே
ஊர்வாழ் விவசாயப் பெருமக்கள் யாவரும்
உன்மீது இரக்கம் மிகுதமாய்க் கொண்டனர்.
**
ஒவ்வொரு வட்டையின் அவசியத் தேவைகளும்
ஓராயிரத்திற்கு மேலிருந்தாலும்
ஒவ்வொன்றாக வரிசையில் நிறைவேற்றி
உயர் பணியாகச் செய்து வருகின்றாய்.
**
கந்தோர் தேடி அலைந்து வந்த எம்மூர்
கமக்காரர் ஊரிலேயே வேலைகளைச்செய்ய
கந்தோர் ஒன்றைத் தோற்றுவித்துத்தந்த
கடுஞ்சேவைக்காக நாம் உமை வாழ்த்துகின்றோம்.
**
உள்ளத்திலுள்ள உயர்ந்த
எண்ணங்களில்
ஒருதுளி மாற்றமும் செய்திடா
வண்ணம்
அள்ளி அள்ளி மக்களுக்காய்ச்
சேவைகள் செய்ய
அன்வறிஸ்மாயிலே உமை
வேண்டுகின்றோம்.
**
மனதில் உறுதி நீ கொள்வதற்கும்
மனச்சோர்வகற்றி நீ வாழ்வதற்கும்
தினமும் சேவை செய்வதற்கும்
திரண்டு பிரார்த்தனை
செய்கின்றோம்.
**
உந்தன் ஆயுள் நீண்டு
நிலைக்கவும்
உன்பெயர் நிலைத்து நீண்டு
நிற்கவும்
சொந்த ஊர்மக்கள் நாங்கள்
எல்லாரும்
சூழ்ந்து உமக்காய்ப் பிரார்த்தனை
செய்கின்றோம்.
**

**கலாபூஷணம், கலைமணி**
**ஏ.ஸீ. இஸ்மாலெவ்வை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெகரகல தொடர்பாக ஜனாதிபதியுடனான ஆலொசனையில்



ஜனாதிபதியின் தந்தையின் கனவினை நிறைவேற்ற அமைச்சர் அன்வர் இஸ்மாயில்



ஜனாதிபதியின் நீண்டகால எண்ணம் நிறைவேறுகிரது



மதகுருவுடன் வெகரகலவில் அமைச்சர்



நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் வித்யா ஜோதி ஏ.டீ.எஸ். குணவர்தனவுடன் அமைச்சர்



செயலாளர் வித்யா ஜோதி ஏ.டீ.எஸ். குணவர்தன திட்டத்தின் பணிகளை விளக்குகின்றபோது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மாகான மக்களின நீண்டகால தேவையாக
இருந்த அம்பாந்தோட்ட வெகரகல
நீர்ப்பாசனத்திட்டப் பணிகள்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாறை மகாஓயா ரம்புக்கன் ஓயா திட்டம்
ஆரம்பித்து வைக்கப்பட்டபோது அமைச்சர் சமல்
ராஜபக்ஷவுடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஐம்பது வருட தேவையாக இருந்த சம்மாந்துறை நீர்ப்பாசன அலுவலகத்தேவையை அமைச்சர் பூர்த்திசெய்கிறார்.

சம்மாந்துறை நீர்ப்பாசன அலுவலக திறப்பு விழாவில் நீர்ப்பாசன பொறியியலாளருடன் அமைச்சர்





சம்மாந்துறையில் நிரந்தர நீர்ப்பாசன அலுவலக கட்டிடத்துக்கான அடிக்கல் நடும் போது

நீர்ப்பாசன அலுவலகத்துக்கு புதிதாக வாகனம் ஒன்றை வழங்கிய போது





கேசவன் வெளி அணைக்கட்டு வேலைகள் நீர்ப்பாசன அமைச்சர் அன்வர் இஸ்மாயில் நிதி ஒதுக்கீட்டில் நடைபெறும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சம்மாந்துறை ஹிஜ்ரா பள்ளி நுழைவாயில்




மஸ்ஜிதுல் ஜாரியா (கையாட்டி) பள்ளிவாசல்
அடிக்கல் நாட்டு விழா



சம்மாந்துறை பிரதான நுழைவாயிலுக்கான மாதிரி



நிர்மாணிக்கப்பட்டு வரும் சம்மாந்துறை
பிரதான நுழைவாயில்



ஜம்மியத்துல் உலமா தலைமை காரியாலய
கட்டிட மாதிரி



நிர்மாணிக்கப்பட்டு வரும் ஜம்மியத்துல்
உலமா தலைமை அலுவலகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சம்மாந்துறை அல்மர்ஜான் மகளிர்
வித்தியாலயத்தில் அமைச்சர் ஏற்பாடு செய்த
நோன்பு துறக்கும் வைபவம்



அல்மர்ஜான் மகளிர் வித்தியாலய நுழைவாயில்



மத்திய முகாம் பௌத்த விகாரைக்கு வாகனம்
வழங்கிய போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சம்மாந்துறை வைத்தியசாலையில் சிறுவர் விடுதி



புளக் 'ஜே' பிரிவில் தாய்சேய் சுகதார நல நிலையமும், வாசிக சாலையும் (கிழக்கு உட்கட்ட அபிவிருத்தி அமைச்சின் நிதி)



அமைச்சரின் முயற்சியால் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீட்டுத்திட்டம்



அமைச்சரின் முயற்சியால் இடம்பெறும் தப்லீக்குல் இஸ்லாம் மாணவர் விடுதி நிர்மாணப்பனி



அமைச்சரின் முயற்சியால் இடம்பெறும் மஸ்ஜிதுல் உம்மா நுழைவாயில் பணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமைச்சரின் நிதி ஒதுக்கீட்டில் சம்மாந்துறை அல் அமீர் வித்தியாலயத்தின் புதிய கட்டிடம்



அமைச்சரின் நிதி ஒதுக்கீட்டில் தாறுஸ்ஸலாம் வித்தியாலத்தின் மூன்று மாடிக்கட்டிடமும் விஞ்ஞான ஆய்வு கூடமும்



அமைச்சரின் நிதி ஒதுக்கீட்டில் அல் அர்ஸத் வித்தியாலய மாடிக்கட்டிடம்



மஹாப்பொள நிதியத்தின் மூலம் தாறுஸ்ஸலாம் வித்தியாலயத்திள் ஆராதணைக் கட்டிடம்





அமைச்சரின் நிதி ஒதுக்கீட்டில் அல் அஸ்கர் வித்தியாலயம், செந்நெல் சாஹிரா வித்தியாலய கட்டிடங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலும் ஆன்மீகமும் கலந்த சம்மாந்துறை பெருவிழா

-அல்ஹாஜ் மௌலவி
எம்.ஐ. அச்சி முஹம்மட் B.A.

கடந்த 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சம்மாந்துறை வரலாறு காணாத நாளாகும். சம்மாந்துறை வரலாற்றில் பல பதிவுகளை ஏற்படுத்தியிருக்கின்றது. சரித்திரப் புகழ்வாய்ந்த தலைவர் அஷ்ர.்.ப் இந்த மண்ணிலே தான் பிறந்தார். அது ஒரு வரலாறு. அந்த வரலாற்றுக்குப் பின்னர் சம்மாந்துறையில் தலையெடுக்கும் இளைய தலைமகன் அன்வர் இஸ்மாயில் பெரும் சாதனைகளை நிகழ்த்தி வருகின்றார். கடந்த ஐக்கிய தேசியக் கட்சி காலத்தில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து அவர் நிகழ்த்திய சாதனைகளை விட மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சிக் காலத்தில் பிரதியமைச்சராக இருந்து அவர் படைக்கும் சாதனைகள் வரலாற்றில் அவருக்குத் தகுந்த பதிவுகளை ஏற்படுத்துவது கவனிக்கத்தக்கது.

கடந்த வெள்ளியன்று காலை சம்மாந்துறையின் முக வெற்றிலையான நெல்லுப்பிடிச் சந்தி விழாக்கோலம் பூண்டது. வெள்ளி பொதுவாக முஸ்லிம்களின் பெருநாள்தானே. அந்தப் பெருநாள் இரட்டிப்பாகியது. அன்று சம்மாந்துறையின் தலைமகன் அன்வர் இஸ்மாயிலுக்கு 37 ஆவது பிறந்த நாளாகும்.

அன்று காலை 8.00 மணியளவில் நமது மூத்த உலமாக்களான காத்தான்குடியைச் சேர்ந்த பெரியார் ஷைகுல் பலாஹ் மௌலானா மௌலவி அப்துல்லாஹ் ஹஸரத்தும், இலங்கை முஸ்லிம்கள் அனைவருக்கும் அல்குர்ஆனை ஓதும் அடிப்படை நூலாக்கிப் புகழ்பெற்ற மௌலவி ஷைகுல் தக்ரீஸ் ஓ. எம். பாஸி ஆலிம், சம்மாந்துறை ஜம்இய்யத்துல் உலமாக சபையின் ஆயுட் காலத் தலைவர் எம்.ஏ.எம். அலியாரும், சம்மாந்துறையின் உலமாக்களின் இதயமான தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரிக்கு வருகை தந்தனர். இந்த மூத்த உலமாக்கள் அனைவரையும் கல்லூரியின் அதிபர் எம்.பி. அலியார் ஹஸரத் வரவேற்று தனது காரியாலயத்திற்கு அழைத்துச் சென்று அனைவரையும் உபசரித்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை 9.45 மணியளவில் அன்றைய நிகழ்வுகளின் முதற் கட்டம் ஆரம்பமானது. முதல் நிகழ்வாக சூறா யாசீன் ஓதி தமாம் செய்யப்பட்டது. தொடர்ந்து நலவை நாடித் தொழும் தொழுகையான 'ஸலாதுல் இஸ்திகாறா' இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து நவீன இஸ்லாமிய கட்டிடத் தலைகளுடன் கூடிய நுழைவாயில் ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் அமைச்சர், பிரதியமைச்சர், கண்ணியத்துக்குரிய உலமாப் பெருந்தகைகளினாலும் நடப்பட்டது. அடுத்த நிகழ்வாக நெல்லுப்பிடி ஆற்றுப்படுக்கையின் ஓரத்தே அல்லை வயலின் காற்று மேல் எழும்பி வருகின்ற அந்நெல்லுப்பிடிச் சந்தியில் பொழுது போக்கும் இடம் ஒன்றுக்கான வேலைத் திட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன் பின்னர் சம்மாந்துறை ஜம்இய்யத்துல் உலமாவிற்கான நிரந்தரமான செயலகத்திற்கான அடிக்கல் நடப்பட்டது. அதனைத் தொடர்ந்து இச் செயலகத்திற்கான நினைவுக் கல்லை பிரதி அமைச்சர் அன்வர் இஸ்மாயில் சபையோரின் தக்பீர் முழக்கத்துடன் திரை நீக்கம் செய்து வைத்தார். இத்துடன் நிகழ்வின் முதற் கட்டம் நிறைவு பெற்றது.

இரண்டாம் கட்டமாக உலமாக்களதும் அமைச்சர்களதும் உரை இடம்பெற்றது. வான்மறை வசனங்களை காரி அலி அக்பர் அவர்கள் ஓதி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார். அடுத்து சம்மாந்துறை ஜம்இய்யத்துல் உலமா சபையின் செயலாளரும், அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா சபையின் செயலாளருமான அல்ஹாஜ் மௌலவி எம்.ஐ. ஹஜ்ஜி முஹம்மது (பீ.ஏ) அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து ஜம்இய்யத்துல் உலமா சபையின் ஆயுட்காலத் தலைவர் அல்ஹாஜ் மௌலவி எம்.ஏ. அலியார் தனது தலைமையுரையின் போது "சம்மாந்துறை ஜம்இய்யத்துல் உலமா 1957 இல் அப்போதிருந்த என் போன்ற ஐந்து உலமாக்களால் ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் இதற்கான நிலம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக அப்போதிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் எல்லோரையும் அணுகிப் பார்த்தோம். எனினும் எங்களது முயற்சி நிறைவேறவில்லை. ஆனால் இன்று எங்களது அன்புக்குரிய பிரதி அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் நிரந்தரமான நிலத்தைப் பெற்றுத் தந்ததோடு மாத்திரமல்லாமல் நவீன வசதிகளுடன் கூடிய 03 கோடி ரூபா செலவில் ஒரு கட்டிடடத்தைப் பெற்றுத் தந்துள்ளார் என்றார்.

அடுத்து ஷைகுல் தத்ரீஸ் ஓ. எம். பாஸி ஆலிமின் உரை இடம் பெற்றது. அவர் தமதுரையின் போது "சம்மாந்துறையின் இவ்விடம் ஆதம் நபி அவர்கள் காலத்திலிருந்து வெறும் கட்டாந்தரையாகவே இருந்தது. இந்நிலம் எவரது கண்ணுக்கும் படவில்லை. பல எம்.பி. க்களும் அமைச்சர்களும் தலைவர்களும் வந்து சென்றிருக்கின்றார்கள். ஆனால் இன்று இவ்விடத்தை சம்மாந்துறையின் வாரிசுகளான உலமாக்களின் செயலகமாக்கி சம்மாந்துறைக்கே அருள் பரப்பும் நிலையமாக இளம் வயதிலேயே திறமையுடன் தைரியத்துடன் வென்று தந்த எங்கள் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயிலை வாயாரப் புகழ்ந்து பாராட்டி அவருக்காக நானும் பிரார்த்திக்கின்றேன் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அரபுக் கல்லூரியின் அதிபர் 'ஷைகுல் பலாஹ் அல்ஹாஜ் மௌலவி எம்.ஏ. அப்துல்லாஹ் தனதுரையின் போது "யார் தரிசாகக் கிடந்த வெறும் நிலத்தை உயிர்ப்பித்து மனிதர்களுக்குப் பயனுள்ளதாக அமைத்துக் கொடுக்கின்றாரோ அவர் அதன் மூலம் நன்மைகளைப் பெற்றுக் கொள்வார்" என்ற நபிமொழியை மேற்கோள்காட்டி பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயிலின் சேவையையும் அமைச்சர் அதாவுல்லாஹ் அவர்களின் சேவையையும் பாராட்டி அவர்களுக்காகவும் முஸ்லிம் உம்மாவின் சுபிட்சத்திற்காகவும் பிரார்த்தனை புரிந்தார். அப்பெரியாரின் உணர்வுபூர்வமான பிரார்த்தனையில் அனைவரும் கண்ணீர் ததும்ப ஆமீன் கூறினர்.

சம்மாந்துறையில் உயர் சபையாகக் கணிக்கப்படும் மஜ்லிஸ் அஷ்ஷூறாவின் அமீர் 'ஷைகுல் தப்லீஹ்' அல்ஹாஜ் மௌலவி எம்.பி. அலியார் ஹஸரத் உரையாற்றினார். வெள்ளிக்கிழமை முஸ்லிம்களின் பெருநாள் என்பதை ஞாபகப்படுத்தி அவ்வானதொரு நாளில் இவ்வாறான நல்ல காரியங்கள் சதகதுல் ஜாரியாக்களான நிரந்தர நன்மை பயக்கும் செயல்களை மேற்கொள்கின்ற பிரதி அமைச்சர் அன்வர் இஸ்மாயிலைப் பாராட்டினார். மனிதர்களின் ஆத்மீக நோய்களுக்கு மருந்து கொடுக்கின்ற, தீனை முழு உலகத்திற்கும் எடுத்துச் செல்கின்ற ஒரு 'செயலகமாகவும்' இது அமைய வேண்டும் எனவும் பிரார்த்தித்தார்.

அடுத்த நிகழ்வாக அமைச்சர் அதாவுல்லாஹ்வினால் ஜம்இய்யத்துல் உலமா செயலாளர் மௌலவி எம்.ஐ. ஹஜ்ஜி முஹம்மது அவர்களுக்கு 1.34 மில்லியன் ரூபாவுக்கான காசோலை வழங்கப்பட்டது. இது ஜம்இய்யத்துல் உலமா செயலகத்திற்கான பணிகளை ஆரம்பிக்கும் முதற்கட்ட காசோலையாகும்.

அதனைத் தொடர்ந்து சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபைத் தலைவரும் அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சபையின் தலைவருமான அல்ஹாஜ் மௌலவி ஏ.ஸி.ஏ.எம். புஹாரியின் உரை இடம்பெற்றது. அவர் தனது உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார். இவ்வூரில் 38 பள்ளிவாசல்கள் உள்ளன. அவற்றில் 04 பள்ளிவாசல்கள் பிரதான வீதியில் அமைந்துள்ளன. அவற்றிற்கான பிரதான நுழைவாயில்களை அமைத்துத்தர உறுதிபூண்டுள்ள் எமது பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயிலுக்கு நன்றியையும் பாராட்டையும் ஊரின் சார்பாக தெரிவித்துக் கொள்வதாகக் குறிப்பிட்டார். மேலும் 37 வருடகால நீண்ட வரலாற்றைக் கொண்ட சம்மாந்துறை ஜம்இய்யத்துல் உலமா கடந்த 35 வருடங்களாக ஒரு காணித்துண்டைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சித்த போதும் கடந்த 2001 டிசம்பர் மாதம் முதல் முறையாக பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட எமது மண்ணின் மைந்தன் சட்டத்தரணி அன்வர் இஸ்மாயில் உலமாக்கள் கேட்காமலேயே அவராக உலமாக்களை அழைத்து தான் ஒரு நிலத்துண்டைத் தருவதாக வாக்களித்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் கடந்த 02 வருடங்களாக அந்த நிலத்தைப் பெற்று அதற்கான எல்லையை நிர்ணயிக்கின்ற பணியைக் கூட உலமா சபையினர் மேற்கொள்ளவில்லை. எனினும் 2004 ஏப்ரலில் மீண்டும் பாராளுமன்றத்திற்குச் சென்று பிரதியமைச்சராகியவுடன் தனது முதற் பணியாக உலமாக்களைக் கௌரவிக்க வேண்டும்.

'அதாவுல்லாஹ்' என்றால் அல்லாஹ்வின் கொடை. அவர் தற்போது கிழக்கு முஸ்லிம்களுக்குக் கிடைத்திருக்கின்ற ஒரு பொக்கிஷமாகும். அவர் தனது பெயருக்கேற்றாற்போல் கொடைகளைக் கிழக்கின் பல்வேறு பகுதிகளுக்கும் வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றார். 'அன்வர்' என்றால் மிகவும் பிரகாசமிக்கவர். எங்கள் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் இன்று எமது ஊரில் மாத்திரமல்ல, எமது பிரதேசத்தின் அனைத்து ஊர் மக்களாலும் அனைத்துத் தரப்பினாலும் பேசப்படக் கூடிய ஒருவர். அவர் மென்மேலும் பிரகாசித்து புஹாரி மௌலவி அவர்கள் தனது உரையை நிறைவு செய்தார்.

அடுத்து சம்மாந்துறை தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரி மாணவர்களால் ஒரு இனிமையான கஸீதா பாடப்பட்டது. நபி (ஸல்) அவர்கள் மக்காவில் இருந்து மதீனாவுக்குச் சென்றபோது மதீனாவாசிகள் அவரையும் மக்கா முஸ்லிம்களையும் வரவேற்றுப் பாடிய பாடலை அடியாகக் கொண்டு அமைச்சர்களையும் அதிதிகளையும் வரவேற்ற இந்த கஸீதா அமைந்திருந்தது.

சம்மாந்துறையின் சரித்திர நாயகன் இத்தனை நிகழ்வுகளுக்கும் முன்னோடியாக இருந்து உழைத்த சம்மாந்துறையின் சமகால தலைமகன் கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் உரையாற்றினார். அல்லாஹ்வைப் புகழ்ந்து கண்மணி நாயகத்தின் மீது ஸலவாத் சொல்லி மாபெரும் தலைவர் அஷ்ஷஹீத் எம்.எச்.எம். அஷ்ர∴பை தனக்குள் உள்வாங்கியவராக உரையை ஆரம்பித்தார்.

தன்னுடைய அரசியல் வாழ்வில் இன்று மனநிறைவடைகின்ற ஒரு நாளாகும். எனது சமூகத்தின் உயர்தரத்தில் உள்ளவர்களுக்கு என்னுடைய கடமையைச் செய்த மனநிறைவு எனக்கு ஏற்படுகின்றது. நானாகவே முயன்று காடாகவும் குப்பை மேடாகவும் இருந்த இந்த நிலத்தினை கண்ணியத்திற்குரிய உலமாக்கள் செயல்படுகின்ற இடமாக மாற்றியமைக்கின்றேன். சம்மாந்துறையின் முகப்பழகினை 03 பக்கமும் நிறைந்த நுழைவாயில்கள் ஊடாக அழகுபடுத்த முயன்றிருக்கின்றேன். நமது மக்கள் கடற்கரைக் காற்றினைச் சுவாசிக்க வழியில்லாது நோய் நிரம்பிய வாழ்க்கையை அனுபவிக்கக் கூடாதென்பதற்காக இந்தப் பிரதேசத்தை அல்லைக் காற்றுப்பட அழகுபடுத்தி பொழுதுபோக்கிடமாக மாற்றுவதற்கான திட்டங்களையும் நான் இன்று ஆரம்பித்திருக்கின்றேன். இவற்றையெல்லாம் நான் செய்வதென்பது நீங்கள் தந்த உற்சாகமும் வெற்றியும் மூலமாகும்.

முஸ்லிம் காங்கிரஸ் உலமாக்களை அரசியலில் முதன்மைப்படுத்த முயன்றது. ஆனால் ரவூப் ஹக்கீமின் முஸ்லிம் காங்கிரஸில் உலமாக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடைகளில் அசிங்கமான முறையில் பயன்படுத்தப்பட்டு அவர்கள் அரசியலில் ஈடுபடுவதன் மூலம் தமது அந்தஸ்தினை இழப்பதை நான் உணர்ந்தேன். எனவேதான் உலமாக்களைப் பயன்படுத்தி அரசியல் வியாபாரம் செய்வதற்கு நான் தயாரில்லை. கடந்த தேர்தலில் உலமாக்கள் என்னுடைய பக்கமா அவர்களுடைய பக்கமா என்று கூட கேவலமான அரசியல் போட்டியை ஆரம்பித்தார்கள்.

ஆனால் அல்லாஹ்வுடைய அருளும் ஆசிர்வாதமும் எங்கிருக்கின்றது என்பதை அவர்கள் புரிந்திருப்பார்கள். பதவிகளைத் தருவதும் பதவிகளை எடுப்பதும் அரசருக்கரசரான அல்லாஹ்வின் பணி என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள்.

நாங்கள் உலமாக்களைக் கண்ணியப்படுத்துவதன் மூலம் அவர்களுடைய ஆசிர்வாதங்களைப் பெற விரும்புகின்றோம். அவர்களை உயர்ந்த இடத்தில் வைக்க நான் விரும்புகின்றேன். இனப்பிரச்சினைத் தீர்விலே ஹக்கீமின் அரசியலை நாங்கள் நடத்த விரும்பவில்லை. எங்களுடைய அரசியல் வேறானது என்பதை நீங்கள் பொறுத்திருந்து பாருங்கள். எங்களுடைய அரசியலின் இன்னுமொரு பக்கம் ஏன் வாழ்வின் இன்னுமொரு பக்கம் கூட ஆன்மீகம்தான் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது என்று குறைந்த நேரத்தில் கனமான உரையை ஆற்றி பிரதியமைச்சர் விடைபெற்றார்.

இறுதியாகப் பிரதியமைச்சரின் அழைப்பின் பேரில் வருகை தந்த கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரும் தேசிய முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவருமான கேளரவ ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் தனதுரையில், தேசிய முஸ்லிம் காங்கிரஸ் உலமாக்களைக் கண்ணியப்படுத துவதைத் தன்னுடைய உரையிலே அவர் விரிவாகக் குறிப்பிட்டார்.

குறிப்பாக அவர் நாம் பிரதேசங்களைக் கடந்து சேவையாற்றுவதையும் நமக்கு அக்கரைப்பற்றும் கல்முனையும் சம்மாந்துறையும் ஒன்றுதான் என அவர் குறிப்பிட்டார்.

மறைந்த தலைவர் அஷ்ர∴ப் அவர்கள் எந்த விடயத்திலும் அழகுணர்ச்சி உள்ளவர்களாக இருந்தார்கள். அந்த அழகுணர்ச்சி அன்வர் இஸ்மாயில் அவர்களிடமும் இருக்கிறது. இந்தக் கூட்டத்தை ஒழுங்குபடுத்துவதிலே உலமாக்களுக்கான இந்தக் கட்டிடம் ஊரின் முகப்பிலே இந்த இடத்திலே அமைய வேண்டும் என்பதிலே அன்வர் இஸ்மாயில் தனது அழகுணர்ச்சியை வெளிப்படுத்தி இருக்கின்றார்.

சம்மாந்துறையில் எங்களுடைய அமைச்சின் மூலம் 100 வீடுகளைக் கட்டுவதற்கும் நாங்கள் ஒழுங்கு செய்திருக்கின்றோம். எனவேதான் எந்த விடயத்திலும் நாங்கள் எல்லா வேறுபாடுகளையும் கடந்து ஒற்றுமைப்படு கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களுடைய இனப்பிரச்சினைத் தீர்விலே நாங்கள் மிகக் கவனமாகவும் தெளிவாகவும் இருக்கின்றோம் என்பதையும் அமைச்சர் தனதுரையில் வெளிப்படுத்தினார்.

அன்றைய குத்பா பிரசங்கத்தை நிகழ்த்திய அல்ஹாஜ் மௌலவி அஹ்மத் ஜலீல் (ஹாமி) அவர்கள், ஊரில் இதுவரை நடைபெற்ற 'சதகதுல் ஜாரியா' நிகழ்வுகளை ஞாபகப்படுத்தி இன்று சம்மாந்துறையில் நடைபெற்ற பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயிலின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிரந்தர தர்மத்திற்குரிய நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டினார். ஜும்ஆவின் பின்பு பள்ளிவாசலில் பெருந்திரளான மக்களுக்கு முன் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயிலின் அழைப்பை ஏற்று வருகை தந்த அமைச்சர் அதாவுல்லாஹ் அவர்கள் உரையாற்றினார். பின்னர் ஹிஜ்ரா பள்ளிவாசல் வாயிலுக்கான அடிக்கல்லும் நடப்பட்டது.

சம்மாந்துறையிலே இன்று நடைபெற்ற இந்த வைபவம் வித்தியாசமான தாகும். முழுக்க முழுக்க மக்களின் கலாசாரத் தேவைகளையும் நிறைவேற்றுகின்ற வைபவமாகவே அமைந்தது. அரசியலை விட ஆன்மீக உரைகள் இவ்வைபவத்தில் முதன்மை பெற்றது.

இப்படியே நமது அரசியல் வரலாறும் நமது தலைவர்களும் சிறப்புப் பெற வேண்டும். அல்லை வெளியின் பச்சை வயல்வெளிகளுக்கு அருகில் பசுமையான காற்றை அனுபவித்துக்கொண்டு அமைச்சர்களும் உயர் அதிகாரிகளும் பகல் உணவை நிறைவு செய்ததோடு அன்றைய வைபவம் நிறைவு பெற்றது.

( நன்றி: தினகரன் : 01-08-2004 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவர் வாழ்த்தினாலும் வாய்முத்து உதிராது.

மண்ணின் மைந்தனுக்கு மங்களத் திருநாள்,
மக்கள் கூடிப் போற்றுகின்ற ஒருநாள்,
எண்ணம் சிறந்தோர் ஏடெழுதிப் புகழோம்ப,
எடுத்த முடிவேதான் சிறந்த நினைவாகும்,
மண்சேர்த்த பாவாக அன்வர் இஸ்மாயில்,
போற்றப் படுகின்ற இந்நாளே நன்னாள்.

மரபுக் கூட்டை மண்மகனார் உடைத்து,
மலர்ந்த அரசியலில் அழுந்தத் தடம்பதித்து,
தரவில் கதிக்கும் தக்க பணிகளினை,
தானாய் சிந்தித்து, ஆறாய்ப் பெருக்கெடுத்து,
வரவாய் எமக்கெல்லாம் வாழ்வியலில் வந்துதித்து,
வாழ்கின்ற மண்மகனை வாழ்த்திடவே வாழ்கிறோம்.

சம்மாந் துறையின் சந்து பொந்துகளை,
சும்மா இருக்காமல் செப்பனிட்டு முடையகற்றி,
இம்மண் பெயர்வீச குன்றெனெ நிமிர்ந்து,
இத்தரையி லெங்கும் குடிநீர் பெருக்கெடுக்க,
எம்மாத்திரம் வேலை செய்த அமைச்சரை,
எவர் வாழ்த்தினாலும் வாய்முத்து உதிராது.

வெடித்த நிலத்தில் விளைய முடியாது,
வாய்த்த வயற்பூமி செழித்துப் பசுமைபெற,
மடித்த கையோடு களமிறங்கும் உழவனென,
மண்ணில் நீர்பாய வழிகள் சமைத்து,
தடித்த வரும்படியை உழவர்க்குத் தந்த,
தக்க பணியதனை வாழ்த்துதற்கு மறுப்புண்டோ?

சம்மாந்தறைத் தாயின் சோர்ந்த முகத்துற்கு,
சோதிதரஎண்ணி பேஷியல் செய்து,
நிம்மதி அழகுபெற நெல்லுப்புடிச் சந்தியில்,
நிலவு முகமாக மாற்றி யமைத்துவிட,
நம்மாள் நினைத்தார்! சந்திக்குப் போனால்,
நாம் அங்கு பார்த்திடலாம்!

யாரிந்த அன்வர்? எவர் பெற்ற பிள்ளை?
யார் செய்த புண்ணியமோ? இஸ்மாயில் சுபைதாவின் -
வேர்விட்ட சிறுசெடியே விருட்சமெனப் பரந்து,
வாய்விட்டுச் சிரிக்கின்றது! கைதட்டி மகிழ்ந்திடவே,
ஆர்வரினும் தப்பில்லை! வாழ்த்துதற்கு இடமுண்டு!
அங்காந்து பார்க்கின்ற குதுப்மினார் கோபுரமாய்,
ஓர் உருவம் தெரிகிறது உள்ளக் கண்ணாடியிலே,
ஓதும் என்றால் அவர் பெயரை அன்வர் இஸ்மாயில்

**சம்மாந்துறை மஷூறா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்மாந்துறையின் விவசாய, நீர்ப்பாசனப் புரட்சி

அல்ஹாஜ் M.T.M. சஹீட் MS.C
பட்டம்பிட்டி நீர்வழங்கள் முகாமைத்துவ தலைவர்

கடந்த மூன்று ஆண்டுகளில் சம்மாந்துறையின் பல்வேறு விதமான அபிவிருத்தித் திட்டங்கள் தொடக்கி வைக்கப்பட்டுள்ளன. கல்வி, சுகாதாரம், பொதுவசதிகள், விளையாட்டு, விவசாயம், சலாச்சாரம், வியாபாரத்துறை இவ்வாறு பல்வேறு விதமான அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்த ப்பட்டு வருகின்றன. சம்மாந்துறை விவசாய நீர்ப்பாசன புனர்நிர்மாணப் பணிகளில் நீர்ப்பாசன அமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களின் காலம் பொற்காலமே என்று வியக்கத்தக்க அளவிலான அபிவிருத்திப் பணிகள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### மோறாவில் அணைக்கட்டு:

120 அடி நீளமான, 16 கதவுகளைக் கொண்ட மோறாவில் அணைக்கட்டு நீண்ட காலம் பராமரிக்கப்படாமலும், அபிவிருத்தி செய்யப்படா மலும், 1998 இல் உடைந்து போன இவ்வணைக்கட்டினை அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் அயராத முயற்சியின் பயனாக 6.6 மில்லியன் ரூபா செலவில் ஒரு வருட காலத்திற்குள் புனர்நிர்மாணம் செய்ததன் மூலம் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்களுக்கு நீர் வழங்கக்கூடியதாகவுள்ளது. இப்புனர் நிர்மாணப்பணி அன்வர் இஸ்மாயில் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் தொடக்கி வைக்கப்பட்டு அவர் பிரதியமை ச்சராக இருக்கும் காலத்தில் அப்போதிருந்த விவசாய கால்நடைகள் நீர்ப்பாசன மற்றும் காணி அமைச்சர் கௌரவ அனுர குமார திசாநாயக்க அவர்களினால் திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### வீரையடி அணைக்கட்டு:

கிழக்கு வாழ் மக்களின் வாழ்க்கை புனர்நிர்மாணத்தில் கல்லோயாத் திட்டம் பெரும் பங்கு வகிக்கின்றது. அதுபோன்று இப்பிராந்திய மக்களின் ஜீவநாடியாக அமைந்த விவசாயத்துறையின் புனர்நிர்மாணத்துக்காக வீரையடி அணைக்கட்டு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இவ்வணைக்கட்டு பட்டியடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்பிட்டியின் சுமார் 10 ஆயிரம் ஏக்கர்களும், நிந்தவூர்ப் பிரதேச விவசாயிகளின் 6 ஆயிரம் ஏக்கர்களும் உள்ளடங்கிய நெற்செய்கை காணிகளை வாழவைக்கும் அணைக்கட்டாகும். இவ்வணைக்கட்டு கல்லோயா கங்கைக்கு குறுக்காகவே அமைந்துள்ளது. இவ்வணைக்கட்டு தொடர்பாக பல்வேறு பாராளுமன்ற உறுப்பினர்கள் காலத்திலும் இப்பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுத்தும் திருத்தப்படாது இருந்தமை அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களினால் கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளது.

**வீரையடி அணைக்கட்டின்**
**புனர்நிர்மாணப் பணிகள்:**

கடந்த இரண்டு வருடங்களில் ஏற்பட்ட வெள்ளங்களினால் மிகமோசமாக பாதிக்கப்பட்ட இவ்வணைக்கட்டினை உடனடியாக திருத்த வேண்டி ஏற்பட்டது. இதனால் சுமார் 20 ஆயிரம் குடும்ப விவசாயிகள் பயிர் செய்ய முடியாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டனர். இதனை உணர்ந்த அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் தற்காலிகமாவது இவ்வணைக்கட்டினை திருத்த முயற்சித்தார். அபிவிருத்திக்குப் பணம் பெறமுடியாத ஐக்கிய தேசிய முன்னணி அரசிலேயே மிகவும் கஷ்டப்பட்டு 2 மில்லியன் ரூபாக்களைப் பெற்று தற்காலிகமாவது வீரையடி அணைக்கட்டை புனர்நிர்மாணம் செய்தார்.

**வீரையடி அணைக்கட்டு**
**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியில் நிரந்தர கட்டுமானம்.**

2004ம் ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்க அவர்களின் கிராமியப் பொருளாதார மேம்பாட்டுத்திட்ட அடிப்படையில் வீரையடி அணைக்கட்டை புனர்நிர்மாணம் செய்யும் பணியை அப்போதைய பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் பிரேரித்தார். இது தொடர்பாக விவசாய, கால்நடைகள், நீர்ப்பாசன மற்றும் காணி முன்னாள் அமைச்சர் கௌரவ அநுர குமார திஸாநாயக்க அவர்களை அழைத்து மோறாவில் அணைக்கட்டு திறக்கப்பட்ட அதேநேரம் பழுதடைந்து போன வீரையடி அணைக்கட்டை நேரடியாக அமைச்சருக்கு காண்பிக்கப்பட்டது. மேலும் சம்மாந்துறை விவசாயிகளின் பிரச்சினை கொழும்பில் விவசாய, கால்நடைகள், நீர்ப்பாசன மற்றும் காணி அமைச்சில் உரையாடப்பட்டது. இதன் அடிப்படையில் 80 அடி நீளமாக இருந்த வீரையடி அணைக்கட்டு எதிர்கால நலன்கருதி 150 அடி நீளமாக 8 கோடி ரூபா செலவில் நிர்மாணப்பணி அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களினால் தொடக்கி வைக்கப்பட்டது. 2007 யில் இவ்வணைக்கட்டு கட்டுமாணப்பணிகள் முழுமையாக பூர்த்திசெய்யப்பட்டு திறந்துவைக்கப்படவுள்ளது. சம்மாந்துறை, நிந்தவூர் பிரதேச விவசாயிகளின் வாழ்வில் புதிய திருப்பத்தைக் கொண்டு வரும் இவ்வீரையடி அணைக்கட்டின் புனர்நிர்மாணப்பணியை இப்பிரதேச வாழ் மக்கள் என்றும் நினைவு கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தன்வெளி அணைக்கட்டு:

இதேநேரம் சேதமடைந்திருக்கும் கந்தன்வெளி அணைக்கட்டினை மீளகட்டி எழுப்பவேண்டிய பணியும் இப்பிரதேச விவசாயிகளினால் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் தலையில் சுமத்தப்பட்டது. இந்தப் பிரச்சினையும் விவசாய, கால்நடைகள், நீர்ப்பாசன மற்றும் காணி அமைச்சர் கௌரவ அநுரகுமார திஸாநாயக்க அவர்களுக்கு கௌரவ பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களினால் முன்வைக்கப்பட்டு அவ்வமைச்சின் 2006 ஆண்டின் வேலைத்திட்டத்தின் இவ்வணைக்கட்டு மீளக்கட்டி எழுப்பும் வாக்குறுதி அளிக்கப்பட்டு உடனடியாக நிரந்தர அணைக்கட்டின் வேலைகள் நிறைவுபெற்றுள்ளது. இதனால் சம்மாந்துறையின் விவசாய நிர்ப்பாசனப் பிரச்சினை பெருமளவு தீர்ந்துள்ளது.

**மேலும் உள்ளாறு (4.31 மில்லியன்) களியோடை (4 மில்லியன்) கறங்கா (1.50 மில்லியன்) மளவாய் (4.32 மில்லியன்) கிழல் பட்டம்பிட்டி (4.40 மில்லியன்) ஆலையடி ஓடை (5.20 மில்லியன்) உடங்காவெளி (9.60 மில்லியன்) உடயான்கட்டு (2.95 மில்லியன்) வெட்டுக்காடு (2 மில்லியன்) கேசவன்வெளி (4.98 மில்லியன்) முதலான அணைக்கட்டுக்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதால் சுமார் முப்பதினாயிரம் ஏக்கர் வயல்வெளிக்கு சீரான நீர்ப்பாசனம் கிடைக்கவுள்ளது. இவை அனைத்தும் அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் நீர்ப்பாசன அமைச்சரானதன் மூலம் சாத்தியமாயுள்ளது.**

**மேலும் குளவிக்கூடு, ஆலையடிஓடை, போட்டா வளவு முதலானவற்றுக்கான மதகுகளும் 3 மில்லியன் ரூபா செலவில் 1500 ஏக்கர் நிலம் பயன்படுத்தப்படும் அளவுக்கு பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.**

## புளக் ஜே பிரிவு வாய்க்கால்:

இப்பிரிவுக்குரிய C வாய்க்கால் கடந்த 21 வருடங்களாக விவசாயிகள் கோரிக்கை விடுத்தும் புனர்நிர்மாணம் செய்யப்படாமல் இருந்தது. இதனால் சுமார் எண்ணாயிரம் ஏக்கர் வயற்காணிகள் போதியளவான நீர்ப்பாசன வசதிகளைப் பெறமுடியாதிருந்தது. இப்பிரச்சினை அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களிடம் எத்திவைக்கப்பட்ட போது சுமார் 1.7 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சடயன்தலாவ, சாளம்பக்கேணி, சம்புமடு முதலான 6 பிரதேச வயல்வெளிகள் உரிய நேரத்திற்கு போதியளவான நீர்ப்பாசன வசதிகளைப் பெற்று பயன் பெறக்கூடியதாக உள்ளது.

## நெயினாகாட்டுப் பாம் வீதி:

நெயினாகாட்டுக் கிராமம் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து இப்பாம் வீதி திருத்தப்படாமலேயே இருந்து வருகிறது. ஆனால் இப்பாதையின் ஊடாக நூற்றுக்கணக்கான விவசாயிகளும் மல்வத்தைக் கிராமத்திற்கு செல்கின்றோரும் செங்கல் உற்பத்தியாளர்களும் பயணம் செய்வது குறிப்பிடத்தக்கது. இவ்வீதியின் முக்குயத்துவத்தை உணர்ந்த அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் இரண்டு மில்லியன் ரூபா செலவில் திருத்தியமைத்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேலும் வட்டவாய்க்கால், காத்தான்ட வட்டை வாய்க்கால, நெடியாண்ட கண்டம் வாய்க்கால், எஸ் 24 வாய்க்கால் முதலானவை சுமார் 25 மில்லியன் செலவில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.**

## சம்மாந்துறையில் புதிய நீர்ப்பாசன அலுவலகம்

சம்மாந்தறைப் பிரதேசம் முழுமையாக நெற் பயிர்ச்செய்கை செய்யும் பிரதேசமாக அமைந்தும் கூட நீர்ப்பாசன அலுவலகம் ஒன்று இல்லாமை பெரும் குறைபாடாகும். இதனை உணர்ந்த அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் தனது நீர்ப்பாசன வேலைகள் அனைத்திற்கும் முத்தாய்ப்பு வைப்பது போல் சம்மாந்துறையில் ஒரு நீர்ப்பாசன அலுவலகத்தை திறந்து வைத்தது போல் அதற்கான நிரந்தர கட்டுமாணப் பணிகளையும் ஆரம்பித்துள்ளார்.

இவ்வாறு என்றுமில்லாதவாறு சம்மாந்துறையின் விவசாய நீர்ப்பாசன வரலாற்றில் பல கோடி ரூபாய்க்கள் செலவிடப்பட்டு இப்பிரதேச மக்கள் விவசாயத்தில் தன்னிறைவு காணக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கைங்கரியத்தை மேற்கொண்ட அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களையும் அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களையும் மக்கள் என்றும் நினைவு கூர்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுப் புகழ்மிக்க சம்மாந்துறை - நெய்னாகாட்டுப் பாலம்

- எம்.சி. அன்சார் -

அம்பாறை மாவட்டம் தமிழ், முஸ்லிம், சிங்கள இனத்தைச் சேர்ந்த விவசாயிகள் செறிந்து வாழும் பிரதேசமாகும். இலங்கையின் மொத்த நெல் உற்பத்தியில் 23 சதவீதமான பங்கினை உற்பத்தி செய்யும் மாவட்டமாகும். அதிலும், பயங்கரவாத அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் இம்மாவட்டத்தில் கரையோரப்பிரதேசங்களில் வாழும் விவசாயிகள் இலங்கையின் நெல்உற்பத்திக்கு பெரும் பங்கினை வகிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, இறக்காமம், நெய்நாகாடு, தீகவாபி, குடிவில், கொண்டவட்டுவான் போன்ற கிராமங்கள் மிகவும் பழைமை வாய்ந்த பிரதேசங்களாகும். அதிலும் நீர்வளமும், நிலவளமும் கொண்ட செந்நெல் விளையும், வயல் நிலங்களை அமையப்பெற்ற இயற்கையின் கொடைவளம் பெற்றது சம்மாந்துறையாகும்.

கிழக்கு மாகாண வாழ் மக்களின் புனர்நிர்மாணத்தில் 1958ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கல்லோயாத்திட்டம் பெரும் பங்கை வகிக்கின்றது. இவ்வபிவிருத்தித் திட்டத்திற்குப் பின்னர் அரசியல் ரீதியான சந்தர்ப்பங்கள் இருந்தும் விவசாய, நீர்ப்பாசனத்துறையில் புரட்சிகரமான எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை.

2001ஆம் ஆண்டு சம்மாந்துறையின் அரசியல் தலைமைத்துவத்தை பொறுப்பெடுத்த நாளிலிருந்து அமைச்சர் அன்வர் இஸ்மாயில் இப்பிரதேச விவசாய, நீர்ப்பாசனத்துறைக்கு அயராது உழைத்து வருகின்றனர். இதற்குச்சான்றாக சம்மாந்தறைப் பிரதேசத்திலுள்ள உள்ளார்த்து அணைக்கட்டு, மோறாவில் அணைக்கட்டு கந்தன்வெளி அணைக்கட்டு, உடன்காவெளி அணைக்கட்டு, வீரையடி அணைக்கட்டு, வீரமுனையான் அணைக்கட்டு உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட வாய்க்கால்கள் புனர்நிர்மானம் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் ஆயிரத்திற்கு மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் நன்மை அடைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1958ஆம் ஆண்டு கல்லோயாத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்று அம்பாறை ஊடாக இறக்காமம், சம்மாந்துறை, தீகவாபி, குடிவில், கல்முனை ஆகிய நகரங்களுக்கு பாதையமைக்கப்பட்டு பாவனைக்கு வரும் வரைக்கும் பெருநில பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் தங்கள் பிரதேசங்களிலிருந்து நிலங்களையும், தொழிற்துறைகளையும் தேன் திரவியங்களையும் தேடி வெங்லேசி, கபினிகஹவெல, தொட்டம், மாந்தோட்டம், மடவலந்தை, பூலந்துவட்டை, பொத்தானாவெளி, கொண்டவட்டான், வரிப்பத்தான்சேனை, இறக்காமம் போன்ற பிரதேசங்களை நாடி வந்தனர்.

இதுமட்டுமன்றி இறக்காமம் பிரதேச மக்கள் தங்கள் பாரம்பரிய நிர்வாக வேலைகளைத்தேடி சம்மாந்துறையுடன் இணைந்திருந்தனர். இது அனைத்தும் நெய்னாகாடு பாதையூடாகவே நடைபெற்று வந்தது. இப்பாரம்பரிய முக்கியத்துவம் வாய்ந்த பாதை தீகவாபி, குடிவில் பாலங்களினூடாகவே நடைபெற்றும் கூட கல்லோயா ஆற்றின் சாவாற்றுக்கிளைக்கு கிளைக்கு குறுக்காக பாலம் ஒன்று இல்லாததால் இப்பகுதி மக்கள் விவசாயம் மேற்கொள்ளும் நெற்காணிகளான ஆஸ்பத்திரிச்சேனை, திராவோடை, கொச்சிகலாந்து, பெரியவாசாரை, ஆணைவிழுந்தான், சின்னவிசாரை, பொன்ன்வெளி, குடிவில், கரங்கா, ஒட்டுக்காடு, விக்கிளாமடு, நடுப்பிட்டி, மலவட்டை போன்ற வளமுள்ள நிலங்களும் அத்துடன் கூடிய மேட்டு நிலங்களுமான சுமார் 4500 ஏக்கர் காணிகளில் விவசாயம் செய்யும் ஏழை விவசாயிகள் தமது விளை பொருட்களை நகரங்களுக்கு கொண்டுவருவதில் பல சிரமங்களை எதிர்நோக்கினர்.

நமது பிரதேசம் வளமுள்ள நிலங்களைக் கொண்ட விவசாயப் பிரதேசமாக இருந்தபோலும் இவ்வளங்களின் ஊடாக உச்ச பயனை அடைய முடியாத தர்ப்பாக்கிய நிலையில் நமது மக்கள் கடந்த காலங்களில் இருந்து வந்துள்ளனர். இவ்வாறு அடிப்படை வசதிகளல்ல வானம் பார்த்த தரிசு நிலங்களாக காணப்படும். விவசாய நிலங்களை விளை நிலங்களாக மாற்றுவதோடு மட்டுமன்றி இவ்விசாய நிலங்களில் உச்ச பயனை ஏழை விவசாயிகள் அடைவதற்கான முறையான போக்குவரத்துப் பாதைகளையும் அமைக்க வேண்டும் என்ற எண்ணக்கரு அமைச்சர் அன்வர் இஸ்மாயிலுக்கு நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது.

கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கக் காலத்தில் 2002ஆம் ஆண்டில் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் வட கிழக்கில் புனரமைப்பு செய்யப்பட வேண்டிய பாலங்களின் வரிசையிலே சம்மாந்துறை நெய்னாகாடு, குடிவில் பாலங்கள் உட்பட அம்பாறை மாவட்டத்தில் அமையப்பெற வேண்டிய பாலங்கள் அப்போத பாராளுமன்ற உறுப்பினராகயிருந்த தற்போதைய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அன்வர் இஸ்மாயிலினால் சிபாரிசு செய்யப்பட்டு வழங்கப்பட்டும். கூட இறுதியில் அத்தனை பாலங்களும் வடக்கின் ஏ-9 வீதி புனரமைப்புக்கென வாரி வழங்கப்பட்டு இப்பால நிர்மாணப்புப் பணி குப்பைக்குள் போடப்பட்டதன் மூலம் இப்பகுதி மக்கள் பெரும் ஏமாற்றத்தை எதிர்கொண்டனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பால, பாதை நிர்மானம் ஒரு பிரதேச ஒரு இனத்திற்கு மாத்திர மல்லாததால் மூவினமக்களையும் இணைக்கின்ற பாலமாக அமைகின்றது. இறக்காமத்திலிருந்து 35 கிலோமீற்றர் தூரமுடைய கல்முனை நகரம் 22 கிலோமீற்றராக குறைவடைவதுடன், இவ்வளவு காலமும் ஆற்றின் மறுகரையிலுள்ள சுமார் 4500 ஏக்கர் விஸ்தீரணமுடைய விவசாயக் கண்டங்களான ஆணைவிழுந்தான், கொச்சிக்காலந்து, ஆஸ்பத்திரிச்சேனை, திராவோடை, பொன்னன்வெளி. குடிவில், விக்கிளாமடுக் கண்டங்களில் விவசாயம் செய்யும் விவசாயிகள் உழவு இயந்திரங்களையும், பசளை, கிருமிநாசினி போன்றவற்றையும் அறுவடை செய்யும் தொழிலாளர்கள், அறுவடை இயந்திரங்கள் மற்றும் அறுவடையின் பின்னர் நெல் போன்றவற்றை அம்பாறை, வரிப்பத்தாஞ்சேனை போன்ற தூர இடங்களுக்குச் சென்று போக்குவரத்தினை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அது இவ் நெய்னாகாட்டுப் பாலத்தின் ஊடாக மிகக் குறுகிய நேரத்திற்குள் போக்குவரத்தினை மேற்கொள்ளலாம்.

இப்பாலங்களின் விளைவாக ஆற்றுக்கு அப்பால் வாழுகின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை சம்மாந்துறையுடன் இணைக்கின்ற ஓர் இணைப்புப் பாலமாகவும் மக்கள் மத்தியில் பரஸ்பரம், நல்லிணக்கம், புரிந்துணர்வு, எதிர்கால நம்பிக்கை என்பவற்றினை கட்டி எழுப்பவும் ஒரு மைற்கல்லாகவும் இப்பாலங்கள் திகழும் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை.

அமைச்சர் அன்வர் இஸ்மாயிலின் தூரநோக்குடைய அபிவிருத்தி நடவடிக்கைகளில் விவசாய, நீர்ப்பாசன துறைகள் வேகமாக அபிவிருத்தி அடைவதுடன் பாரம்பரிய பூர்வீக பிரதேசங்களும் நன்மையடைவது அவரின் திறமைக்கு சான்றாகும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

**மேலும் மையவாடி, உடங்கா, கறங்கா, வளத்தாப்பிட்டி வட கண்டம், திம்பிலியாறு முதலானவற்றிற்கான பாலங்களும் சுமார் 5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்மாந்துறை ஹிஜ்றா நவீன பொதுச் சந்தை வரலாறும் வளர்ச்சியும்

அல்ஹாஜ் எஸ்.எல். அப்துல் சலாம்
முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்

'கிழக்கின் தானியக் களஞ்சியம்' எனப் பலராலும் போற்றிப் புகழப்படும் சம்மாந்துறைத் தாயகம் ஹிஜ்றாச் சந்தை கட்டடம் மேலும் அழகு பெறுகிறது. இவ்வழகுக்கு காரணம் சம்மாந்துறை மண்ணின் இளஞ்சிங்க மும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும் கௌரவ எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களின் தலைமையில் நடைபெறும் நவீன பொதுச் சந்தை கட்டிடத் தொகுதியின் திறப்பு விழாவும் அதனோடிணைந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுமாகும் இப்பெரு விழாவினைச் சிறப்பிப்பதற்காக இலங்கைத் திருநாட்டின் பிரதம மந்திரியாக இருந்த இந்நாள் ஜனாதிபதி மாண்புமிகு மகிந்த ராஜபக்ஷ அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார் நாம் பெற்ற பெரும் பேறாகும்.

சம்மாந்துறையின் நீண்டகாலக் கனவாகிய நவீன சந்தை உருவாகி வளர்ச்சி பெறுவதற்குப் பல தசாப்தங்கள் கடந்துவர வேண்டியிருந்தது. இதற்கு நீண்டதொரு வரலாற்றுப் பின்னணியும் காணப்படுகின்றது. அவ்வரலாற்றைச் சற்று பின்னோக்கிப் பார்ப்பது மிகப் பொருத்தமானதொரு விடயமாகும்.

**ஹிஜ்றா நவீன சந்தையின் அமைவிட முக்கியத்துவம்:**

எந்தவொரு நாடோ நகரமோ அல்லது இடமோ அது அமைந்திருக்கும் நிலையத்தையிட்டே முக்கியத்துவம் பெறுகின்றது. இச்சந்தை அமைந்துள்ள இடம் சம்மாந்துறையின் மையமாக விளங்கும் ஹிஜ்றா சந்தியிலாகும். இவ்விடம் இப்பிரதேசத்தின் முக்கிய வர்த்தக மையமாகவும் போக்குவரத்து ஊடறுத்துச் செல்லும் முக்கிய சந்தியாகவும் திகழ்கிறது. முன்னாள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் யூ.எல்.எம். முகையதீன் அவர்களின் முயற்சியினால் ஹிஜ்றா சந்தியின் மையத்தில் ஒரு மணிக்கூட்டுக் கோபுரமும் அதனைச் சுற்றி ஒரு சுற்று வட்டமும் அமைக்கப்பட்டது. இது இப்பகுதியின் அழகை மேலும் மெருகூட்டி நிற்கின்றது. இச்சுற்று வட்டத்தை மையமாக வைத்து நான்கு திசைகளிலும் நான்கு பெரு வீதிகள் செல்கின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் முதலாவது பெரு வீதி ஹிஜ்றா சந்தியிலிருந்து கிழக்காக 'ஹிஜ்றா வீதி' என்ற பெயருடன் செல்கிறது. இவ்வீதியில் முக்கிய வர்த்தக நிலையங்களும் ஊவா அபிவிருத்தி வங்கி, மக்கள் வங்கி, வலயக் கல்வி அலுவலகம், பொலிஸ் நிலையம், தபால் நிலையம், பஸ் டிப்போ, பிரதேச செயலகம், விவசாய விஸ்தரிப்பு நிலையம், மாவட்ட வைத்தியசாலை, பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் பெரு முயற்சியினால் அமையவிருக்கும் ஜம்இய்யதுல் உலமா தலைமைக் காரியாலயமும் மற்றும் முக்கிய நிறுவனங்களும் சிறு கைத்தொழில் நிலையங்களும் அமைந்து அடர்த்தியான குடிசனப்பரம்பலுடன் நெருக்கமான போக்குவரத்து கட்ட மைப்புடன் காணப்படுகின்றது. மேலும் கல்முனை, மட்டக்களப்பு, அக்க ரைப்பற்று போன்ற கரையோரப் பிரதேசங்களில் இருந்து வரும் பேரூந்துப் போக்குவரத்தின் பிரதான பாதையாகவும் இது திகழ்கிறது.

இரண்டாவது பெரு வீதி மேற்குப்புறமாக அம்பாரை நோக்கிச் செல்கிறது. இவ்வீதியில் வர்த்தக நிலையங்கள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள், இலங்கை வங்கி, ஜும்ஆப் பள்ளிவாசல், மின்சாரசபை அலுவலகம், பிரதேச சபை அலுவலகம், நூலகம், அல்மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி, தபால் நிலையம், தென்கிழக்குப்பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞானபீடம், ஜனாதிபதி கலாச்சார விளையாட்டு நிலையம், நீர்ப்பாசனக் காரியாலயம், தொழில்நுட்பக் கல்லூரி, குடிநீர் விநியோக சுத்திகரிப்பு நிலையம், விவசாய ஆராய்ச்சி நிலையம், மிருக வைத்திய நிலையம், பால் பதப்படுத்தும் நிலையம், பென்சனியர் தலைமைக் காரியாலயம், பள்ளிவாசல்கள் போன்ற இன்னோரன்ன நிறுவனங்களும் அடர்த்தியான மக்கள் குடியுருப்பும் காணப்படுகிறது.

இதேபோல் தெற்கு நோக்கிச் செல்லும் போது பெரு வீதி மல்கம்பிட்டி வீதி என்ற பெயருடன் சம்மாந்துறை புளக் ஜே என்ற பிரதேசத்தை இரண்டாகப் பிரிக்கும் எல்லையாக அமைந்து செல்லுகிறது. இவ்வீதிக்கு மேற்கில் உள்ள பகுதி புளக் ஜே மேற்கு என்றும் கிழக்கில் உள்ள பகுதி புளக் ஜே கிழக்கு என்றும் பெயர்கொண்டு அழைக்கப்படுகிறது. இப்பிரதேசம் 1950ம் ஆண்டிலிருந்து படிப்படியாக அபிவிருத்தியை நோக்கி நகர்ந்து சென்று கொண்டிருக்கிறது. கல்லோயோக் குடியேற்றத்தின் மூலம் இப்பிரதேசம் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள புதிதாக குடியேறிய பகுதியாகும். இதனூடாகச் செல்லும் பெரு வீதி புளக் ஜே பிரதேசத்தை கடந்து பரந்த நெல்வயல் வெளியூடாகச் சென்று 'மல்கன்பிட்டி' என்ற பராதனக் புகழ்வாய்ந்த கிராமத்தைச் சென்றடைகின்றது. மேலும் இப்பாதை நெயினாகாடு என்ற கிராமத்தை ஊடறுத்து பௌத்தர்களின் பௌத்த தலமாகிய தீகவாப்பி இறக்காமம் போன்ற பகதிகளுக்கும் செல்கின்றது. இப்பாதை நெடுகிலும் பரந்த நெல்வயல்களே காணப்படுகின்றன. இப்பிரதேசத்தின் முக்கிய சிறுகைத்தொழிலாகிய செங்கல்சுடும் நிலையங்கள் நூற்றுக்கணக்கில் காணப்படுகின்றன. சம்மாந்துறைக்கும், கரையோரப்பிரதேசத்திற்கும் தேவையான செங்கல்லின் பெரும்பகுதி இவ்வீதியினூடாகவே கொண்டு செல்லப்படுகின்றது. சம்மாந்துறை விவசாயிகளின் முக்கிய விவசாய நடவடிக்கைகளின் பிரதான போக்குவரத்துப் பாதையாகவும் இவ்வீதியே திகழ்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிழக்கு உட்கட்டமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் அமைச்சர் அன்வர் இஸ்மாயிலினால் பூர்த்தி செய்யப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க சம்மாந்துறை ஹிஜ்ரா சந்தைக் கட்டிடம்



சந்தைக் கட்டிட திறப்பு விழாவில் சனத்திரழின் ஒரு பகுதியினர்



சந்தைக்கட்டிட திறப்பு விழாவுக்காக அன்றைய பிரதம மந்திரி- இந்நாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ



சந்தைக்கட்டிட நினைவுப் படிகத்தை திரைநீக்கம் செய்த இன்றைய ஜனாதிபதி




சந்தைக் கட்டிட திறப்பு விழாவில் இன்றைய ஜனாதிபதியும் அமைச்சர்க்ள் சிலரும்



சந்தைக்கட்டிட நினைவுப் படிகத்தை ஜனாதிபதி வாசிக்கின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சந்தைக்கட்டிட திறப்பு விழாவுக்கு பிரதம அதிதி அமைச்சர்களாலும் மக்களாலும் வரவேற்கப்படும் காட்சி




சம்மாந்துறை ஹிஜ்ரா பள்ளிவாசல் இந்நாள் ஜனாதிபதி இலத்திரனியல் நூலகத்தை திறப்பதற்காக



சம்மாந்துறை ஹிஜ்ரா பள்ளிவாசல் இந்நாள் ஜனாதிபதி இலத்திரனியல் நூலகத்தை திறந்துவைத்தபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





[illegible]






[illegible]



[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சம்மாந்துறையில் இந்நாள் ஜனாதிபதி அமைச்சர் அன்வர் இஸ்மாயிலுடன்

அமைச்சரும் ஜனாதிபதியும் சந்தைக்கட்டிட திறப்பு விழாவில்





எதிர்கால ஜனாதிபதியாக முதன் முதல் அன்வர் இஸ்மாயிலால் விழிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு அமைச்சர் பொண்னாடை போர்த்துகிறார்

சந்தைக்கட்டிட திறப்பு விழாவில் கலந்து கொண்ட பிரதம அதிதிக்கு சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபைத்தலைவர் தர்ஜுமாவை அன்பளிப்பு செய்த போது





ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசு

அமைச்சர் அதாவுல்லாவுக்கு நினைவு பரிசு வழங்குகிறார் அமைச்சர் அன்வர் இஸ்மாயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹிஜ்ரா சந்தை திறப்பு விழா சிறப்பு மலரினை பிரதம அதிதிக்கு அமைச்சர் அன்வர் இஸ்மாயில் வழங்கும் போது



சந்தைக் கட்டிட திறப்பு விழாவில் பிரதம அதிதியும் அமைச்சர்களும்



அமைச்சர் பேரியல் அஷ்ர.்.ப் அவர்களுக்கு அன்வர் இஸ்மாயில் நினைவுப் பரிசு வழங்குகிறார்



சம்மாந்துறை நம்பிக்கையாளர் சவை தலைவர் அமைச்சர் அன்வர் இஸ்மாயிலுக்கு பொண்னாடை போர்த்துகிறார்



அமைச்சர் அன்வர் இஸ்மாயிலால் எதிர்கால ஜனாதிபதி என விழிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ அவர்களும் அமைச்சர்களும்



சம்மாந்துறை சந்தைக்கட்டிடத்தை நிர்மாணித்த CECB நிறுவன தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு நினைவு கேடயம் வழங்கும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹிஜ்றா சந்தியிலிருந்து வடபுறமாகச் செல்லும் பெருவீதி சம்மாந்துறையின் பிரதான வீதியாக அமைந்துள்ளது. 'சம்மாந்துறை' என்ற பெயருடன் பாரம்பரியமாக பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே குடியிருப்புக்களைக் கொண்டிருந்த பகுதிகளை ஊடறுத்துச் செல்கின்றது. இப்பெரு வீதியில் சம்மாந்துறைக்கான குடிநீர் விநியோக நீர்த்தாங்கி, சம்மாந்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பள்ளிவாசல்கள், சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை), சம்மாந்துறை பிரதேசசபை, இந்துக்களின் வணக்கஸ்தலம், சம்மாந்துறை அமீர்அலி பொதுநூலகம் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், கைத்தொழில் நிலையங்கள் என்பன காணப்படுகின்றன. சம்மாந்துறை மக்கள் அடர்த்தியாக வாழும் பகுதியூடாக இப்பெருவீதி செல்கிறது.

மேற்கூறிய பிரதான நான்கு பாதைகளில் சந்திக்கும் இடமாக திகழும் ஹிஜ்றா சந்தியின் நாலாபுறமும் நகர அமைப்பைக் காட்டும் கட்டிடத் தொகுதிகள் நிறைந்து காணப்படுகின்றன. சம்மாந்துறை பிரதேச மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றும் மையமாக ஹிஜ்றா சந்தி திகழ்கிறது. இச்சந்தியிலிருந்து தென்புறம்பாகச் செல்லும் மல்கன்பிட்டி வீதிக்கும், மேற்குப் புறம்பாகச் செல்லும் அம்பாரை வீதிக்கும் இடையில் அமைந்துள்ள இடமே இன்று திறப்பு விழாக்காணும் ஹிஜ்றா நவீன பொதுச்சந்தைக் கட்டிடமாகும். மேலும் இன்று சம்மாந்துறையில் 'ஜும்ஆ' பள்ளிவாசல்கள் ஆறு காணப்படுகின்றன. இவற்றில் நவீன பொதுச்சந்தைக் கட்டிடத் தொகுதிக்கு மேற்குப்புறம்பாக அம்பாரை வீதியோரமாக மிகவும் கம்பீரமாகத் தோற்றமளிக்கும் ஹிஜ்றா ஜும்ஆப் பள்ளிவாசல் அமைந்துள்ளது. இப்பள்ளிவாசலின் முகப்பும் நுழைவாயிலும் இவ்வூரின் பெருமகன் என்று அழைக்கப்படும். அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களினாலே அழகுபடுத்தப்பட்டு திறந்து வைக்கப்பட்டது இவ்வாறு பல்வேறு நிலைய முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் சம்மாந்துறை மக்களின் நீண்டகாலக் கனவாகிய நவீன பொதுச் சந்தைத் தொகுதி அமைந்து அழகுபெற்றிருப்பதற்கு எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம்.

**ஹிஜ்றா சந்தியின் வரலாறு:**

சம்மாநதுறை ஹிஜ்றா சந்தி இன்று சன நெருக்கடி மிகுந்த இடமாகவும், போக்குவரத்து நெரிசல் அதிகரித்த இடமாகவும், மக்கள் சேவையின் குவிமையமாகவும், வர்த்தக கேந்திர நிலையமாகவும் திகழ்கிறது. ஆயினும் இவ்விடம் பல தசாப்தங்களுக்கு முன்னர் காடடர்ந்த பிரதேசமாகவும், வனவிலங்குகளின் நடமாட்டம் உள்ள இடமாகவும், சேனைப்பயிர்ச்செய்கை நடைபெறும் பகுதியாகவும் இருந்துள்ளது. இச்சந்தி நீண்டகாலமாக ''அஸறப்பா சந்தி" என்ற பெயருடனேயே அழைக்கப்பட்டு வந்தது. இச்சந்தியில் அப்போது சிறு குடிசைகள் போன்ற ஒரு சில கடைகளே காணப்பட்டன. அப்போது பின்வரும் பாடல் இங்கு பிரசித்தமாக இருந்தது.

'அஸறப்பா சந்தில ஆரப்பா கடையில
போடப்பா தேயிலை, பூப்போட்ட கிளாசில'

ஆரம்பத்தில் ஹிஜ்றா என்றழைக்கப்படும் பொலிஸ் நிலைய வீதி அமைக்கப்படவில்லை. அது பின்னாளிலேயே கல்லோயா அபிவிருத்தித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்ட நடவடிக்கைகளுக்குப் பின்னரே திறக்கப்பட்டது. இச்சந்தியிலிருந்து தென்புறம்பாகச் செல்லும் மல்கன்பிட்டி வீதியில் 16 கிலோமீற்றருக்கு அப்பால் பௌத்தர்களின் புனித இடமாகிய 'தீகவாபி' என்ற இடம் காணப்படுகின்றது. இதன் காரணமாக பல ஆண்டுகளாக தீகவாபிச் சந்தி என்ற பெயர் கொண்டு அழைக்கப்படலாயிற்று. இதனால் 'அஸறப்பா சந்தி' என்ற பெயர் மருவி வரலாயிற்று. ஆயினும் இச்சந்தி இப்பிரதேசத்தின் முக்கிய இடமாக மாற்றமடைந்து வந்தவேளையில் இலங்கையில் ஹிஜ்ரி 1400ம் வருடம் மிகவும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வு 1979ம் ஆண்டு நடைபெற்றது. அதன் ஞாபகார்த்தமாக பலரின் ஆலோசனையின்படி இவ்விடயம் ஹிஜ்றா சந்தி என்ற பெயர் கொண்டு அழைக்கப்பட்டது.

**சம்மாந்துறையின் 'சந்தை' வளர்ச்சி பற்றிய வரலாறு:**

'சாமுத்திரிகா' இலட்சணங்கள் யாவும் அமையப்பெற்ற சம்மாந்துறைத் தாயிடம் கருக்கட்டி வளர்ச்சியடைந்து இன்று பிறந்துள்ள 'சம்மாந்துறைப் பொதுச் சந்தை' என்ற சேயின் வளர்ச்சியும் வரலாறும் மிகவும் நீண்டது. சம்மாந்துறையின் வரலாற்றில் ஆரம்ப காலத்திலேயே ஒரு சந்தை ஆரம்பிக்கப்பட்டு அது பல்லாண்டு காலம் நீடித்து நிலைத்து வந்துள்ளது. இன்று சம்மாந்துறையின் 'பழைய மார்கட்' என்றழைக்கப்படும் இடம் பண்டைய காலத்தில் கண்டியரசர்களின் பொருட்கள் வாங்கும் விற்கும் இடமாக திகழ்ந்து வந்துள்ளதாக அறியக் கிடைக்கின்றது. கண்டியரசர்களின் கிழக்கின் துறைமுகமாக சம்மாந்துறை பல்லாண்டு காலம் இருந்து வந்துள்ளது. அப்போது இத்துறைமுகத்திற்கு வரும் பொருட்களும் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களும் பரிமாற்றம் செய்யப்படும் இடமாக இச்சந்தை அமைந்திருந்தது. 'தாவளம்' என்ற பாதையூடாக இப்பொருட்கள் கண்டிராச்சியத்திற்கு ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்டன. ஆயினும் இச்சந்தை தொடர்பான பூரண தகவல்கள் மேலும் ஆராயப்பட வேண்டியன.

சம்மாந்துறை என்றழைக்கப்பட்ட பட்டினப் பகுதி முதலில் 'Sanitary Board' யின் நிருவாகத்தின் கீழ் இயங்கி வந்தது. பின்னர் இது 1947 ம் ஆண்டு பட்டின சபை என்ற அந்தஸ்தைப் பெற்று பலத்தாபன நிருவாகத்திற்குட்பட்ட ஒரு சபையாக பரிணமித்தது. கிழக்கிலங்கையின் முதலாவது பட்டின சபையும் இதுவாகும். சம்மாந்துறையின் பெரும்பாலான பகுதி 1964 வரை பட்டினசபையின் நிருவாகத்திற்குட்பட்ட பகுதியாகவே இருந்து வந்தது. பின்னர் 1964 யில் கருவாட்டுக்கல், புளக் ஜே பகுதிகள் நாவிதென்வெளி கிராம சபைக்குட்பட்ட பகுதியாக மாற்றம் செய்யப்பட்டது. சம்மாந்துறை பட்டினசபை பகுதியில் பஸார் வீதி என்றழைக்கப்படும் வீதியில் அமைந்துள்ள பொதுச் சந்தை பன்னெடுங்காலமாக இயங்கி வந்துள்ளது. இச்சந்தை அமைந்திருந்த இடம் சம்மாந்துறை பள்ளிவாசல்கள் நம்பிக்கையாளர் சபைக்கு சொந்தமானது. இச்சந்தையில் நிரந்தர கட்டிடங்கள் இருக்கவில்லை. இதனைச்சுற்றி கடைத்தெரு வளர்ச்சியடைந்திருந்தது. ஆயினும் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஈடுகொடுக்கும் வசதிகள் இச்சந்தையில் இருக்கவில்லை. இப்பொதுச் சந்தை இயங்கி வந்த இடத்தை மக்கள் 'ஆலையடி' என்றே அழைக்கலாயினர். இவ்விடத்தில் ஆல மரம் ஒன்று இருந்தது. பொது மக்களிடம் 'சந்தை' என்ற சொல்லைவிட 'ஆலையடி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பெயரே வழக்கிலிருந்தது. சந்தைக்கு சென்று வரும் ஒருவரிடம் 'நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்' என்று கேட்டால் அவர் உடனே 'நான் ஆலையடிக்கு போய் வருகிறேன்' என்றுதான் கூறுவர். அந்தளவுக்கு சந்தைக்குப் பதிலாக 'ஆலையடி' என்ற காரணப் பெயர் சம்மாந்துறையில் பிரபல்யம் பெற்று விளங்கியிருந்தது. சம்மாந்துறை மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிலையில் இச்சந்தை இல்லாத காரணத்தினால் இதனை விஸ்தரிக்க வேண்டிய அவசர நிலமை ஏற்படலாயிற்று. சம்மாந்துறையின் பட்டின சபையின் தலைவரக இருந்த மர்ஹூம் எம்.ஏ அமீர் அலி (1962 - 1968, 1970 - 1977) அவர்களின் காலத்தில் ஆலையடி என்ற சந்தை அமைந்திருந்த பகுதிக்கு கிழக்குப் புறமாக உள்ள தனியார் காணிகள் சுவீகரிக்கப்பட்டு அவ்விடத்தில் பொதுச் சந்தைக் கட்டிடம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டது. நீண்டகாலமாக ஓலைக்கொட்டில்களில் இயங்கிவந்த சந்தை இதன் பின்னர் ஓரளவு வசதிகளைக் கொண்ட நிரந்தர கட்டிடத்தில் இயங்கிவந்தமை சந்தை அபிவிருத்திப் படியில் ஒரு முக்கிய கட்டமாக குறிப்பிடலாம்.

ஆயினும் காலவோட்டத்தில் இப்பொதுச் சந்தை நீடித்து நிலைக்கமுடியாத சூழ்நிலை ஏற்படலாயிற்று. சம்மாந்துறையில் குடிசனப் பெருக்கம் வருடா வருடம் பெருகி வந்தமையால் இங்குள்ள மக்கள் கருவாட்டுக்கல், புளக் ஜே பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்து செல்லலாயினர். இவ்விடப் பெயர்ச்சி காரணமாக 1960 ஆம் ஆண்டின் பின்னர் அப்பகுதிகள் சனநெருக்கடி கூடிய பகுதியாக முன்னர் குறிப்பிட்ட ஹிஜ்றா சந்தி வளர்ச்சி அடைந்து வரலாயிற்று. பயங்கரவாத நடவடிக்கையும் மக்கள் இடம்பெயர்வுக்கு முக்கிய காரணமாகும். இந்த நிலையில்தான் ஹிஜ்றா சந்தியிலும் ஒரு பொதுச் சந்தையின் அவசியம் உணரப்பட்டு அதற்கான முயற்ச்சிகள் முன்னெடுக்கப்ப டலாயின. பலரினதும் உழைப்பின் பலனாக உருவாகி வளர்ச்சியடைந்து வந்த ஹிஜ்றா சந்தியில் அமைந்த சந்தையின் துரித வளர்ச்சியால் பட்டின சபைப் பகுதியில் பன்னெடுங்காலமாகக் சீருஞ்சிறப்புட னும் இயங்கி வந்த சந்தை தனது முக்கியத்துவத்தைப் படிப்படியாக இழந்து வரலாயிற்று.

**ஹிஜ்றா - நவீன பொதுச் சந்தையின் வரலாற்றுப் பின்னணி:**

சம்மாந்துறைப் பட்டினப் பகுதியிலிருந்த மக்கள் பெருந்தொகையில் கருவாட்டுக்கல், புளக் 'ஜே' பேன்ற பகுதிகளை நோக்கி இடம்பெறலாயின. இதனால் உள்ளூராட்சி கட்டமைப்புகளிலும் மாற்றங்கள் ஏற்படலாயின. 1964 வரை சம்மாந்துறைப் பட்டின சபையுடன் இணைந்திருந்த கருவாட்டுக்கல், புளக் 'ஜே' பகுதிகள், நாவிதன்வெளி கிராமசபையுடன் இணைக்கப்படலாயின. இக்கால கட்டத்தில் நாவிதன்வெளி கிராமசபையின் 13ம் வட்டாரமாக கருவாட்டுக்கல்லும், 14ம் வட்டாரமாக புளக் 'ஜே'யும் இயங்கின. ஹிஜ்றா சந்தியில் அமைந்துள்ள நவீன பொதுச் சந்தைத் தொகுதி மேற்கூறிய 14ம் வட்டாரத்திலேயே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சம்மாந்துறை ஹிஜ்றா பொதுச் சந்தை உருவாகி வளர்ச்சியடைந்து, இன்று நவீன பொதுச் சந்தையாக பரிணமித்து நிற்பதற்குப் பலர் தமது பூரண பங்களிப்பை நல்கி வந்துள்ளனர். 1964 ஆம் ஆண்டு நாவிதன்வெளிக் கிராமசபையின் கீழ் இப்பிரதேசம் நிருவகிக்கப்பட்ட போதிருந்து பொதுச் சந்தை தொடர்பான ஆவணங்களும் தகவல்களும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்குக் கிடைக்கக் கூடியதாக உள்ளது. கல்லோயா அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே குடியிருப்பு நிலம், பொதுத்தே வைக்குரிய நிலம் என நகர நிருமாணப்படத்தில் ஒதுக்கீடுகள் செய்யப்பட டுள்ளன. அந்த நகர நிர்மாணப்படத்தில் தற்போது சந்தை அமைந்துள்ள பகுதியும், ஹிஜ்றா பள்ளிவாசல் அமைந்துள்ள பகுதியுமாக மொத்தம் மூன்று ஏக்கர் நிலம் பஸ்தரிப்பு நிலையத்திற்காகவும் பொதுச் சந்தைக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பொதுத் தேவைக்காக ஒதுக்கப்பட்ட மேற்படி நிலத்தை தனியார்கள் சிலர் காடுவெட்டித் திருத்தி குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டனர். இவ்விடத்தில் பொதுச் சந்தை அமைப்பதற்கு முயற்ச்சிகள் மேற்கொள்ளப்படும் போதெல்லாம் இங்கு நீண்டகாலமாக குடியிருக்கும் மக்களை வெளியேற்றுவது மிகவும் சிரமமான காரியமாகவே இருந்துள்ளது.

நாவிதன்வெளிக் கிராம சபைத் தலைவர் திரு.வி.ரி. சின்னத்துரை அவர்கள் சந்தைக்குரிய நிலத்தைப் பெறுவதில் ஆரம்ப முயற்ச்சிகளை மேற்கொண்டிரு ப்பதை அறியக்கூடியதாக இருக்கிறது. மேற்படி சபையின் 13ம் வட்டார அங்கத்துவர் ஜனாப் யூ. கலந்தர் லெப்பை அவர்களினதும் 14ம் வட்டார அங்கத்துவர் ஜனாப் எம். அச்சிமுகம்மது அவர்களினதும் வேண்டுதலில் பேரில் கிராம சபைத் தலைவர் திரு வி.ரி. சின்னத்துரை அவர்கள் நகர நிர்மாணப் படத்தில் பஸ் நிலையத்திற்காகவும் பொதுச் சந்தைக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள மூன்று ஏக்கர் நிலத்தை நாவிதன்வெளிக் கிராம சபைக்கு ஒதிக்கித் தருமாறு 07.08.1965ம் ஆண்டு அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபருக்கு விண்ணப்பம் ஒன்றை அனுப்பியுள்ளார். மேற்குறிப்பிட்ட நிலம் பொதுத் தேவைக்கு ஒதுக்கப்பட்ட போதிலும் அங்கு குடியிருப்பவர்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் தோல்வியிலேயே முடிந்து வந்துள்ளன. 14ம் வட்டார அங்கத்தவரான ஜனாப் எம். அச்சிமுகம்மது அவர்கள் இந்நிலத்தில் குடியிருப்பவர்களை வெளியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கிராம சபைத் தலைவரை வேண்டி 27.02.1966ம் திகதி ஒரு கடிதம் எழுதியுள்ளார். நாவிதன்வெளிக் கிராம சபைத் தலைவர் திரு.வி.ரி. சின்னத்துரை அவர்கள் சம்மாந்துறைக் காரியாலய அதிகாரி அவர்களுக்கு 19.05.1967ம் ஆண்டு மேற்படி நிலத்திலிருந்து அங்கு குடியிருக்கும் மக்களை வெளியேற்றுமாறும் அவர்களது நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறும் கோரி கடிதம் அனுப்புள்ளார். மேற்கடிதத்தைப் போல் பல கடிதங்கள் இவ்விடயம் தொடர்பாக அனுப்பப்பட்டும் முடிவுகள் ஏதும் எட்டப்படவில்லை. ஒருசந்தர்ப்பத்தில் அம்பாரை அரசாங்க அதிபர் அவர்களால் கச்சேரி சேவியர் அவர்களுக்கு சில நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கூறி அறிவுறுத்தல் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. அக்கடிதம் பின்வருமாறு அமைந்துள்ளது.

எனது இல. இ.ஜ 904

திரு எம். விஜயக்கோன் அவர்களுக்கு

கச்சேரி சேவியர், உகனை.

**சம்மாந்துறை கிழக்கு கி.ச.க்கு இடம் ஒதுக்கல்**

1. சம்மாந்துறை கிழக்கு கி.ச.க்கு பஸ் நிறுத்தம் ஸ்தாபனத்திற்காக ஏக்கர் 1.5 இத்துடன் இணைத்துள்ள படத்தின் பிரகாரம் ஆர்.டீ.ஓ முன்னிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாந்துறை கிழக்கு கிராம சபைக்கு பாரம் கொடுத்து அறிவிக்கவும்.
2. அன்றே சம்மாந்துறை தீகவாபிச் சந்தி எஸ்.எம். இப்றாகிம் அவர்களுக்கு கொடுபட்ட இடத்தையும், ஆர்.டீ.ஓ முன்னிலையில் ச.கி கிராம சபைக்கு பாரம் கொடுத்து அறிவிக்கவும்.
3. அன்றே இப்றாகீம் கடையின் முன்புறமுள்ள இடத்தையும் எம்மால் உங்களுக்கு ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் மார்கட்டுக்காக க.சி. கிராம சபையிடம் ஆர்.டீ.ஓ முன்னிலையில் கலந்து பாரம் கொடுத்து அறிக்கைசெய்யவும்.
4. கொளரவ உள்நாட்டு அமைச்சு மந்திரி இம்மாதம் 13ம் திகதி திறந்துவைக்க யோசனை செய்துள்ளமையால் இதற்கு முதலிடம் கொடுத்து நடவெடிக்கை செய்யவும்.

அரசாங்க அதிபருக்காக,
1967 ஆவணி 07ம் திகதி,
கச்சேரி, அம்பாரை.

மேற்கூறிய நடவடிக்கை மூலம் பினவரும் விடயங்களை அறியக்கூடியதாக உள்ளது. பஸ் நிலையத்திற்கும். சந்தைக்குமாக அரசாங்கம் நிலம் ஒதுக்கியுள்ள நிலையில் மேற்படி பொதுத் தேவைக்காக நில அளவை செய்யப்பட்டு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளமையும் இப்பொதுத் தேவைக்கான நிலத்தில் சிலர் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதையும் குறிப்பிடலாம். ஆயினும் இவர்கள் எவ்வளவுதான் முயற்சி செய்தபோதிலும் குறிப்பிட்ட பொது நிலங்களிலிருந்து எவரையிம் வெளியேற்ற முடியாத நிலையே தொடர்ந்தது.

இதே வேளை கௌரவ உள்நாட்டு அமைச்சராக இருந்த திரு டபிளியூ தசாநாயக்கா அவர்கள் 1967ம் ஆண்டு பொதுச் சந்தைக் கட்டிடத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். ஆயினும் சந்தைக் கட்டிட வேலைகள் தொடர்படவில்லை. 'சம்மாந்துறை கிராம சபை' பெயருடன் நாவிதன்வெளிக் கிராம சபையிலிருந்து பிரிந்து தனியான கிராம சபையாக 1968ம் ஆண்டிலிருந்து இயங்க ஆரம்பித்தது. 1968ம் ஆண்டு ஜூன் மாதம் ஏழு வட்டாரங்களைக் கொண்ட சம்மாந்துறை கிராம சபைத் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் பின்வருவோர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.
1. ஜனாப் ஏ. ஆமிதுலெவ்வை (தலைவர் 1968 - 1970)
2. ஜனாப் ஜ.எல். உதுமாலெவ்வை (தலைவர் 1970 - 1973)
3. ஜனாப் எஸ்.எம். உதுமாலெவ்வை (தலைவர் 1973 - 1977)
4. ஜனாப் எம்.ஏ. மீராலெவ்வை - சபை உறுப்பினர்கள்.
5. ஜனாப் ஏ. கலந்தர்லெவ்வை - சபை உறுப்பினர்கள்.
6. ஜனாப் ஏ. தம்பிலெவ்வை - சபை உறுப்பினர்கள்.
7. ஜனாப் ஏ. அலியார் - சபை உறுப்பினர்கள்.

ஜனாப் ஏ. ஆமிதுலெவ்வை அவர்களின் தலைமையில் முதலாவது சம்மாந்துறை கிராம சபை நிர்வாகம் ஆரம்பமானது. தலைவரும், உறுப்பினர்களும் பொதுச் சந்தை அமைக்கும் பணியில் கூடிய கவனம் செலுத்தினர். ஆயினும் இவர்களுக்கு பொதுச் சந்தையில் கட்டிடப் பணிகள் ஆரம்பிப்பதிலும், அபிவிருத்தி செய்வதிலும் தனியார் நிலத்தை ஆக்கிரமிப்பது பெரும் தடையாக இருந்தது. இதற்கு மாற்று நடவடிக்கை மேற்கொள்ள சபையினர் முடிவுசெய்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது பிரமாண்டமான அளவில் காட்சி தரும் ஹிஜ்றாப் பள்ளிவாயல் அமைந்துள்ள இடமும் கிராம சபைக்கு உரியதாக இருந்தது. இந்த இடத்தில் பஸ் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருந்தது. ஆயினும் முன்னர் குறிப்பிட்ட பொதுச் சந்தை அமைப்பதில் ஏற்பட்ட சிரமத்தின் காரணமாக அவ்விடத்தைவிட்டு பஸ் நிலையம் அமைக்க சிபாரிசு செய்யப்பட்ட நிலத்தில் பொதுச் சந்தை அமைப்பது உசிதம் எனக் கருதி அதற்கான தீர்மானத்தினையும் சபையினர் எடுத்தனர்.

சம்மாந்துறை கிராம சபை உறுப்பினர்களின் மேற்படி தீர்மானத்தை அறிந்த சிலர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன் இவ்விடயத்தை முன்னாள் பாராளமன்ற உறுப்பினர் எம்.ஏ. அப்துல் மஜீட் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் கிராம சபைத் தலைவர், உறுப்பினர்களை தனது இல்லத்திற்கு அழைத்து இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடல் நடத்தினார்கள். கிராம சபைத் தலைவரும் உறுப்பினர்களும் பொதுச் சந்தை அபிவிருத்திக்கு தனியார்கள் அங்கு குடியிருப்பது பெரும் தடையாக இருப்பதையும் அதனால் மாற்று ஒழுங்கு செய்ய முடிவு எடுத்திருப்பதாகவும் கூறினார்கள். கிராம சபை உறுப்பினர்களின் கருத்தை கேட்டறிந்த முந்நாள் கௌரவ பாராளமன்ற உறுப்பினர் எம்.ஏ. அப்துல் மஜீட் அவர்கள் சந்தைக்குரிய நிலத்தில் குடியிருப்பவர்களைத் தான் உடன் வெளியேற்றித் தருவதாகவும் சந்தைக்கென குறிப்பிட்ட இடத்திலேயே சந்தை அமைய வேண்டுமெனவும் கூறினார். இதனை ஏற்றுக் கொண்ட சபையினர் தனியார் ஆக்கிரமித்திருந்த பகுதி தவிர ஏனைய பகுதிகளில் சந்தைக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாயினர்.

முன்னாள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. அப்துல் மஜீட் அவர்கள் தாம் வாக்களித்தபடி சந்தைக்குரிய நிலத்தை ஆக்கிரமித்தவர்களை வெளியேற்றுவதற்காகப் பல முயற்சிகளில் ஈடுபட்டார். இது தொடர்பாக பல கலந்துரையாடல்களும் கூட்டங்களும் அவரால் நடாத்தப்பட்டன. குடியிருப்பாளர்களுக்குப் பல சலுகைகள் வழங்குவதாகவும் கூறப்பட்டது. இந்த நிலமைகள் பல வருடங்கள் நீடித்தும் இறுதிவரை இவர்களை வெளியேற்ற முன்னாள் அமைச்சர் அப்துல் மஜீட் அவர்களாலும் முடியாமலே போயிற்று. பொதுச் சந்தைக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் குடியிருந்த சிலரிடம் அரச உத்தரவுப் பத்திரம் இருந்தது. சிலரிடம் உத்தரவுப் பத்திரம் எதுவும் இருக்கவில்லை. பொதுச் சந்தை அமைப்பதற்கு தேவைப்படும் நிலத்தில் றோட்சைட்டில் 25 வருடங்களுக்கு முன்னர் பணம் செலுத்திப் பற்றுச்சீட்டு பெற்றவர்கள் சிலரும் இருந்தனர். இவ்வாறான நிலமையில் இவர்களை அகற்றுவது பெரும் சிரமமான காரியமாகவே இருந்தது.
இவர்களை இங்கிருந்து வெளியேற்றும் இன்னுமொரு நடவடிக்கையாக சம்மாந்துறைப் பிரதேச செயலாளர் அவர்களால் வெளியேறுமாறு கூறும் அறிவித்தல் வழங்கப்பட்டது. 26.05.1993ம் திகதி இந்த அறிவித்தல் சட்டரீதியாக வழங்கப்பட்டது. இந்த நடவடிக்கையும் தோல்வியிலேயே முடிவடைந்து. இவ்விடயம் தொடர்பாக முன்னாள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் யூ.எல்.எம். முஹையதீன் அவர்களும் பல முயற்சிகளில் ஈடுபட்டார். 20.09.1998 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் இல்லத்தில் பொதுச்சந்தை அமைப்பதற்கான கலந்துரையாடல் நடைபெற்றது. அக்கூட்டத் திலும் சரியான தீர்வு எட்டப்படவில்லை. மேலும் அம்பாரை மேல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்றத்திலும் குடியிருப்பாளர்களால் வழங்குத் தொடரப்பட்டு அவர்களுக்குச் சார்பாகத் தீர்புப்பும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பொதுச் சந்தைக்கான நிலத்தில் குடியிருப்பவர்களை வெளியேற்றும் பணி பல்வேறுபட்ட தரப்பினராலும் பல்வேறு காலகட்டங்களில் மேற்கொள்ளப்பட்டபோதும் அவை அனைத்து முயற்சிகளும் முயற்கொம்பா கவே முடிந்தது. இதன் காரணமாக சம்மாந்துறை மக்களின் கனவாகிய நவீன பொதுச் சந்தை என்பது பகற் கனவாகவே சென்று கொண்டிருந்தது. இந்த விடயம் ஒரு முடிவுக்கு வராதா? என்று ஏங்கியோர் பலர்.

**பொதுச் சந்தை நிர்மாணப் பணிகள்:**

பொதுச் சந்தைக்குரிய நிலத்தில் குடியிருப்பவர்களை வெளியேற்றும் நடவடிக்கை ஒருபுறமிருக்க, மீதியாக இருந்த நிலத்தில் சந்தை நடவடிக்கை கள் தொடர்ந்து கொண்டேயிருந்தது. ஆயினும் நிரந்தரக் கட்டிடமில்லாமல் தற்காலிகக் கொட்டில்களில் வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட லாயின. இதனை உணர்ந்த சம்மாந்துறை கிராம சபைத் தலைவர் ஜனாப் எஸ்.எம். உதுமாலெவ்வை அவர்களும் உறுப்பினர்களும் மேற்கொண்ட அயராத முயற்ச்சியின் பலனாக ரூபா 35000/= அரச நிதி பெற்று இறைச்சி, மீன், மரக்கறி போன்றவற்றின் விற்பனைக்காகக் கட்டிடமொன்றைக் கட்டலாயினர்.

ஆனால் இக்கட்டிடங்கள் 1978 ஆம் ஆண்டு வீசிய சூறாவளியினால் முற்றாக சேதமடைந்தது. இதனால் எதுவித கட்டிட வசதியுமில்லாமல் சந்தை காணப்பட்டது, இதையறிந்த முன்னாள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. அப்துல் மஜீட் அவர்களின் முயற்சியினால் திட்டப்பணிப்பா ளராக இருந்த ஏ.ஏ பாவா அவர்களின் அனுசரனையுடன் ஆசிய அபிவிருத்தி வங்கிப் பணத்தில் ரூபா இரண்டு மில்லியன் பெறப்பட்டு மல்கம்பிட்டி றோட் பக்கமாக உள்ள இறைச்சிக் கடை, மீன் மார்கட் என்பன கட்டப்படலாயிற்று. இதன் பின்னர் 1994 ஆம் ஆண்டில் கௌரவ புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ர.ஃப் அவர்களின் நிதி ஒதிக்கீட்டிலிருந்து ரூபா இரண்டு மில்லியன் பெறப்பட்டு. மல்கம்பிட்டி றோட் பக்கமாக உள்ள கட்டிடத் தொகுதியின் மேல்மாடி கட்டப்பட்டது. ஆனால் பிரதான வீதியான அம்பாரை வீதியான அம்பாரை வீதிப்பக்கம் அமைந்துள்ள பகுதியில் குடியிருந்தவர்களை எழுப்பவோ சந்தைக் கட்டிடத்தை கட்டவோ தொடர்ந்தும் முடியாமலே போயிற்று.

**நவீன பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதி:**

சம்மாந்துறைக்கென ஒரு நவீன பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதி கட்டுவதற்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் எத்தனையோ இடையூறுகள் ஏற்பட்டுக் கொண்டேயிருந்தன. ஒரு பக்கம் தனியார்களை இங்கிருந்து வெளியேற்றும் பிரச்சினை. மற்றது புதிய கட்டிட வேலைகளுக்கு இயங்கிக் கொண்டிருக்கும் வர்த்தக நிலையங்களை வேறு இடத்திற்கு மாற்றுவது. இதற்கு தற்காலிக ஏற்பாடாக சம்மாந்துறைப் பற்றுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருடன் கலந்துரையாடி ஒரு முடிவு காணப்பட்டது. இதன்படி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாந்துறைப் பற்றுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வளவில் அமைந்த பஸ் நிலையத்திற்கு தற்காலிகமாக சந்தை மாற்றப்பட்டது. இந்த நடவடிக்கையால் பொதுச் சந்தைக்குரிய கட்டிட நிர்மாணப் பணிகள் துரிதமாக நடைபெறலாயின. ஆயினும் அம்பாரை றோட் பக்கமாகக் குடியிருந்த தனியார்களின் வீடும் கடைகளும் ஹிஜ்றாச் சந்தியின் அழகை அவலட்சணமாகக் காட்டிக் கொண்டிருந்தன. இந்த இடம் பெறப்படாமல் நவீன பொதுச் சந்தை அமைப்பது என்பது நினைத்துப் பார்க்கக்கூட முடியாது என்பது அனைவரும ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயமாக இருந்தது.

**நவீன பொதுச் சந்தை பற்றிய கனவு நனவாகிறது:**

சம்மாந்துறை மக்கள் கடந்த அரைநூற்றாண்டுகளாகக் கண்டிருந்த கனவு இன்று நனவாகி ஹிஜ்றா சந்தியில் தலைநிமிர்ந்து நிற்கும் நவீன பொதுச் சந்தையின் அழகையும் அமைப்பையும் கண்டு புளகாங்கிதமடையாத எந்தவொரு சம்மாந்துறை மகனும் இருக்க முடியாது. கடந்த 40 வருடங்களாக எவராலும் சாதிக்கமுடியாத ஒரு சாதனையை இன்று எம்மண்ணில் பிறந்த எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் என்ற இளைஞன் தன்னந்தனியாக நின்று சாதித்திருக்கின்றான் என்றால் இவ்வூர் மக்கள் இவருக்கு என்ன கைமாறு செய்யப்போகின்றார்கள். சம்மாந்துறைத் தாயை அழகாக அலங்கரிக்க வேண்டுமென்பதில் தணியாத தாகம் கொண்டு செயற்பட்டு வரும் கௌரவ அமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்கள் பொதுச் சந்தை விவகாரத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தினார். என்ன விலை கொடுத்தாலும் நவீன பொதுச் சந்தை கட்டியே தீருவதென உறுதிபூண்டார். இதன் காரணமாக பொதுச் சந்தை நிலத்தில் குடியிருந்தவர்களிடம் இதமாகவும், இதயபூர்வமாகவும், அன்பாகவும், ஆறுதலாகவும் பேச்சுவார்த்தை நடாத்தினார். இப்பேச்சுவார்த்தை பூரண வெற்றியளித்ததன் பலனாக 2003 ஜுலை 08 ஆம் திகதி வரலாற்று சிறப்புமிக்க ''சம்மாந்துறை பொதுச் சந்தை கட்டிடம் அமைப்பதனால் காணி இழப்பவர்களுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை'' என்றொரு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தம் கௌரவ அமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களின் சாணக்கியத்திற்கு கிடைத்த வெற்றியாகும். இந்த ஒப்பந்தத்தில் முதலாம் தரத்தவராக பின்வருவோர் கைச்சாத்திட்டனர்.

1. கௌரவ பாராளுமன்ற எம்.ஐ. அன்வர் இஸ்மாயில்.
2. திரு எல்.எஸ்.சீ. சிறிவர்தன - அம்பாரை மாவட்ட செயலாளர்
3. ஜனாப் எம்.எம். நஸீர் - பிரதேச செயலாளர், சம்மாந்துறை.
4. ஜனாப் ஏ.எம்.எம். சுபைர் - பிரதேச சபை செயலாளர், சம்மாந்துறை.

இரண்டாம் தரப்பினராக காணியைத் தற்போது ஆட்சிசெய்து உரிமையில் வைத்திருப்பவர்கள் என இனங்கானப்பட்ட 14 பேர் அடங்குவர்.

மேற்படி ஒப்பந்தத்தில் ஆரம்ப வாசகம் பின்வருமாறு குறிப்பிடுகிறது. '' அம்பாரை மாவட்ட சம்மாந்துறைப் பிரிவில் உள்ள எல்லைக்குட்பட்ட பொதுச் சந்தைக் கட்டிடத்தை விஸ்தரிப்பதற்குத் தேவையான மேலதிக காணிகள் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பில் சந்தைக்கு அருகாமையில் நீண்டகாலமாக உரிமையிலும் உடமையிலும் வைத்திருந்த ஆட்சிபுரிந்து வந்த காணிச் சொந்தக் காரர்களிடம் இருந்து பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட பிரச்சினைக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக நலன் கருதி ஒரு சுமுகமான தீர்வு காணும் பொருட்டு 2004.04.14 இல் அம்பாரை கச்சேரியில் அரசாங்க அதிபர் திரு எல்.எஸ்.சீ. சிறிவர்தன அவர்களது தலைமையில் கௌரவ பாராளமன்ற எம்.ஐ. அன்வர் இஸ்மாயில், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எம்.எம். நஸீர், சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் ஏ.எம்.எம். சுபைர் அவர்களுடைய பிரசன்னத்தில் மேற்படி தேவைக்கு காணி இழப்பவர்களாக கருதப்படும் கீழ் பெயர் குறிப்பிடப்படும் 14 பேர்களிக்கிடையே 2003.05.03 இல் சம்மாந்துறை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலுக்கு அமைவாகவும் எடுக்கப்பட்ட கீழ்க் குறிப்பிடப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக உடன்படிக்கையொன்று செய்வதென உடன்பாடு காணப்பட்டது."

மேலே குறிப்பிடப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாக காணிச் சொந்தக்காரர்கள் பின்வரும் நன்மைகளைப்பெற வழிவகுக்கப்பட்டது.

1. இனங்கானப்பட்ட 14 பேருக்கும் சம்மாந்துறை செந்நெல் கிராமத்தில் அமைந்துள்ளதும், முன்னர் கடதாசி ஆலைக்கு சொந்தமாக இருந்த காணியில் தலா 20 பேச்சஸ் வீதம் வழங்குதல்.
2. அத்துடன் இச்சந்தை வேலை முற்றுப்பெற்றதும் மேற்படி 14 பேருக்கும் கடையறை ஒவ்வொன்றும் ஒவ்வொருவருக்கும் வழங்குதல். அத்துடன் மதிப்பீட்டு வாடகைத் தொகையில் இருந்து 75 வீதம் மாத்திரம் மேற்படி உரிமையாளர்களிடம் இருந்து பிரதேச சபை பெற்றுக்கொள்ள வேண்டும்.

சுமார் 40 ஆண்டுகாலமாக சம்மாந்துறையின் அரசியல்வாதிகளினாலும், பிரமுகர்களினாலும் சாதிக்க முடியாமல்போன கைங்கரியத்தினை முடிவுக்கு கொண்டுவரும் வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட காணி உரிமையாளர்கள் சந்தை நிலத்திலிருந்து தாமாகவே வெளியேறலாயினர். இதனையடுத்து தனியாருக்கு சொந்தமாக இருந்த இடத்திலிருந்த கடைகளும் வீடுகளும் அங்கிருந்து அகற்றப்பட்டதோடு நவீன சந்தையை கட்டுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாயின. இதன் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்துவைப்பதற்கு அப்போதைய அமைச்சரவையின் உறுப்பினர்களான றவூப் ஹக்கீம், மிலிந்த மொறொகொட, எம்.எம் ம.்.றூப் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கௌரவ பாராளமன்ற உறுப்பினரும் நீர்பாசனத்துறை அமைச்சருமான எம்.ஐ. அன்வர் இஸ்மாயில். அவர்களின் அயராத உழைப்பினாலும், தீர்கதரிசனமான நடவடிக்கையினாலும் இன்று இப்பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன. அவ்வேகத்தின் அசமந்தம் காரணமாக பலரது எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாது '100 நாள்' என்ற காலெக்கெடுவில் பல கோடி ரூபா செலவில் நவீன பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதி பூரணத்துவம் பெற்று இன்று திறப்பு விழாக்காணும் பேறுபெற்றுள்ளது. வட - கிழக்கு மாகாணத்தில இதுவரையில் இதனைப் போன்றதொரு சந்தைத் தொகுதி வேறு எங்குமே கட்டப்படவில்லை. சகல வசதிகளையும் கொண்ட இந்த நவீன பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதி ஹிஜ்றா சந்தியின் அழகுக்கு மேலும் அழகூட்டிக் கொண்டிருக்கின்றது.

இதனோடிணைந்துள்ள 'ஹிஜ்றா ஜும்ஆ' பள்ளிவாசலும் அமைச்சர் அவர்களின் முயற்ச்சியினாலும் மெருகூட்டப்பட்டு அழகிய மின் அலங்காரங்களுடன், இஸ்லாமிய கலையம்சத்துடனும் பொதுப் பொலிவுடன் அழகாகக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சியளிக்கின்றது. இதற்கு இணையாக நவீன பொதுச் சந்தையும், இஸ்லாமிய கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும்வகையில் கலையம்சத்துடன் வடிவமைக்கப்பட்டு காட்சியளிக்கின்றது. ஹிஜ்றா நவீன பொதுச் சந்தையின் சிறப்பம்சங்களில் ஒன்றாக மேல்மாடியில் அம்பாரை - மல்கன்பிட்டி வீதிகள் மூலையில் அழகான திறந்தவெளி மேடையொன்றும அமைக்கப்பட்டுள்ளமை யாகும். இந்த மேடையை பிரதேச சபையின் அனுமதியுடன் எவரும் பொதுக் கூட்டங்களுக்குப் பயன்படுத்தலாம். இது இலங்கையில் வேறு எங்குமே காணமுடியாத ஒரு புது அம்சமாகும். இவை அத்தனையையும் பார்கின்ற மக்கள் தலைவர் அஷ்ர.ஃப் அவர்களின் கனவுகளை அவரது சிஷ்யன் அன்வர் இஸ்மாயில் நிறைவேற்றுவதாகவே கூறுகின்றனர்.அஷ்ர.ஃபின் அழகியல் உணர்ச்சியை இவரிடம் காணமுடிகின்றது. ஒரு நாள் இரவு விடிவதற்குள் பொதுச் சந்தையின் அழகிய பூந்தோட்டம் அமைக்கப்பட்டு சம்மாந்துறையின் ஹிஜ்றாச்சாலைக்குள் புகுவது புதுப் பெருமையைத் தருகிறது.

சம்மாந்துறை ஹிஜ்றா சந்தைக் கட்டிடத்திற்கான அடிக்கல் கௌரவ பிரதம மந்திரி தஹநாயக்க அவர்களினால் மேற்கொள்ளப்பட்டு அது எமது காலத்தின் இளைய தலைவர் நமது மண்ணின் மைந்தன் நாம் எல்லோரும் உரிமைகொண்டாடும் இளைஞன் அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களால் பூர்த்திசெய்யப்பட்டது ஒரு பெரும் வரலாறே. பலரும் தொட்டுத் தொட்டு இறுதியில் அன்வர் இஸ்மாயில் இக்கட்டிடத்தை பூர்த்திசெய்தார் என்பது இதனில் உள்ள முக்கியத்துவமல்ல. பலராலும் தொடக்கப்பட்டாலும் சந்தைக் கட்டிடத்தின் முக்கிய பகுதியில் உள்ள மக்களை குடியெழுப்பி அதனை சாதிக்க முடியாமல்போன ஆளுமையுள்ள தலைமைத்துவங்களையெல்லாம் மீறி நாம் பார்க்க வளர்ந்து நமக்குத் தலைமை தாங்கும் இளைஞன் தனது சாணக்கியத்தினால் அப்பிரதேச மக்களோடு பேசி அவர்களோடு உடன்பாடு கண்டு 100 நாட்களுக்குள் சந்தைக் கட்டிடத்தை முழுமையாகப் பூர்த்திசெய்து தமது கலை கலாசார நுட்பங்களுடன் அழகுபடுத்தி பூந்தோட்டமாக்கி பூர்த்திசெய்திருப்பதுதான் இதனில் உள்ள ரகசியமும் வெற்றியுமாகும்.

இதனாலே இச்சந்தைக் கட்டிடத் தொகுதி மாத்திரமின்றி சம்மாந்துறைப் பிரதேச அபிவிருத்தியில் என்றுமில்லாதவாறு புரட்சிகரமான வேகத்தில் குறுகிய காலத்தில் தன்னை அர்ப்பணித்து சேவைபுரிந்து வரும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும் நீர்பாசனத்துறை அமைச்சருமான எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களை சம்மாந்துறைப் பொது மக்கள் நன்றியுடன் வாழ்த்துகிறார்கள். மேலும் அன்றுமுதல் இன்றுவரை பொதுச் சந்தை அமைக்கும் விடயத்தில் முயற்சிசெய்த அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், அரசாங்க அதிபர்கள், பிரதேச பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், உத்தியோக த்தர்கள், நலன்விரும்பிகள், சமாதானத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய காணி உரிமையாளர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியறிதலை தெரிவிக்கின் றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்மாந்துறை சமய சமூக கலாசார அபிவிருத்தியும் அன்வர் இஸ்மாயிலும்

அல்ஹாஜ், மௌலவி
யூ.எல். ம.்.றூப் (மதனி, பீ.ஏ)
ஆசிரியர்,

சம்மாந்துறையில் 2006 ம் ஆண்டிற்கான தேசிய மீலாத் விழா கொண்டாடுவதற்காக எடுக்கப்பட்ட தீர்மானம் அமைச்சர் அன்வர் இஸ்மாயிலின் அரசியல் வரலாற்றில் மிக முக்கியமானதாகும். அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களோடு கொண்டிருந்த நெருக்கமான உறவின் காரணமாக அவர்களது காலத்தில் முதல் மீலாத் விழா சம்மாந்துறையில் ஒழுங்குபடுத்தப்பட்டது. இதன்போது முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்கள பணிப்பாளர் அஷ்ஷேக் எம்.ஐ. அமீர் அவர்கள் அமைச்சருக்கு பெரிதும் உதவியாக இருந்தார். இதன் ஊடாக அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் நீண்டகாலமாக தூண்டிவிடப்படாதிருந்த சம்மாந்துறையின் வரலாற்றை எழுதும் பணியினை நம்பிக்கையாளர் சபைத் தலைவர் அல்ஹாஜ் மௌலவி, ஏ.சி.ஏ.எம். புகாரி அவர்களோடு இணைந்து மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். மேலும் பல்வேறு சமய கலாசார பணிகளையும் இதனூடாக அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் மேற்கொண்டு வருகின்றார்.

பள்ளிவாசல்களை அரச பணத்தினூடாக அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சர் அன்வர் இஸ்மாயில் பெரிதும் முயற்சித்தார். அந்தவகையில் பிரதியமைச்சராக இருந்த காலத்திலிருந்து இன்றுவரை பெரிதும் பணியாற்றி வருகின்றார். இந்தவகையில் ஹிஜ்றா ஜும்ஆப் பள்ளிவாசல் நுழைவாயில், அலங்கார வழி, அலங்கார மதில் முதலியன 3.5 மில்லியன் ரூபா செலவிலே மேற்கொள்ளப்பட்டது. இதேபோன்று தேசிய மீலாத் விழா நிதி ஒதுக்கீட்டின் மூலமும், முன்னைய கிழக்கு அபிவிருத்தி அமைச்சின் மூலமும் பல்வேறு பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. இந்தவகையில் இலங்கையில் எங்கும் இல்லாத வகையிலே சம்மாந்துறையில் உலமாக்களுக்கான தலைமைக் காரியாலயம் அமைக்கின்ற பணி 300 மில்லியன் ரூபாவில் ஆரம்பிக்கப்பட்டு அதன் ஒரு தளத்திற்கான வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. ஊரின் முகப்பில் அமைந்துள்ள இக்கட்டிடம் சம்மாந்துறைக்கு கட்டியம் கூறுவதாக மாத்திரமன்றி அன்வர் இஸ்மாயிலின் பெயரையும் ஞாபகப்படுத்தக்கூடியதாக உள்ளது. சம்மாந்து றையின் பழைய பள்ளிவாசல்களும் புதிய பள்ளிவாசல்களும் தேசிய மீலாத் விழாவின் மூலம் புது மெருகு பெற்றுவருகிறது. மஸ்ஜிதுல் உம்மா - புதுப்பள்ளிக்கான நுழைவாயில் ஒரு மில்லியன் ரூபா செலவிலும் இரண்டு மில்லியன் ரூபா செலவில் தைக்காப்பள்ளி கட்டிட புனர் நிர்மாணப் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரிக்கு 2.2 மில்லியன் ரூபா (கிழக்கு அபிவிருத்தி) ஒதுக்கப்பட்டு ஒரு கட்ட வேலைகள் நிறைவடைந்துள்ளது. மேலும் மஸ்ஜிதுல் ஸலாமுக்கு 1.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஸ்ஜிதுல் அழ்பர்- சம்புமடு ஜும்ஆப் பள்ளி, மஸ்ஜிதுல் ஜாரியா -கைகாட்டியடி ஜும்ஆப் பள்ளி, மஸ்ஜிதுல் ஹிலால் - பல்கலைக்கழக ஜும்ஆப் பள்ளி முதலியன தலா 5 இலட்சம் ரூபாய்க்களைப்பெற்று நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மஸ்ஜிதுல் பிர்தவ்ஸ் 7 இலட்ச்சம், மஸ்ஜிதுல் மபாஸா 5 இலட்ச்சம் பெற்று வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதேபோல மஸ்ஜிதுல் ஜமாலியா, ஜலாலியா, இலாஹிய்யா, மிஸ்பாஹ் முதலான பள்ளிவாசல்களுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும் மத்ரசதுல் இஸ்லாமிய்யா, இஹ்சான் பவுண்டேசன்,உஸ்வா,தாறுல் ஹசனாத் அல்குர்ஆன் மனனக் கலாசாலை, ஆயிஷா பெண்கள் மனனக் கல்லூரி ஆகியனவும் பணம் வழங்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

சம்மாந்துறையின் கலாசார சீர்திருத்தத்திலே புராதன பிரதேசமான மல்கம்பிட்டி பள்ளிவாசல் புனருத்தாரண அபிவிருத்தி குறிப்பிடத்தக்கது. இதனடிப்படையில் மல்கம்பிட்டி பள்ளிவாசலுக்கான நுழைவாயில் வேலைகளை பிரதியமைச்சராக இருந்தபோது அன்வர் இஸ்மாயில் தனக்கும் முன்னாள் பொதுவசதிகள் அமைச்சர் மஹ்றூப் அவர்களுக்கும் உள்ள தனிப்பட்ட உறவின் காரணமாக அமைச்சர் அவர்களது தனது சொந்த செலவிலே நிறைவேற்றிக் கொடுத்தார். மல்கம்பிட்டி பள்ளிவாசலுக்கு இலங்கை மின்சார சபையின் மூலம் குடியிருப்புக்கள் இன்மையால் மின்சாரம் வழங்க முடியாத சூழ்நிலை இருந்த போது சூரிய சக்தியினாலான மின்சாரத்தினை அப்பள்ளிவா சலுக்கு அமைச்சர் அன்வர் இஸ்மாயில் வழங்கினார்.

சம்மாந்துறையின் சமய சமூக கலாசார அபிவிருத்தி வரலாற்றில் முக்கிய மைக்கல்லாக அமையப்போவது புனித பிரதேசமாகும். சம்மாந்துறை பெரிய பள்ளிவாசல் அமைந்துள்ள பிரதேசத்தைச் சூழவுள்ள சின்னப்பள்ளி வாசல், தாறுல் ஹசனாத், தப்லீகுல் இஸ்லாம், கங்கத்தியப்பா பள்ளி, அல்மத்ரசதுல் இஸ்லாமிய்யா முதலானவை புனித பிரதேசத்தை உள்ளடக்கு கிறது. உண்மையில் அமைச்சர் அன்வர் இஸ்மாயிலின் தூரதிஸ்டியான இவ்வெண்ணம் மிகவும் வியந்து போற்றத்தக்கதாகும். இதனடிப்படையில் இப்பிரதேசப் பள்ளிவாசல்களையும் சுற்றாடலையும் நிாவகிப்பதற்கு போதுமான பணத்தினை வருடாந்தம் பெறக்கூடியதாக இருக்கும். அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் பிரதியமைச்சராக இருந்த காலத்திலிருந்து பிரேரிக்கப்பட்ட இவ்விடயம் பெரும்பான்மை கழுகுக் கண்களால் பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு உட்பட்டு இன்று மேன்மைதங்கிய அதிஉத்தம ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் விருப்புடன் நிறைவேற்றக்கூடியதாக உள்ளது குறிப்பிடத்தக்கதாகும். எனவே அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் காலம் சமூக சமய கலாசார உயர்வுக்கு பெரும் முக்கியத்துவமளிக்கின்ற காலப்பகுதியாக உள்ளது மனமகிழ்ச்சி தருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தியும் அன்வர் இஸ்மாயிலும்

ஏ.எம். நௌபீஸ் M.Sc
உதவி நூலகர்,
தென் கிழக்குப் பல்கலைக்கழகம்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உருவாக்கப்படுகின்ற அமைச்சரவைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோடு, தலைவர் எம்.எச்.எம். அஷ்ர∴ப் அவர்கள் தனது இணைப்பாளராக அன்வர் இஸ்மாயில் அவர்களிடம், ''இன்று அமைச்சரவையில் முக்கிய தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இது பற்றி நான் பத்திரிகையாளர்களோடு கதைக்க வேண்டும். இதற்காக ஒரு பத்திரிகையாளர் மாநாட்டை ஒழுங்கு செய்யுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார். அன்றிலிருந்து அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்குமான தொடர்பு ஆரம்பமாகின்றது.

இப்பல்கலைக்கழகத்திற்கான உபவேந்தர் ஒருவர் தீர்மானிக்கப்பட்ட வுடன் அதற்கான பதிவாளராக ஏ.எல். ஜ∴பர் சாதிக் அவர்களை தீர்மானித்துக் கொண்டு அவரை நேரடியாகச் சென்று அழைத்து வருமாறும் தலைவர் அஷ்ர∴ப் அவர்கள் தனது இணைப்பாளரையே பணித்தார். இவ்வாறு இப்பல்கலைக்கழகத்தின் ஆரம்ப கட்டப் பணிகளிலே தலைவர் அஷ்ர∴ப் அவர்களுக்கும் அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கும் ஒரு நெருக்கமான உறவு இருந்து வந்தது. இதனால் என்னவோ தலைவர் அஷ்ர∴ப் அவர்களு டைய மறைவுக்குப் பின்னர் இன்று இப்பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திலேயே போதியளவு அக்கறை உள்ளவராக அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களையே இனம் காணவேண்டியுள்ளது.

தலைவர் அஷ்ர∴ப் அவர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்கு ழுவுடன் சேர்ந்து அவ்வாணைக்குழு மூலம் அனுமதியை பெற்று தன்னுடைய அமைச்சின் மூலமே தென்கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தியினை செயற்படுத்தி வந்தார். இந்த வகையில் அவருக்கு அவர் பதவி வகித்த புனர்வாழ்வு அமைச்சு பெரிதும் உதவியாக இருந்தது. தலைவர் அஷ்ர∴ப் அவர்கள் தனது அமைச்சின் பெரும்பாலான நிதியின் மூலமாக பல்கலைக்கழக கட்டிட பணிகளையும், ஏனைய வாகனத் தேவைகளையும் நிறைவேற்றி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார். அவரது மறைவுக்குப் பின்னர் இப்பல்கலைக் கழகத்தின் அபிவிருத்தியில் பாரிய வெற்றிடம் ஏற்பட்டது. இப்பல்கலைக்கழகத்தை தொடர்ந்து கொண்டு செல்ல முடியுமோ என்று பலரும் ஐயம் தெரிவித்தனர்.

இருப்பினும் இப்பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்கினாலும் அபிவிருத்தியை இங்கு காணமுடியாமலேயே இருந்தது. ஐ.தே.மு. அரசாங்கம் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினை அஷ்ர.்.பின் அரசியல் பிரச்சார நிலையமாகவே நோக்கியது. அவ்வமைச்சரவையில் மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சராக இருந்த கபீர் ஹாசிம் அவர்களை அடிக்கடி சந்தித்து கதைத்தும் இப்பல்கலைக்கழகத்திற்கு அழைத்து வந்தும் இப்பல்கலைக்கழக வளர்ச்சியில் அக்கறை செலுத்தமாறு அன்வர் இஸ்மாயில் அவர்கள் வற்புறுத்தியே வந்தார். இப்பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் நீங்கள் அக்கறை செலுத்தினால் இப்பல்கலைக்கழக மாணவர்கள் மாத்திரமே உங்களுக்காக பிராத்தனை செய்வர் என்றும் குறிப்பிட்டார். இப்பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி தொடர்பாக அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களையும் அடிக்கடி சந்தித்து கதைத்து வந்தார். ஆனால் எதுவுமே நடைபெறவில்லை. இறுதியாக ஐக்கிய தேசிய முன்னணி அரசிற்கும் அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கும் முரண்பாடு வருவதற்கும் இப்பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தியில் அவ்வரசு காட்டிய அசமந்தப் போக்கும் அலட்சியமும் ஒரு காரணமாகும்.

பின்னர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் தனது தனிப்பட்ட முயற்சியின் காரணமாக உலக வங்கியின் தலைவர் திரு. பீற்றர் ஹெரல்ட் அவர்களை இப்பல்கலைக்கழகத்திற்கு அழைத்து வந்து இங்குள்ள தேவைகளை விளக்கினார். இதன் காரணமாக இப்பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீட உள்ளக அபிவிருத்திகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அதனோடு அன்வர் இஸ்மாயில் அவர்கள் கிழக்கு உட்கட்டமைப்பு பிரதியமைச்சர் ஆனதுடன் உயர் கல்வி அமைச்சருடன் உரையாடி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் இப்பல்கலைக்கழகத்திற்கான போதியளவு நிதியினை பெறுவதில் அக்கறை காட்டி வந்தார். முன்னாள் அமைச்சர் றவூப் ஹக்கீம் மூலம் களியோடை எல்லையில் அணைக்கட்டொன்றினை நிர்மாணிப்பதற்காக ஐ.தே.மு. அரசின் காலத்தில் 2 மில்லியன் ரூபா மாத்திரம் பெறப்பட்டது. அதன் மீதிப்பணமான 4.7 மில்லியன் ரூபா கூட கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் மூலமே பின்னர் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

தென்கிழக்குப்பல்கலைக்கழகத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்களும் தலைவர் அஷ்ர.்.ப் அவர்களுடைய காலத்திலேயே அவருடைய அமைச்சின் மூலமே வழங்கப்பட்டன. பலதடவை கோரிக்கை விடுத்தும் பின்னர் ஒரு வாகனத்தைக் கூட இப்பல்கலைக்கழகத்திற்காக பெறமுடியாதிருந்தது. அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் இந்தியத் தூதரகத்தோடு பேசி

இப்பல்கலைக்கழகத்திற்காக ஒரு மோட்டார் காரினை அண்மையில் பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கதாகும். தலைவர் அஷ்ர.்.ப் அவர்களுடைய மரணத்திற்கு பின்னர் முதன்முதலில் அமைச்சர் அன்வர் இஸ்மாயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் தனிப்பட்ட முயற்சியின் காரணமாக இவ்வுதவி தென்கிழக்குப்பல்கலைக்கழகத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது. இது மாத்திரமன்றி இப்பல்கலைக்கழகத்தினை இந்தியப் பல்கலைக்கழகங்களோடு இணைப்பதற்கான முயற்சியிணையும் அவர் மேற்கொண்டு வருகின்றார். அந்த வகையிலே இப்பல்கலைக்கழகத்திலிருந்து அரசியல் துறை விரிவுரையாளர் ஒருவர் இந்தியாவின் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழ கத்திற்கு சென்று வந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் இதனடிப்படையில் விஞ்ஞான, வர்த்தக, முகாமைத்துவ, கலை, கலாசார பீடங்களைச் சேர்ந்த விரிவுரையாளர் குழுவினை இந்தியப் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பும் உடன்பாடு காணப்பட்டுள்ளது. அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் வேண்டுகோளின் பேரில் தென்கிழக்குப்பல்கலைக்கழகத்தில் விவசாய பீடத்தை நிறுவுவதற்கான பணியினை மேலும் அவசரப்படுத்த முன்னாள் ஜனாதிபதியும் இணங்கியிருந்தார். இது தொடர்பாக தஞ்சாவூர் விவசாய பல்கலைக்கழக த்திற்கு தென்கிழக்குப்பல்கலைக்கழக உபவேந்தரும் விஜயம் செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை இந்திய நற்புறவு அமைப்பின் மூலம் அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் பல்வேறு உதவிகளை தென் கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு வழங்குவதற்கான ஆவணங்களை செய்துள்ளார். இதன் இன்னொரு கட்டமாகவே பல்கலைக் கழக உபவேந்தர் ஏ.ஜீ. ஹுஸைன் இஸ்மாயில் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பெருந்தொகையான நூல்களும் இவ்வமையத்தின் மூலம் கிடைக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தென்கிழக்குப் பல்கலைக்கழக அறபு இஸ்லாமிய கற்கை பீடத்தினை உருவாக்குவதற்கான கோரிக்கையினை முன்னாள் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்த அமைச்சர் அவர்கள் அந்த முயற்சியிலேயே முழுமையாக வெற்றி கண்டுள்ளார். 2006ம் ஆண்டிலிருந்து இப்பீடத்திற்கான மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர். இந்த விடயங்கள் எல்லாம் தலைவர் அஷ்ர.்.ப் அவர்களின் கனவுகளாகும். இதனை அமைச்சர் அவர்கள் நன்கு உணர்ந்து செயற்படுத்தி வருகின்றார்.

தலைவர் அஷ்ர.்.ப் அவர்களுக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமரதுங்க அவர்களுக்கும் உள்ள தனிப்பட்ட புரிந்துணர்வு காரணமாகவே இப்பல்கலைக்கழகம் ஒரு மின்னல் போல தோன்றியது. இப்பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் ஆயிரக்கணக்கில் பட்டம் பெற்று வெளியாகவேண்டும். இங்கு பல பீடங்கள் உருவாக வேண்டும். இதன் முதலாவது பட்டமளிப்பு

விழாவில் ஜனாதிபதி பிரதம அதீதியாக கலந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணங்கள் எல்லாம் தலைவர் அஷ்ர.்.ப் அவர்களுக்கு இருந்தது. ஆனால் அந்த எண்ணெங்களெல்லாம் நிறைவேறுவதற்கு முன்னமே தலைவர் அஷ்ர.்.ப் அவர்களின் மரணம் நிறைவேறி விட்டது. இதனையும் உணர்ந்த அன்வர் இஸ்மாயில் அவர்கள் இப்பல்கலைக்கழகத்தின் மூன்றாவது பட்டமளிப்பு விழாவுக்கு பிரதம அதிதியாக முன்னாள் ஜனாதிபதியை அழைத்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை நிறைவேற்றியதன் மூலம் தலைவர் அஷ்ரஃப் அவர்களின் எண்ணத்தினை நிறைவேற்றியுள்ளார். இதன் மூலம் இப்பல்கலைக்கழ கத்திற்கும் மாணவர்களுக்கும் கௌரவத்தினையும், பெருமையினையும், தேடிக்கொடுத்துள்ளார்.

இவ்வாறு தென்கிழக்குப்பல்கலைக்கழகம் பற்றி தலைவர் அஷ்ரஃப் அவர்களுக்கு இருந்த கனவுகளை எல்லாம் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் தனது அரசியல் வாழ்வு காலத்தில் நிறைவேற்ற வேண்டுமென்ற அவாவுடன் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கின்றார். தலைவர் அஷ்ரஃப் அவர்களுக்கு பின் தடைப்பட்டிருந்த தென்கிழக்குப்பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தியினை அவர் தொடக்கி வைத்திருக்கின்றார். இந்த விடயத்தினை தென்கிழக்குப்பபல்கலைக்கழகத்தின் ஸ்தாபகர் எம்.எச்.எம். அஷ்ரஃபின் பிறந்த தினத்தினையொட்டி நடைபெற்ற வைபவம் ஒன்றிலே அப்பல்கலைக்கழக உபவேந்தர் ஏ.ஜீ. ஹுசைன் இஸ்மாயில் பின்வருமாறு வெளிப்படுத்தினார். ''தென்கிழக்குப்பல்கலைக்கழக அபிவிருத்தியில் மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களுக்குப் பின்னர் அதிகம் அக்கறை காட்டும் அரசியல்வாதியாக பிரதியமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் இனங்காணப்பட்டுள்ளார். அவரது முயற்சியினால் அறபு இஸ்லாமிய கற்கை நெறிப்பீடம், விவசாய விஞ்ஞான பீடம் என்பன ஆரம்பிக்கப்படவுள்ளன. (தினகரன்:10.11.2004)''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்மாந்துறையில் பாடசாலைகள் அபிவிருத்தியும் அன்வர் இஸ்மாயிலும்

**M.H.அஸீஸ் மெய்டீன்**
**பிரதிக் கல்விப்பணிப்பாளர்**

அரசியலில் கடந்த 45 வருடங்களாக தொடர்ச்சியாக பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை தக்கவைத்துள்ளது என்ற வகையில் சம்மாந்துறை வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகிறது.

1960 ஆம் ஆண்டு முதல் 1994 ஆம் ஆண்டு வரை முன்னாள் அமைச்சர் ஜனாப் எம்.ஏ.அப்துல் மஜீட் அவர்களும் 1994 முதல் 2001 வரை முன்னாள் பிரதி அமைச்சர் மர்ஹூம் யூ.எல்.எம். மொஹிடீன் அவர்களும் 2001 முதல் இன்று வரை இந்நாள் அமைச்சர் சட்டத்தரணி அன்வர் இஸ்மாயில் அவர்களும் சம்மாந்துறையை பிரதிநிதித்துவப் படுத்தியுள்ளார்கள். சம்மாந்துறையின் கல்வி வரலாற்றை நோக்குகின்ற போது இவர்கள் அனைவரும் சம்மாந்துறையின் கல்வி வளர்ச்சிக்கு தமது பங்களிப்பை செய்து வந்துள்ளமை அறியக் கூடியதாயுள்ளது.

தற்போது சம்மாந்துறை மக்களைப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்து வப்படுத்துகின்ற வயதில் இளையவரும் சட்டத்தரணியும், நீர்ப்பாசன அமைச்சருமான அன்வர் இஸ்மாயில் அவர்கள் மக்கள் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டதிலிருந்து இன்று வரை கல்வித்துறையில் மேற்கொள்ள ப்பட்ட அபிவிருத்தி பணிகளை தனியாக நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இக்குறுகிய காலத்தினுள் கல்வித்துறையில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளை நோக்கின்ற போது கடந்த ஐந்து தசாப்தங்களில் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் செய்யப்பட்ட அபிவிருத்தி பணிகளை விட ஒப்பீட்டு ரீதியில் பன்மடங்கு அதிகமானது என்பது வெள்ளிடை மலை.

இக்காலப்பகுதியினுள் கல்வித்துறை அபிவிருத்திக்காக மாத்திரம் செலவிட்டது 40 மில்லியன் (4கோடி) ரூபாவுக்கும் அதிகமானதாகும். பல்வேறு நிதி மூலங்களிலிருந்து இந்நிதியைப் பெற்று இன,மத,பிரதேச வேறுபாடுகளின்றி சகல பாடசாலைகளையும் அபிவிருத்தி செய்வதில் தன்னை முழுமையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்பணித்து சேவையாற்றியுள்ளமை நண்கு உணர முடிகிறது. கடந்த 10-15 வருடங்களுக்கும் மேலாக எவ்வித அபிவிருத்தியை காணாத பல பாடசாலைகள் இக்காலப் பகுதியினுள் பல்வேறு வழிகளில் அபிவிருத்தி அடைந்துள்ளன. பின் தங்கிய கிராமங்களில் தற்காலிக கொட்டில்களில் சொல்லொனாத் துயரங்களுக்கு மத்தியில் கல்வி கற்றுக் கொண்டிருந்த பாமர மக்களின் குழந்தைகள் இன்று நகர்ப்புறங்களில் உள்ள முன்னிலைப் பாடசாலைகளில் உள்ளது போன்ற மாடிக் கட்டிடங்களில் மகிழ்ச்சிகரமான கற்றல் சூழ்நிலைகளில் தமது கல்வியைத் தொடருகின்ற பாக்கியத்தைப் பெற்றுள்ளனர். ஒவ்வொரு பாடசாலையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகளை சற்று விரிவாக நோக்குவது பயனுள்ளதாயிருக்கும் என்று நம்புகிறோம்.

## தேசிய பாடசாலை மற்றும் நகர்ப்புறப் பாடசாலைகளின் அபிவிருத்தி:

சம்மாந்துறைக்குப் பெருமை சேர்க்கின்ற அடையாளங்களில் ஒன்று சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் ஆகும். எமது ஊரின் கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்கினை வகிக்கின்ற இப்பாடசாலை இங்குள்ள ஒரேயொரு தேசிய பாடசாலையாகும். இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும், மாணவர் தொகை அதிகரிப்புக்கும் ஈடு கொடுக்கக்கூடிய வகையில் இங்குள்ள வளங்கள் இல்லாதிருந்தமை பெருங்குறையாகும். 50 வருடங்கள் கடந்து பொன் விழாக் கண்ட இப்பாடசாலையின் நிருவாககூடம், ஒன்று கூடல் மண்டபம், மற்றும் பௌதீக வளங்கள் என்பன ஒரு தேசிய பாடசாலையின் தரத்திற்கு அமைந்திருக்கவில்லை. கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக புதிய கட்டிடங்கள் அமைக்கப்படவில்லை.

இப்பாடசாலையின் பழைய மாணவர் என்று தன்னை அடையாளப்படுத்துவதில் எப்போதும் பெருமையும் மனநிறைவும் அடையும் அமைச்சர் கௌரவ அன்வர் இஸ்மாயில் அவர்கள் இப் பாடசாலையின் நிலையை உயர்த்துவது தனது தலையாய கடமை என்பதை உணர்ந்து பல அபிவிருத்திப் பணிகளை இங்கு முன்னெடுத்துச் செல்கின்றார். இக்காலப்பகுதி இக்கல்லூரியின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் எழுதப்பட வேண்டும். இங்கு அவரால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளாவன.

இரண்டு மாடிகளைக் கொண்ட நிர்வாக அலகு - 15 மில்லியன் ரூபா விவசாய விஞ்ஞான அலகு - 1.9 மில்லியன் ரூபா ஆராதனை மண்டபத்திற்கான பெருந்திருத்தம் - 1 மில்லியன் ரூபா கணணி கற்கை நிலையத்திற்கான திருத்தமும் கணணிகளும், அலங்கார நுழைவாயில், பாடசாலை உள்ளக வீதிகள், சுத்தமான குடிநீர் வசதிகள் இவற்றுக்கு மேலதிகமாக மூன்று மாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டிடம் முதலானவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் இப்பாடசாலைக்கு வாகனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இவை தவிர இவ்வருட கொடுப்பனவாக தேசிய பாடசாலைக்கு சகல வசதிகளும் கொண்ட நவீன அமைப்பிலான கேட்போர் கூடம் ஒன்று வழங்குவதற்கு கல்வி அமைச்சு மூலம் ஒழுங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டுள்ளது. இது இப்பாடசாலையின் வரலாற்றில் மிக முக்கியமான பங்களிப்பாக கருதப்படவேண்டியுள்ளது.

சம்மாந்துறை கல்வி வலயத்தில் இயங்குகின்ற ஒரேயொரு பெண்கள் கல்லூரி அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியாகும். இங்கு மாணவிகள் தங்கியிருந்து கற்பதற்கான விடுதியொன்றின் அவசியம் நீண்டகாலமாக வலியுறுத்தப்பட்டு வந்த போதிலும் அது கைகூடவில்லை. ஆரம்பத்திலிருந்து கலவன் பாடசாலையாக இயங்கி வந்த இப்பாடசாலையை முஸ்லிம் மாணவிகள் தமது சமய, சலாச்சார விழுமியங்களுடன் கல்வி கற்பதற்கான தனிப் பெண்கள் கல்லூரியாக மாற்ற வேண்டும் என்ற தாகத்துடன் அப்போதைய அரசியல் அதிகார சக்திகளின் எதிர்ப்புக்கு மத்தியில் போராடியவர்களில் முக்கிய பங்குவகித்த இன்றைய அமைச்சர் கௌரவ அன்வர் இஸ்மாயில் இங்கு விடுதியில்லாத பெருங்குறையை நீக்க முன்வந்தார். 6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் விடுதிக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இவ்விடுதி அமைக்கப்பட்ட பின் கரையோர மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பல முஸ்லிம் மாணவிகள் மற்றும் வெளியிடங்களிலுள்ள மாணவிகள் பயனடைவர். அத்துடன் பூர்த்தி செய்யப்படாமல் இருந்த 3 மாடிக்கட்டிடத்தில் இரண்டாம் கட்ட வேலைகளுக்கு ரூ.2 மில்லியன் நிதி ஒதுக்கி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மேலும் இரு மாடிக் கட்டிடம் ஒன்றும் அமைச்சரின் ஒதுக்கீட்டில் கட்டப்பட்டுள்ளது.

சம்மாந்துறை அல்முனீர் வித்தியாலயத்தில் மற்றுமொரு பிரபல பாடசாலையாகும். வகுப்பறை பற்றாக்குறை காரணமாக தற்காலிகக் கொட்டில்களிலும் மாணவ்கள் கற்க வேண்டிய பரிதாபகரமான நிலை இங்கும் நிலவியது. இந்நிலையை நிவர்த்தி செய்யும் பொருட்டு 4 மில்லியன் ரூபா செலவில் இரு மாடிக் கட்டிடம் ஒன்று அமைக்கப்படுகிறது. இதேபோன்று அல்மனார் வித்தியாலயத்தில் 3 மாடிக் கட்டிடத்தின் இரண்டாம் கட்ட வேலைகளுக்காக ரூ 2.7 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு பூர்த்தியடைந்துள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக அல் அமீர் வித்தியாலயத்தில் பூர்த்தி செய்யப்படாதிருந்த வகுப்பறைக் கட்டிடம் அமைச்சரின் அவர்களின் நிதியில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

**புளக் ஜே பிரதேசப் பாடசாலைகள் அபிவிருத்தி:**

சம்மாந்துறையில் மக்கள் செறிவு அதிகரித்துக் காணப்படும் புளக் ஜே கிழக்கு, புளக் ஜே மேற்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பல பாடசாலைகள் கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக எவ்வித அபிவிருத்தியையும் காணாது வரட்சியுடன் இயங்கி வந்தன. இப்பாடசாலைகள் இன்று இரு மாடிக் கட்டிடங்களுடன் கம்பீரமாகக் காட்சி தருகின்றன. இவற்றிக்கு காரணமாக இருந்த அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பிரதேசத்தில் அமைந்துள்ள தாறுஸ் ஸலாம் மகா வித்தியாலயத்தில் கிழக்கு மாகாணத்திலே எங்குமில்லாதவாறு ஒரு கோடி ரூபா செலவில் ஒன்றுகூடல் மண்டபம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பூர்த்தியடை யாமல் இருந்த 3 மாடிக் கட்டிடத்தின் இரண்டாம் கட்ட வேலைகள் 2.7 மில்லியன் ரூபா செலவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் கணணிக் கற்கை நிலையம் அமைக்கப்பட்டு கணணிகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் கணணி கற்கைக்கான வள நிலையம் ஒன்றும் இப்பாடசாலையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

புளக் ஜே மேற்கில் அமைந்துள்ள பிரபல பாடசாலையான அல் அர்ஷத் மகா வித்தியாலயத்தில் பிரதான தேவைகளாக இருந்த பல அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 6 மில்லியன் ரூபா செலவில் இரண்டு மாடிக் கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 6.2 மில்லியன் ரூபா செலவில் ஒன்றுகூடல் மண்டபமும் 3 மில்லியன் ரூபா செலவில் விளையாட்டரங்கும் ஏக காலத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இப்பிரதேச மக்களின் கல்வி, சலாசார, விளையாட்டுத்துறை வளர்சியில் இவை குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்யும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இவ்வாறே செந்நெல் கிராமத்தில் ஸாஹிறா வித்தியாலயம் பழைய கட்டிடங்களில் முன்னர் இயங்கிக் கொண்டிருந்தது. இக்கட்டிடங்கள் மாணவர் தொகைக்கு போதுமானதாக இருக்கவில்லை. அத்துடன் அங்கு புதிய கட்டிடங்கள், விளையாட்டு மைதானம், விஞ்ஞான கூடம் என்பன அமைப்பதற்குத் தேவையான காணியும் இருக்கவில்லை. இதையுணர்ந்த முன்னாள் பிரதி அமைச்சர் மர்ஹூம் யூ.எல்.எம். முகைதீன் அவர்கள் செந்நெல் கிராமத்தின் மத்தியிலே 5 ஏக்கர் அரச காணியொன்றில் இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் பழைய பாடசாலைக் கட்டிடத்தில் வைத்தியசாலை ஒன்று இயங்குவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். இதனால் அப்பிரதேச மக்கள் வைத்திய வசதிகளை தமது காலடியிலேயே பெற்று நன்மையடைந்தனர். சில பிற்போக்கு சக்திகள் இந்நடவடிக்கைகளை தமது சுயநல நோக்கத்திற்காக எதிர்த்தனர். இறுதியில் தோல்வியும் கண்டனர்.

அவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்ட பாடசாலை நிரந்தரக் கட்டிடங்கள் இன்றி தற்காலிக கொட்டில்களில் பல வருடங்கள் இயங்கி வந்தன. இதனையுணர்ந்த அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் 12 மில்லியன் ரூபா செலவில் ஒரே நேரத்தில் இரு மாடிக்கட்டிடங்கள் இரண்டு நிர்மாணிக்கப்படுவதற்கான அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டார். இன்று மாடிக் கட்டிடங்கள் இரண்டும் செந்நெல் கிராமத்திற்கு அழகு சேர்ப்பது போல் தலைநிமிர்ந்து நிற்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். மேலும் ஏற்கனவே பூர்த்தி செய்யப்படாதிருந்த வகுப்பறைக் கட்டிடம் ஒன்றைப் பூர்த்தி செய்வதற்கான நிதி ஒதுக்கியதுடன், சுற்று மதில், மின்சார இணைப்பு ஆகியனவும் 6 இலட்சம் ரூபா செலவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

சம்மாந்துறையின் கைகாட்டியில் அமைந்திருக்கின்ற அல்-அஸ்ஹர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமைச்சர் நிமல் சிரிபால, பேரியல் அஷ்ரஃப்புடன் அமைச்சர்




அமைச்சர் அதாவுல்லாவுடன்




நெல் கொள்வனவு பிரச்சினை தொடர்பாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோ பிள்ளையுடன் அமைச்சர்



அமைச்சர் மிலிந்த மொறகொடவுடன்



சம்மாந்துறை அறுவடை விழாவின் போது



சம்புமடு குடி நீர் திட்ட அங்குரார்ப்பண விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜப்பான் துறைமுக அபிவிருத்தி
இணைப்பாளருடன் அன்வர் இஸ்மாயில்




ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தில்




லண்டன் தீபம் தொலைக்காட்சியில்
முஸ்லிம்ங்களின் பிரச்சினைகளை
வெளிப்படுத்தியபோது



சரித்திரமுக்கியத்துவம் வாய்ந்த அரசியல்
முடிவொன்றினை எடுக்க ஆதரவாளர்களுடன்
உரையாடிய போது




ஜனாதிபதி தேர்தல் இறுதி கட்ட பிரசாரத்தின்
போது




தீபம் தொலைக்காட்சியில் தென்கிழக்கு
பல்கலைக்கழக ஒலுவில் பிரகடனம் பற்றி
குறிப்பிடுகிற போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்திய முன்னாள் தூதுவர் நிருபம் ராவ்உடன்



உலக வங்கியின் இலங்கைப் பிரதிநிதி
தென்கிழக்கு பல்கலைகழக முதல் உப வேந்தர்
எம்.எல்.ஏ. காதர் ஆகியோருடன்




இந்தியத் தூதுவர்,
உபவேந்தர் (தென்கிழக்கு பல்கலைகழகம்)
ஆகியோருடன் அமைச்சர்



இத்தாலிய தூதுவருடன் அமைச்சர்



ஒஸ்ரியாவில் இலங்கை குழுவினருடன் அமைச்சர்



ஐக்கிய அரபு ராச்சியத்தூதுவருடன் அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதி சலாசார விளையாட்டுத்தொகுதி ஒன்று கூடல் மண்டபம்



உள்ளக விளையாட்டரங்கு



விளையாட்டுத் தொகுதியில் அமைந்துள்ள நீச்சல் தடாகம்



அல் அர்ஸத் வித்தியாலய பார்வையாளர் அரங்கு



அல்அர்ஸத் வித்தியாலய ஆராதனை மண்டபம்




வங்களாவடி பிரதேசத்துக்கான நுழைவாயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்ப்பாசன வைபவம் ஒன்றில் மரக்கன்று நடும் போது



பூர்த்தி செய்யப்பட்ட வீரையடி அணைக்கட்டு



பூர்த்தி செய்யப்பட்ட வீரையடி அணைக்கட்டு



சம்மாந்துறை நெய்னாகாடு - குடவில் பாலம்



நெய்னகாடு பாலம்



இறக்காமத்தோடு இணைக்கும் நெய்னாகாட்டு பாலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்மாந்துறையில் ஜனாதிபதி கலாசார மற்றும் விளையாட்டுத் துறைக்கான நிலையமும் அன்வர் இஸ்மாயிலும்

சீ.எம். தௌபீக்
உடற்கல்வி விரிவுரையாளர்
தர்கா நகர் தேசிய கல்வியல் கல்லூரி,
தர்காநகர

இலங்கை திருநாட்டில் கிழக்கு மாகாணத்தில் பல்வேறு வழிகளிலும், மூவின மக்களும் ஒற்றுமையாகவும் நட்புறவுடனும் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற மாவட்டமாக அம்பாரை மாவட்டம் திகழ்கின்றது. இம்மாவட்டத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒன்றுசேர்ந்து வாழ்கின்றனர்.

அம்பாரை மாவட்டத்தின் பிரதேசங்களான பொத்துவில், அக்கரைப் பற்று, அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை, நிந்தவூர், காரைதீவு, மாளிகைக்காடு, சாய்ந்தமருது, கல்முனைக்குடி, கல்முனை, பாண்டிருப்பு, மருதமுனை, அண்ணமலை, நாவிதன்வெளி, வீரத்திடல், இறக்காமம், வரிப்பத்தாஞ்சேனை, சென்றல்கேம், வீரமுனை, சம்மாந்துறை, மல்வத்தை, மாவடிப்பள்ளி, மல்லிகைத்தீவு, அம்பாறை போன்ற பிரதேசங்களில் வாழ்கின்ற எதிர்கால இளைஞர்களின் விளையாட்டுத்துறையை விருத்திசெய்து அதன் அடைவுகளை சர்வதேச மட்டத்திற்கு உயர்த்த வேண்டும் என்ற தூரநோக் கோடு எமது மண்ணின் மைந்தன் இளைய தலைமுறையினரின் நம்பிக்கை நட்சத்திரம் அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் ஜனாதிபதி கலாசார மற்றும் விளையாட்டுத் துறைக்கான நிலையங்களை (ஜனாதிபதி சில்பகலா சாலிகா) நிர்மாணித்துள்ளார்.

இலங்கை திருநாட்டின் முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்க அவர்கள் நமது இளைய தலைவர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் வேண்டுகோளை மிகுந்த சிரத்தையுடன் ஏற்றுக்கொண்டு நமது பிரதேச இளைஞர், யுவதிகளின் கலை, கலாசார, விளையாட்டுத்துறை சார்ந்த திறமைகளை விருத்தி செய்வதற்குரிய வசதிகளை இப்பணியினை நிறைவேற்றுவதன் மூலம் ஏற்படுத்தியுள்ளார். இந்நிலையம் சம்மாந்துறையில் உள்ள வைக்கோல் கொள்வனவு நிலையக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணியில் சுமார் பத்து ஏக்கர் நிலப்பரப்பில் 33 மில்லியன் ரூபா செலவில் அமைந்துள்ளது.

எமது கரையோர பிரதேசங்களில் குறிப்பாக மருதமுனை, கல்முனை, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று போன்ற பிரதேசங்களின் இளைஞர்கள் ஏதோ ஒரு வகையில் விளையாட்டுத்துறையில் பிரகாசித்துக் கொண்டிருப்பதை நாம் அறிவோம். ஆனால் சம்மாந்துறைப் பிரதேசமும் அதனை அண்மித்த பகுதிகளும் விளையாட்டுத்துறை விருத்தியில் பின்னடைந்து காணப்படுவதால் அவர்களையும் மேற்கூறப்பட்ட பிரதேச இளைஞர்களின் ஒத்துழைப்புடன் முன்னேற்றவும், விருத்திசெய்யவும் இம்மைதான வசதி அமையப்பெறலாம் என்ற ஆர்வத்துடனும் இதனை சம்மாந்தறையில் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சம்மாந்துறையில் இதற்கான காணியானது சகல வசதிகளும் அடங்கியிருக்க வேண்டிய ஒரு இடத்தில் அமையப் பெறவேண்டும் என்பதற்காக, இதற்கு முதல் அமைச்சர்களாக, பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களால் எவ்வளவோ முயற்சித்தும் பெறமுடியாத கைத்தொழில் அமைச்சின் கீழ் வைக்கோல் கொள்வனவு நிலையத்திற்கு சொந்தமாக இருந்த இக்காணியில் இம் மைதானம் அமையப் பெறவேண்டும் என்ற அவாவுடன் அதனைப் பெற கைத்தொழில் அமைச்சருடன் வாதாடி அவர்களின் அனுமதியைப் பெற்று அதன் பின்னர் (PERC) எனும் பொருளாதார நிர்ணய சபையின் அங்கீகாரத்துடன் அமைச்சரவைக்கு பத்திரம் சமர்ப்பித்து அதன் அங்கீகாரம் பெறப்பட்டு கிழக்கு அபிவிருத்தி அமைச்சினூடாக வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இக்காணி 29 ஏக்கரும் அரசிடமிருந்து மிளப் பெற்று சம்மாந்துறை பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டன. அதிலிருந்து 10 ஏக்கர் நிலத்தினை இம்மைதானத்திற்கு குறுகிய காலத்தில் பெற்றமையானது எம் இளம் சிங்கமான கௌரவ அன்வர் இஸ்மாயில் அமைச்சர் அவர்களின் சாதனை என்பதை நாம் இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது சாலப் பொருத்த மாகும்.

தற்போது மக்கள் கூடுதலாக இடம்பெயர்ந்து சென்று கொண்டிருக் கின்ற பகுதியாகவும், சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோர பிரதேசங்களான மருதமுனை, சாய்ந்தமருது, நிந்தவூர் போன்ற பிரதேச மக்கள் இம்மைதானம் அமைக்கப்படும் பகுதியில் கூடுதலான காணிகளைப் பெற்று குடியிருக்கின்ற தாலும் இவற்றிற்கு அண்மையில் சம்மாந்துறை தொழில் நுடபக் கல்லூரியும் தென் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடமும், விவசாய ஆராய்ச்சி நிலையமும், நீர் சுத்திகரிப்பு நிலையமும் காணப்படுவதுடன் இயற்கை சூழலான மலையும் மலைசார்ந்த பிரதேசமும் நீர் நிலைகளும் உள்ள இடமாக காணப்படுகின்ற வைக்கோல் கொள்வனவு நிலைய பரந்த காணியில் வீதியோரத்தைக் கொண்ட 9 ஏக்கர் நிலத்தினை அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களினால் தெரிவுசெய்யப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியதாகும். மேலும் உண்மையில் இவ்விடம் இப்பிரதேசத்தின் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றுகூடுவதற்கு மிகப் பொருத்தமான இடமாகும். இந்த இடத்தை தெரிவுசெய்த வகையிலும் நாம் அமைச்சர் கௌரவ அன்வர் இஸ்மாயில் அவர்களைப் பாராட்ட வேண்டும்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட இடத்தில் அமைக்கப்படவுள்ள விளையாட்டரங்குகளில் உடற்பயிற்சி பகுதி, நீச்சல் தடாகம், கிழக்குமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணத்தில் எங்குமே காணப்படாத 400 மீற்றர் சுவட்டு மைதானம் 2000 க்கு மேற்பட்டோர் அமர்ந்திருக்கக்கூடிய பார்வையாளர் அரங்கு, கேட்போர் கூடம். சகல வசதிகளும் கொண்ட கடைத்தொகுதி, இரவுநேர போட்டிக்கான மின்னொளி வசதி, கால்பந்து, கிரிக்கட், டென்னிஸ், வலைப்பந்து, எல்லே, கபடி, மேசைப்பந்து, கரப்பந்து, மெய்வல்லுனர், விளையாட்டுக்கான மைதானங்கள், மற்றும் கலை, கலாசார பொழுதுபோக்கு நிலையம், போட்டியாளர்களினதும் நடவர்களினதும் ஓய்வு அறை போன்றவை பிரதான மையங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

இவை மாத்திரமன்றி இம்மைதானமானது சம்மாந்துறை மக்களுக்கு மாத்திரம் சொந்தமானதல்ல என்றும் தென்கிழக்கு கரையோரப்பிரதேசத்தில் அனைத்து மக்களுக்கும் உரியது என்பதும் எம் அமைச்சரின் உள் மனதின் ஆழமான வெளிப்பாடாகும்.

மேலும் இவை கரையோரப் பிரதேசமான சம்மாந்துறையில் அமைவதற்கு பல காரணிகள் சாதகமாக அமையப்பெற்றுள்ளது. அதாவது இம்மைதானத்திற்கு தேவையான உயர் மின்சார இணைப்பை பெறும் வசதி, மைதானத்திற்கு தேவையான பாதுகாப்பு, வாகனத்தரிப்பிட வசதிகள், அணைத்து பிரதேச மக்களும் இலகுவாக பிரயாணம் செய்யக்கூடிய பிரதான பாதை அமைப்பு, வைத்திய வசதி, தொழில்நுட்ப உதவியாளர் வசதி, கழிவுப்பொருட்களை அப்புறப்படுத்தும் வசதி, மைதானப்பராமரிப்புக்குத் தேவையான நீரைப் பெற்றுக் கொள்வதற்கு அண்மையில் ஓடுகின்ற நீர் வாய்க்கால் அமைப்பும், வருகின்ற போட்டியாளருக்கும், பார்வையாளருக்கும் தேவையான சுத்தமான குடிநீரை பெற்றுக் கொள்ளும் வசதி, மழைக்காலங்களில் மைதானத்தில் ஏற்படுகின்ற நீர்ப்பெருக்கை இலகுவாக வழிந்தோடச் செய்யக்கூடிய தரைத்தோற்ற அமைப்பு, போன்றவைகளை கொண்டதாக இப்பிரதேசம் காணப்படுவதால் அம்பாரை மாவட்டத்தில் குறிப்பாக கரையோரப் பிரதேசதங்களில் உள்ள சம்மாந்துறையில் இவை அமையப் பெறுவது சாலப் பொருத்தம் என இக் கரையோரப் பிரதேசதங்களில் உள்ள மாவட்ட விளையாட்டு அதிகாரி, மாவட்ட சம்மேள தலைவர்கள், உடற்கல்வி விரிவுரையாளர்கள், விளையாட்டு அதிகாரிகள், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள், கழகங்களின் தலைவர்கள், விளையாட்டுத்துறை பொறியளார்கள், வைத்தியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், விளையாட்டுத்துறையில் ஆர்வமுள்ளவர்கள் போன்றவர்களின் ஆலோசனைப்படி இது சம்மாந்துறைப் பிரதேசத்தில் அமைவதுதான் சிறந்தது என்ற கருத்து இக்கரையோர பிரதேச மக்களின் மேன்மையான மனப்பாங்கை வெளிக்காட்டுகிறது.

விளையாட்டு மட்டுமன்றி நவீன கடைத்தொகுதி, கலை கலாச்சார மேன்பாட்டுப்பயன் முதலானவையும் இந்நிலையத்தில் அமைய உள்ளது. எனவே ஜனாதிபதி கலாசார விளையாட்டு நிலையம் இப்பிரதேச மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாகும். இவ்வத்தனைக்கும் நாம் அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கு நன்றிகூற கடமைப்பட்டுள்ளோம். கடந்தகால அரசியல் தலைமைகள் சகல நிலையங்களையும் அம்பாரைக்கே கொண்டு செல்ல ஜனாதிபதி அவர்கள் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற சம்மாந்துறையில் இந்நிலையத்தை அமைக்க எடுத்த முடிவு பெருமைக்கு ரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத காவலன்

மத்திய வீதியில் சுருக்கு சிறுவாலுடன்
ஒரு சிறுவன் - சுற்றித்திரிந்த காலம்
மூன்று முன்னனிப் பாடசாலைகளிலும்
கலாசாலைகளிலும் கல்விதனைக் கற்ற காலம்
சமூக சேவைக்காய் சிறாத்தல் முஸ்தகீம்
இயக்கத்தில் இணைந்து
சீராக கடைந்தெடுத்த காலம் - அன்று
சின்னஞ்சிறுவனாய்
துடுக்கத்தனம் உள்ளவனாய் - உனைக்கண்டு நாம்
சிந்தித்த காலம்.

சமூகத்தின் சாவினையும் நோவினையும்
சர்வதேசத்துக்கு காட்டுவதற்கு
படச் சுருளுடன் பயனித்த காலம்
கொழும்பை நோக்கி - அங்கே
மல்வத்தையில் மாட்டிவிட்ட
கோடாரிக் காம்புகள் - கூக்கிரலிட்ட காலம்
மாமனிதனின் சமயோசித்ததால்
வெளியே வந்த காலம்
கரையோர மாவட்டமெல்லாம்
கலவரக் காலம் - சி.ல.மு.
காங்கிரஸ் காரவர்களை - துரத்திப் பிடித்து
கால்கை உடைத்து - உயிர் போக்கும் காலம்

ஒலி பெருக்கி பூட்டிய வாகனத்தில்
ஓநாய்கள் திரியும் காலம்
உரவர் எமைப்பார்த்து - ஒடுங்கடா
ஊரை விட்டு என்று செல்லும் காலம்
பையிலே பணம் இல்லாத காலம்
கையிலே காசி இல்லாத காலம்
நாம் - கொழும்பிலே வாழ்ந்த காலம்
காங்கிரஸ் என்ற காரணத்தால்
ஊரின் தனவந்தர்கள் - எங்களைக்
கண்டு ஓடி ஒளித்த காலம்

பல்கலைக் கழகத்திலே பட்டப்படிப்புக்காய்
அன்வர் கொழும்பிலே இருந்த காலம்
அன்வர் எனும் சிறுவன்
அடைக்கலம் கொடுத்த காலம்
பாமிஸ் தலைவரிடம் கூட்டிச் சென்று
பணம் வாங்கித் தந்த காலம்
பவ்வியமாக எங்களை - அன்வர்
பாதுகாத்த காலம்

மாமனிதர் அஷ்ரப்பின் மடியில்
வாழ்ந்த காலம் - அன்று
துறைமுக அமைச்சில் - நீ
கொடி கட்டிப் பறந்த காலம்
இவ்வூர் இளைஞர்களின் துயரம் தீர்க்க
துறைமுகத்தில் தொழில் கொடுத்த காலம்
நன்றி கெட்ட நாலைந்து பேர்
பிரிந்து நிற்கும் காலத்திலே
ஊர்த் தலைவர்கள் என்ற போர்வையில்
உணக்கெதிராய் உளரித் திரிந்த காலம்
உன் திறமை கண்டு உனக்குப் பின்னால் - சுவாட்டில்
தின்னைத் தோழர்கள் திரிந்து காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்ற உறுப்பினராய் - ஊரில்
பவணிவரும் காலத்திலே - நோய்க்கு
பாதுகாப்பு அமைச்சராய்
பணம் தந்து பாதுகாத்த காலம்
தொழில் அமைச்சராய்
தொழில் தந்து துயரம் தீர்த்த காலம்
உட்கட்ட பிரதி அமைச்சராய் - உன்
உயர்வைக் கானும் காலத்திலே
ஊரின் உண்மையான
அபிவிருத்தி கண்டோம்

ஊரின் முகப்பிலே உலமாக்களையும்
கலாச்சார விழுமியங்களையும்
உயர்த்திய காலம்
ஊரின் மத்தியிலே - இம் மண்ணை ஆண்ட
மாமன்னர்களால் முடியாத மார்க்கட்டை
நவீன சிந்தனை மூலம்
சீராக கட்டிய காலம்

கல்வித் தாகம் தீர்க்க
கலாசாலைக் கட்டிடங்களை
கட்டிய காலம் - இன்னும்
கல்விமான்களையும் துறைசார் நிபுணர்களையும்
கௌரவித்த காலம்

கல்குழிகளாக இருந்து
பல் உடைத்த வீதிகளை
காபட் வீதிகளாக மாற்றும் காலம்
பள்ளிவாசல்களின் முகப்புக்களை
மதினத்து முனவ்வறாவின் தோற்றத்தில்
அலங்கரித்த காலம்

இவ்வளவு அபிவிருத்திகளையும் - கண்ட
எதிர்கூட்டத்தினர் - வீதி ஓரத்தில்
விழி பிதுங்கி நிற்கும் காலம்
நூறாண்டு காலமாக - ஏழை விவசாயிகள்
ஆசுபத்திரிச் சேனை ஆனை விழுந்தான்
தொப்பியன் குடா - திராய் ஓடை
பொன்னன் வெளி - கொச்சிக்காய்லந்து
போன்ற பிரதேசங்களுக்கு - நீந்திச்சென்று
விவசாயம் செய்த காலம்
காலத்தால் அழியாத பாலத்தை கட்டி - ஏழை
விவசாயிகளின் துயரம் தீர்த்த காலம்

ஊர் அரசியல் வாதிகளெல்லாம் - உன்
திறமை கண்டு ஒதுங்கி நிற்கும் - காலத்திலே
மணல் மண்ணுக்கு மண்டியிட்டு நிண்ட
சில சில்லறைகள் இன்னும்
வெளியூர் அரசியல் வாதிகளுக்கு
வெடில் கொழுத்தும் காலம்

உணக்கு பின்னால் - உன் பெயரைக்
கெடுக்கும் - உதவாக் கரைகளை
இனம் கண்டு உதறித் தள்ளிவிட்டு
தன்னலம் கருதாமல் சம்மாந்துறைத் தாய்க்கு
தலை நிமிர்ந்து வாழ - உன் அபிவிருத்தி
தொடரும் காலம் உன் சேவை வளரும் காலம்

**கூட்டுறவாளன்**
**எம்.எல்.ஏ.மஜீட்.**
**சுவாட் அமைப்பு**
**சம்மாந்துறை**

**18.05.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்வர் இஸ்மாயிலின் காலமும் சம்மாந்துறையின் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி நகர்வுகளும்

-M.M.M. தௌபீக்
நீர்ப்பாசன அலுவலகம்,
சம்மாந்துறை

சம்மாந்துறையின் அபிவிருத்தி அமைச்சர் காலத்தில் சுகாதாரம், மின்சாரம், வீதி அபிவிருத்தி, பொது வசதிகள், தொழில் பயிற்சி நிலையம் முதலான பல்வேறு துறைகளையும் கொண்டதாக அமைந்துள்ளது. இவற்றை சுருக்கமாக நோக்குவது பயனுடையதாகும்.

**சுகாதார அபிவிருத்தி:**

சம்மாந்துறையில் நீண்ட வரலாறுள்ள வைத்தியசாலையின் வளர்ச்சியில் அனைத்துப்பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்குண்டு இருப்பினும் மிகச் சிறப்பான வைத்தியசாலையாக இன்னும் அபிவிருத்தி பெறாமை நமது மக்களின் துரதிஸ்டமே. 2001க்கு பிந்திய வரலாற்றிலே சம்மாந்துறை வைத்தியசாலையில் பல்வேறு விதமான அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடக்கிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2002ம் ஆண்டு இலங்கையின் சுகாதாரத்துறைக்கு பெரும்சவாலாக அமைந்த டெங்கு நோய் ஒழிப்பு விவகாரத்தில் சம்மாந்துறைக்கு ஒரு முக்கிய இடமுண்டு. முதன்முதலாக ஒருபாரளுமன்ற உறுப்பினர் மக்களை ஒன்று திரட்டி டெங்கு ஒழிப்பு போராட்டத்தினை சிரமதானம் மூலம் மேற்கொண்டு பாராளுமன்றக்குழுக்களின் கூட்டத்தில் பிரதம மந்திரியின் நன்றியையும் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வின் மூலம் சம்மாந்துறைப்பிரதேசத்தில் பரவிய டெங்கு நோய் கட்டுப்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தகது.

2002ம் ஆண்டு அஷ்ரப் ஞாபகார்த்த தினத்திலேயே மிகப்பெயர்பெற்ற இலவச வைத்திய முகாம் ஒன்று நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் ஆயிரக்கணக்கான நோயாளிகள் சிகிச்சைபெற்றதோடு ஊனமுற்றோர்க ளுக்கான முச்சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டன. கண்பார்வை அற்றோரு க்கான மூக்குக்கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. மேலும் இவ்வைத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமில் இரத்ததானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றமை குறிப்பி டத்தக்கது.

சம்மாந்துறை வைத்தியசாலையில் இடநெருக்கடியாக இருந்த சிறுவர் நோயாளர் விடுதிக்கு இன்னுமொரு புதிய சிறுவர் நோயாளர் விடுதி இருமாடிக்கட்டிடமாக நவீன அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அத்தோடு சகல நோயளர்களுக்குமான விடுதிகளும். நவீன அமைப்பில் ஒழுங்குபடுத்தப்படுகின்றது. எக்ஸ்றே கதிர்வீச்சுக்கூடம் , பற்சிகிச்சை முகாம் முதலானவற்றுக்கான உபகரணங்கள் தருவிக்கப்பட்டுள்ளன. எக்ஸ்றே பிரிவிற்கான தனிக்கட்டிடத்தொகுதி அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட சுகாதாரப்பணிப்பாளருக்கான பணிமனைக்கான தேவைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

நோயாளர் தேவைகளுக்காக மேலதிகமாக இன்னும் ஒரு அம்பியூலன்சும், மிக நீண்டகாலத்தேவையாக இருந்த ஜெனரேற்றர் தேவையும் கௌரவ அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் அயராத முயற்சியினால் நிறைவேற்றப்பட்டது.

மேலும் 48 படுக்கைகளைக்கொண்ட பிரசவ விடுதியும் தியேட்டரும், M.O.H. அலுவலகத்திற்கு தனியான அலுவலகமும் கட்டப்படவுள்ளது. சம்மாந்துறையின் கிராம மக்களின் வைத்தியத்தேவைகளை நிறைவு செய்யுமுகமாக சம்புமடு, நெயினாகாடு, கல்லரிச்சல் போன்ற பிரதேசங்களில் மத்திய மருந்தகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கிராமப்புற மக்களின் வைத்தியத்தேவைகளை நிறைவு செய்யுமுகமாக சுகாதார நிலையங்கள் உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது இவை அனைத்தும் அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களயின் தனிப்பட்ட முயற்சியினால் நிறைவேற்றப்பட்டவைகளாகும். உண்மையில் கடந்தகாலங்களை ஒப்பிடுகின்ற போது இப்போது சம்மாந்துறை வைத்தியசாலைக்கும், கிராமப்புறங்களுக்கும் கிடைக்கப்பெற்றுள்ள சுகாதார வசதிகள் குறிப்பிட்டு சொல்லக்கூடியனவே.

**மின்சார அபிவிருத்தி:**

**ச**ம்மாந்துறையின் பிரதான பகுதிகளுக்கு மின்சாரம் மிக நீண்ட காலமாக வழங்கப்பட்டிருந்தாலும் விடுபட்ட பல பகுதிகள் தொடர்ச்சியாக விடுபட்ட பகுதிகளாகவே இருக்கின்றன. இந்த சூழ்நிலையில்தான் குறிப்பிட்ட பகுதிகளைக் கவனத்திற்கொண்டு திட்டமிட்டு மின் அபிவிருத்தி வாரங்கள் மூலமும் அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றார். இந்தவகையில் 2003 ம் ஆண்டு மின்சார வசதியற்று இருந்த நெயினாகாட்டுப் பிரதேசமும், 40 வீட்டுத் திட்டமும் நமது வரலாற்றில் 8.7 மில்லியன் ரூபா செலவில் மின்சாரத்தைப் பெற்றது முக்கிய அம்சமாகும். இதேபோன்று மின்சாரம் அருகில் இருந்தும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைப் பெறுவதிலே கூடிய பணத்தினை செலவிட வேண்டிய மக்களுக்கு இன்னும் மிக அருகிலே மின்சாரத்தைக் கொண்டு செல்கின்ற வசதியை 4.9 மில்லியன் ரூபா செலவிலே அமைச்சர் கௌரவ அன்வர் இஸ்மாயில் அவர்கள் மேற்கொண்டார். இந்த வகையில் சம்மாந்துறை பெண்கள் அரபுக் கல்லூரி வீதி 1.9 கி.மீ தூரம், செந்நெல் கிராம குழியடி வீதி, கல்லரிச்சல் பகுதியின் பல்வேறு வீதிகள், கைகாட்டி தென்னம்பிள்ளைக் கிராமம், மலையடி 3ம் வீதி, இறக்காமம் மையவாடி வீதி, வரிப்பத்தாஞ்சேனை குறுக்கு வீதி, மத்திய முகாம் மையவாடி வீதி போன்ற வீதிகள் முற்றாக மின்சார வசதிகள் வழங்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

இதேபோன்று 1.7 மில்லியன் ரூபா செலவிலே சமீட்புர குறுக்கு வீதி, உடையார் லேன், குச்சர் மையதீன் வீதி, வீசி வீதிக்கு முன் வீதி, மல் - 13, விச வைத்தியர், காட்டுப்பள்ளி குளியையடி குறுக்கு வீதிகள், மையவாடி முறத்தியர், சம்புமடு, மடு வீதிகளுக்குமான மின்சார வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. ஹிஜ்ராபுரம் கிராமம் 4.5 மில்லியன் ரூபா செலவிலும் மல்கம்பிட்டி குடியேற்றக் கிராமத்திற்கான மின்சார வசதியும் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல 6.5 மில்லியன் ருபா செலவில் சம்மாந்துறையின் உள்ளக வீதிகளும் இறக்காமம் நாவிதென்வெளி, வரிப்பத்தாஞ்செனை உள்ளக வீதிகளும் மின்சார வசதிகளைப் பெற்றுள்ளன. சம்மாந்துறையில் மின்சார வசதி வழங்கப்படாது இருந்த பிரதேசங்கள் அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் கவனத்திற் கொள்ளப்பட்டு 99 வீதமான பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இன்ஷா அல்லாஹ் இன்று அல்லாஹ் வின் உதவியினால் மின்சார விளக்கு எரியாத வீதிகளே இல்லை என்ற நிலமை உருவாகும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

(நன்றி: எல்.ரீ.ரஸீட், இலங்கை மின்சார சபை சம்மாந்துறை)

**வீதி அபிவிருத்தி:**

சம்மாந்துறையின் சகலவிதமான அபிவிருத்திகளையும் சமகாலத்தில் முன்னெடுக்கும் அமைச்சர் கௌரவ அன்வர் இஸ்மாயில் அவர்கள் பல்வேறு வீதிப் புனருத்தாரண அபிவிருத்தி வேலைகளை நடைமுறைப்படுத்துவதற்கான நிதியினை உருவாக்கியுள்ளார். இந்தவகையில் சம்மாந்துறையின் பிரதான வீதி நெல்லுப்பிடிச்சந்தியிலிருந்து வங்களாவடி பிரதான சந்தி வரையும் மல்கம்பிட்டி நெயினாகாட்டுக்கான பிரதான வீதி 200 மீற்றர் இரு வழிப் பாதையாகவும் அதி உத்தம ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் விசேட பணிப்புரையின் கீழ் திருத்தியமைக்கப்படவுள்ளது. இதேபோல அலிவன்னியர் வீதி, தைக்காப்பள்ளி மூங்கிலடி வீதி பிலாவடி வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளன.

இதேபோல சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட மல்வத்தை பாடசாலை வீதி, மல்கம்பிட்டி வீதி முலதலானவற்றுக்கான வடிகால் வசதிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட சில வீதிகளுக்கான மேம்பால வடிகால் வசதிகளும் இறக்காம பிரதேச செயலகத்திற்குட்பட்ட பள்ளிவாசல் வீதியும், மஜீட்புர வீதிக்கான மேம்பாலமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்படவுள்ளன. மேலும் இறக்காமப் பிரதேசத்திலே வரிப்பத்தாஞ்சேனை உள்வீதிகளும், வாழைக்காலை வீதிகளும் நிர்மாணிக்கப்படவுள்ளன. மேலும் அப்பிரதேசத்தின் மத்திய வீதி, இளைஞர் வீதி, எஸ்.பி வீதிக்கான வடிகால் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவ்வனைத்துக்குக்கு மான நிதி ஏலவே ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பல வீதிகள் புனரமைப்பதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சம்மாந்துறையின் பழைய மார்க்கட் வீதி, மத்திய வீதி, பிலாவடி வீதி, தைக்காப்பள்ளி வீதி, அறபா வித்தியாலய வீதி, ஷியா சந்தியிலிருந்து வீரமுனை வரையான வீதி கோரக்கோயில், வைக்கொள் கொள்வனவு நிலையத்திலிருந்து கைகாட்டி சந்தியின் பிரதான பண்ட் வீதி வரை கல்லரிச்சல் வீதி வேலைகள் முதலானவை ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபா செலவில் எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதில் பெரும்பாலான வேலைகள் பூர்த்திசெய்யப்படும் தறுவாயில் உள்ளன. இதன் மூலம் நமது விவசாயிகளுக்கு பயங்கரவாத, ஹர்த்தால் காலங்களில் பயணம் செய்வதற்கு பொருத்தமான வகையில் தூரநோக்குடன் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொதுவசதிகள், நகர அபிவிருத்தி:

சம்மாந்துறையின் பொது வசதிகளையும் வசதிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்ற அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களுடைய நீண்டகால கனவு நிறைவேறி வரும் காலமாக இக்காலத்தை கருத வேண்டும். இந்தவகையில் சம்மாந்துறையினுடைய ஹிஜ்றா சந்தை நிர்மாணம் குறிப்பிடத்தக்க ஒரு பணியாகும். அதற்கு முன்னால் அச்சந்தியின் முகப்புறத் தோற்றம் பூந்தோட்டத்தால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அது சில அரசியல் காரணங்களினால் சிதைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதுபோல நெல்லுப்பிடிச் சந்தியில் மாலை நேர பொழுது போக்குச் சதுக்கம் 4.7 மில்லியன் ரூபா செலவிலே ஏற்படுத்தப்படவுள்ளன. இதற்கான அடிப்படை வேலைகள் நடைபெற்றுள்ளன. நெல்லுப்பிடிச் சந்தியில் இலங்கையில் எங்கும் இல்லாத வகையில் நவீன முறையில் அழகுபடுத்தப்பட்ட அலங்கார நுழைவாயிலொன்று பூர்த்திசெய்யப்படும் தறுவாயில் உள்ளது. இந் நுழைவாயில் 5 மில்லியன் ரூபா செலவிலே 3 வழிப்பாதைகள் கொண்டதாக அமையவுள்ளது. வங்களாவடிச் சந்தியிலும் நுழைவாயிலொன்று பூர்த்திசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தேசிய நீர் வழங்கல் அதிகார சபையின் ஆதரவுடன் இறக்காமத்தில் கலாச்சார மண்டபம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இதற்கு கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரதி அமைச்சராக இருந்தபோது 3 மில்லியன் ரூபாக்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் கல்லரிச்சல் பிரதேசத்திற்கான நூலகம் 1.5 மில்லியன் ரூபா செலவிலே அமைக்கப்பட்டமை கிராமரீதியான சனசமூக அபிவிருத்தி வரலாற்றில் முக்கியமான அம்சமாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொழிற்பயிற்சி நிலையம்:**

சம்மாந்துறையில் அதிநவீன தொழில்நுட்ப, தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று அமையவுள்ளது. இது தொடர்பாக தொழில்பயிற்சி அதிகார சபையின் அம்பாரை மாவட்ட உதவிப்பணிப்பாளர் அல்-ஹாஜ் எம்.ரீ.எச். சஹீட் அவர்கள் அமெரிக்க USAID சர்வதேச நிறுவணத்தின் மூலம் இதற்கான நிதி உதவியை பெற முயன்றும் இதற்கான காணியை தேடுவதில் மிகப்பிரச்சினையாக இருந்தது. இறுதியாக இந்நிலையம் சம்மாந்துறையில் அமைய வேண்டும் என முடிவெடுத்த நீர்ப்பாசன அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் உடனடியாக அதற்கான காணியை ஒதுக்கி குறிப்பிட்ட நிலையத்திற்கான காணியை ஒதுக்கியுள்ளார். இந்நிலையத்தில் மிகப்பிரதானமான இரு இடங்களில் ஒன்று மாண்புமிகு அமைச்சர் பியசேன கமகே அவர்களது தொகுதியலும் மற்றது மான்புமிகு அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் தொகுதியிலும் அமையவுள்ளது. இவை நமது மண்ணுக்கு பெருமை தரும் செயலாகும்.

சம்மாந்துறை ஜனாதிபதி கலாசார விளையாட்டு நிலையத்திற்கு அருகாமையில் சுமார் 200 கோடி ரூபாய் செலவில் இயற்கை சூழலுக்கு உகந்தான தெற்காசியாவின் முதவாவது கீறின் கட்டிடத் தொகுதியாக நிர்மாணிக்கப்படவுள்ளது. இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் அன்மையில் அம்பாறை அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடைபெற்றது.

கட்டிட வேலைகள் ஒரு வருடகாலத்திற்குள் முடிவடையவுள்ளது. இத்தொழிற் பயிற்சி நிலையத்தில் ஏற்றுமதி ஆடை உற்பத்தி பயிற்சி நெறி, நவீன தகவல் தொழில் நுட்ப பயிற்சி நெறி, இயந்திரவியல் தொழில்நுட்பம் மற்றும் படித்த இளைஞர். யுவதிகளின் வேலைவாய்ப்புக்களை அதிகரிக்க செய்வதற்கான திறன் வலுவூட்டல் பயிற்சி நெறிகள் அமையவிருப்பது இந்நிலையத்தின் பிரதானமான நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாக்குழு

01. தலைவர் : அல்-ஹாஜ் மௌலவி ACAM. புஹாரி

02. உப – தலைவர் : M.A. சபூர்த்தம்பி (அதிபர்)

03. செயலாளர் : A.L. சத்தார் (B. Sc.)

04. இணைச் செயலாளர் : அல்-ஹாஜ் A.M. இல்யாஸ் (G.S)

05. பொருளாளர் : அல்-ஹாஜ் Z.A. பஷீர்

06. : அல்-ஹாஜ் A.L.M. யாசீன்
07. : அல்-ஹாஜ் மௌலவி M.I.A. காதர் ஹஸரத்
08. அல்-ஹாஜ் A.M.M. சஹீட் (அதிபர்)
09. அல்-ஹாஜ் H.M. பாறூக் (அதிபர்)
10. அல்-ஹாஜ் M.H. அசீஸ் மீடீன் (A.D.E)
11. ஜனாப் M.C.A. றகீம் (பொது முகாமையாளர்)
12. அல்-ஹாஜ் Y. கபூர் (D.O)
13. அல்-ஹாஜ் A.L. அசனார் (D.O)
14. அல்-ஹாஜ் M. உமர்லெவ்வை (வ.வி)
15. ஜனாப் A.L.M. நபீல் (வ.வி)
16. ஜனாப் A. றபீக் (வ.வி)
17. அல்-ஹாஜ் M.M. ஆமீது லெவ்வை (Rd. Pr.)
18. அல்-ஹாஜ் S.H.M. றாசிக் (Rd. Pr.)
19. ஜனாப் I.L.A. மஜீட் (MPS)
20. ஜனாப் M.B.M. முஸ்தபா (MPS)
21. ஜனாப் A.K. றகுமான் (MPS)
22. ஜனாப் M.L.M. மஜீட் (J.P.), (SK, MPCS)
23. ஜனாப் M.A.M. றமீஸ் அப்துல்லா (Snr. Lec.)
24. ஜனாப் A.M. றஹீம் (O.I.C.), (CTB)
25. ஜனாப் L.T.A. றஷீட்
26. ஜனாப் S. கோஸ் முஹம்மட்
27. ஜனாப் M.H.M.ஹில்மி (T.O)
28. ஜனாப் M.T. றஹீம் (Tr.)
29. ஜனாப் U.L.A. றஷீட்
30. ஜனாப் A. ஆமீது லெவ்வை (வ.வி)
31. ஜனாப் A.R.M. அஷ்றப் (B.A)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழாக்குழு
## இணைப்பாளர்கள்

1. அல்-ஹாஜ் U.L. பஷீர் (B.A)
2. ஜனாப் M.L.A. அமீர் (T.A)
3. ஜனாப் M.M.A. காதர் (B.Sc.)
4. ஜனாப் Y.B. சலீம்
5. ஜனாப் A. ஹாதீம் அலி
6. அல்-ஹாஜ் S.L.M. தௌபீக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி சொல்கின்றோம்!

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்
அல்ஹம்துலில்லாஹ்! எமது சம்மாந்துறை மண் ஈன்றெடுத்த தவப் புதல்வன் மாண்புமிகு அமைச்சர் அன்வர் இஸ்மாயில் எமது ஊரின் முன்னேற்றத்திற்காக இரவுபகல் பாராது அயராது உழைத்துக் கொண்டிருக்கின்றார். அந்தப் பெருமகனை வாழ்த்தி கௌரவிக்க வேண்டியது எமது ஊரைச் சேர்ந்த ஒவ்வொருவரினதும் கடமை என்பதை உணர்ந்த நம்பிக்கையாளர் சபை, மஜ்லிஸ் அஷ்ஷுறா, உலமா சபை , சமூக சேவை நிறுவனங்கள் ஒண்றி னைந்து இம் முயற்சியில் ஈடுபட்டனர். அந்தப் பணியில் நாம் இன்று வெற்றி பெற்றிருப்பதை காண்கின்ற போது என் மனம் புளகாங்கிதம் அடைகிறது. அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும்.

இந்த வெற்றிக்கு மிகவும் காரணமானவர்கள் இந்த விழாவின் ஏற்பாட்டுக் குழுவினர்கள். ஆரம்பம் முதல் சகல வேலைகளையும் அவர்களே பொறுப்பெடுத்து கட்ச்சிதமாக செய்து முடித்திருக்கி றார்கள். பாடசாலை அதிபர்,ஆசிரியர்கள்,மாணவர்கள் தமக்கு முடியுமான பங்களிப்பை வழங்கி இருக்கிறார்கள். சம்மாந்துறையில் உள்ள நிறுவனங்கள் சமூக சேவைகள் அமைப்புகள் அனைத்துமே போதிய ஒத்துழைப்பை வழங்கியமையே இவ்விழா வெற்றிகரமாக நிறைவேறுவதற்கு காரணமாகும் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

அமைச்சரின் இணைப்பாளர்கள் ஒவ்வொருவரும் பூரண ஒத்துழைப்பை வழங்கினார்கள். ஆதரவாளர்கள் தொண்டர்கள் பலர் நிதியுதவி அளித்தும் சரீர உதவி புரிந்தும் ஆதரவு நல்கினர் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித் துக்கொள்கின்றோம்.

எங்களது அன்பான அழைப்பை ஏற்று குறுகிய காலத்திற்குள் மலருக்கான ஆசிச் செய்திகளை வழங்கிய அதி உத்தம ஜனாதிபதி, மாண்புமிகு பிரதம மந்திரி, அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊர்த் தலைவர்கள், கல்வி மான்கள் ஆகியோருக்கு நன்றிதெரிவிப்பதோடு, உரிய நேரத்திற்கு சிரமம்பாராது கட்டுரைகளை வழங்கிய கட்டுரையாளர்கள், அமைச்சரை வாழ்த்தி கவிதைகள் யாத்த கவிஞர்கள் அனைவருக்கும் அல்லாஹ் நற்கூலி வழங்குவானாக. ஜஸாகல்லாஹு கைரன்.

இப்பாரிய நிகழ்வை ஒழுங்கு செய்வதில் பலரும் கடுமையாக உழைத்திருக்கி றார்கள். அவர்கள் அனைவருக்கும் மிகுந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு இவ்வாறான நிகழ்வை ஊர் மக்களாகிய நாங்கள் ஒழுங்கு செய்து நடாத்துவதற்கு தனது பூரணமான ஒத்துழைப்பையும் ஆசீர்வாதத்தையும் வழங்கிய மாண்புமிகு நீர்ப்பாசன அமைச்சர் சட்டத்தரணி அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கும் ஆழ்ந்த நன்றிகள்!

எஸ்.எல். முகம்மட்தம்பி (சத்தார்)
தலைமைக்காரியாலய சமுர்த்தி முகாமையாளர்,
பிரதேச செயலகம், சம்மாந்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாந்துறைச் சமூகம் , சம்மாந்துறை
18. 05. 2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Design & Print at: | Mycreation Advertising | 077-3113989 |